# சீதா

வெள்ளி விழா
எழுத்தாளர்
சொக்கன்

உள்ளத்தை
தொடும்
உணர்ச்சி
மிக்க
உன்னத
சமூக நாவல்



வீரகேசரி
பிரசுரம்

V. Sivaligam
Aluna Group.
KanDapola

MRS. C. Kuga
Erlalai South.
Chunnakam.

EEI
... ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

NEW ... HINDU HOTEL
No. 12 Model ...
NUWARA-ELIYA
News Agent & Book Seller

MRS. C. Kuganagarajah
Erlalai South
Chunnakam

வீரகேசரி பிரசுரம்: 25

# சீதா

VINAYAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

"சொக்கன்"

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# "SEETHA"

by

K. Sokkalingam

*FIRST EDITION*

OCTOBER 1974

*COPY RIGHTS*

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM **25**

**PRICE Rs. 3/40**

Published by

VIRAKESARI
P.O. Box 160, COLOMBO.

Sole Distributors:
EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஆசிரியர் கூறுவது.....

வயற்காடு என்ற கிராமத்தில் இரண்டு வீடுகளில் நிகழும் சில நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு, ஒரு வார கால இடைவெளியிலே நடந்து முடியும் ஒரு கதைதான் ''சீதா'' சாதிவிட்டு வேறு சாதியிலே விவாகம் செய்வதனுலும், ஆலயங்களையும், தேநீர்க்கடைகளையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடுவதனுலும், சம்பந்திப் போசனத்தாலும், சாதிப் பிரிவினைக்கு சாவுமணி அடித்து விட முடியுமா? என்ற பிரச்சினையின் பகைப் புலத்திலே இக் கதை வளர்ந்து செல்கிறது. இக் கதையினூடாக அதி மனிதர், சாதாரண மனிதர், கீழ்மனிதராகிய மூன்று ரக மானவர்களையும் நீங்கள் காணலாம். சுவைப்பதற்கு மட்டும் உரிய கதையல்ல ''சீதா.'' சிந்திப்பதற்கும், உணர்வதற்கும், செயல் உந்தல் பெறுவதற்கும் இது உகந்த கதை...... மேலே படியுங்கள்.

சொக்கன்.

---


அடுத்த வீரகேசரி பிரசுரம்:

''மனக்கோலம்'' ஆசிரியர்

டாக்டர் ஏபிரகாம் கோவூரின்

டையரியிலிருந்து.........!

## ''கோர இரவுகள்''

உங்கள் நாளங்களை சில்லிடவைக்கும்

விசித்திர அனுபவங்கள்......!

# பதிப்புரை

நாவலாசிரியர் சொக்கனின் இருபத்தைந்தாண்டு இலக்கிய பணியைக் கௌரவிக்குமுகமாக அண்மையில் தான் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. அன்னாரின் நாவல் ஒன்று வீரகேசரிப் பிரசுர வரிசையில் இருபத்தைந் தாவது பிரசுரமாக வெளிவருவதும் மிகவும் பொருத்த மானதே! ஓர் எழுத்தாளரின் வாழ்க்கையிலே இருபத் தைந்து ஆண்டு இலக்கியப் பணி எவ்வளவு பாராட்டத் தக்கதோ, அதே போல்தான் இந்நாட்டில் ஒரு பிரசுரிப் பாளரின் தரத்தில் இருபத்தைந்து நூல்களை வெற்றிகர மாகப் பிரசுரித்து வீறுநடை போடுவது ஒரு சாதனை என்றே கொள்ளலாம்.

இன்றைய ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் பாக்கிய சாலிகளே! முன்னெப்பொழுதுமில்லாத முறையில் இவர் களின் ஆக்க முயற்சிகளுக்கு உருவம் கொடுக்க ஸ்தாபன ரீதியான ஓர் அமைப்பு இருப்பது இந்நாட்டின் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல் என்று கூறலாம். நாம் துணி வுடன் ஆரம்பித்து வைத்த இச்சிறுபணி, வருங்காலத்தில் மேலும் விருத்திபெறும் என்ற நம்பிக்கையுடன் இச்சமூக நாவலை, வாசகர்களின் கரங்களில் வைக்கின்றோம்.

20-11-74. பதிப்பாசிரியர்.

# "சீதா"

## 1.

அது ஒரு விசாலமான நுழைவாயில். அதன் இரு பக்கத் தூண்களிலும் மொந்தன் வாழைகள் குலைகளோடு கட்டப்பட்டிருக்கின்றன. அவை இரண்டையும் இணைத்த கயிற்றிலே அந்த வீட்டுக்குரியவரான செல்வரத்தினத்தினதும், அவர் மகள் சீதாவினதும் துவண்டு, தொய்ந்துபோன நெஞ்சங்களைப்போலத் தோரணங்கள் தூங்குகின்றன.

வெம்மை கனிந்த மத்தியானச் சூரியனின் கதிர்கள் வாயிலுக்கு வட மூலையிலே நின்ற வேப்பமரத்தினூடாக ஒளித் துண்டுகளாய் விழுகின்றன. பாதி நிழலும் பாதி வெயிலுமான அந்த இடத்தில், தென்னோலையின்மீது குந்திக்கொண்டு பறை அடிப்பவர் அவ்வப்போது ஒவ்வொரு தடவையும் புதியவர்கள் துக்கம் விசாரிக்க வீட்டினுள் நுழையும்போது தமது திறமையைக் காட்டுகின்றனர்.

பறையின் ஒவ்வொரு அடியும் செல்வரத்தினத்தின் நெஞ்சிலே விழுகின்றது; சீதாவின் அனாதைத் தனத்திலே விழுகின்றது. அந்த இரண்டு சீவன்களும் நெக்குருகி நெடுமூச்செறிந்து குமைகின்றன.

மற்றவர்கள்...? சந்தைக் கூட்டம்! ஒப்புக்கு வந்து ஒப்
பாரி வைக்கும் கும்பல்! செல்வரத்தினத்தையும், சீதாவை
யும் உள்ளத்தால் வெறுத்து, உதட்டால் விரும்புபவர்கள்.
அவர்கள் கிடைத்த இடத்திலே சாவகாசமாக அமர்ந்
திருந்து வம்பளந்துகொண்டிருக்கிறார்கள். அதோ...செல்வ
ரத்தினத்தின் மைத்துனர் சரவணையர், வலது காலை
மடக்கி இடக்காலின்மீது பத்மாசனவாக்கில் போட்டபடி
அந்த வம்பளப்பிற்குத் தலைமை தாங்குகிறார். கிண்டலுக்
கும், குத்தலுக்கும் பெயர்பெற்ற அவரின் வார்த்தைகளை
அவ்வப்போது இரசித்ததற்கு அறிகுறியாக அவர் இருக்
கும் இடத்திலிருந்து சிரிப்பும் ஆரவாரமும் எழுகின்றன.

உள்ளே முற்றத்தில் போடப்பட்ட பந்தலின் கீழே
செல்வரத்தினத்தின் மனைவி சிவபாக்கியத்தின் சடலம்
கிடத்தப்பட்டிருக்கிறது. அதைச் சூழவரப் பெண்கள் கூட்
டம்; புதிதாகப் பெண்கள் வரும்போது அவர்களைக் கட்
டிப் பிடித்து, எப்பொழுதோ இறந்துபோன தங்கள் உற்
றார் உறவினரை நினைத்தவர்களாய் அழகாக ஒப்பாரி
வைக்கிறார்கள்; அழுவது போல அருமையாய் நடிக்கிறார்
கள்; மூக்கைச் சிந்துகிறார்கள். அடுத்த நிமிடமே இந்த
வேடத்தைக் களைந்துவிட்டு 'சளசள' என்று பேசுவதும்,
வெற்றிலை பாக்கைக் குதப்பிப் பந்தல் தூணிலே துப்புவது
மாய் இருக்கிறார்கள்.

இந்தக் கும்பலிடையே ஒருத்தி மாத்திரம், ''அம்மா!
அம்மா! என் அம்மா!'' என்று நெஞ்சைப் பிய்த்துப்
பிடுங்கி—உயிரை உதட்டிலே நிறுத்திக் கதறுகிறாள். அவ
ளுடைய தொண்டை கட்டிவிட்டது; கண்கள் வற்றிவிட்
டன. என்றாலும் ஒலி காற்றாகவாவது வெளிவரத் துடிக்
கின்றது. நெஞ்சை இடித்துப் புரண்டுகொண்டு, கண்ணைக்
கிறீச் செந்நீரையாவது கொண்டுவர முயல்கிறது.

அவளால் தாங்கவே கூடவில்லை. தனது தாயோடு
ஒரு சகாப்தமே முடிந்துவிட்டதுபோல அவள் உணர்
...ள். இருபத்திரண்டு வயதைத் தாண்டி இருபத்துமூன்

ருவது வயதில் அடியெடுத்து வைக்கும் நிலையிலே கூட தன்னைக் குழந்தையாக்கிச் சீராட்டிய நடமாடும் கோயிலை அவளால் எப்படி மறக்க முடியும்?

அவளின் அழுகைக்கு முடிவேயில்லை.

★

வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருக்கின்றன. சிலர் பந்தலை மெழுகிக் கோலம் போடுகிறார்கள். சரவணையரும் அவரின் சகலன் சுப்பரும் தங்கள் இடங்களிலே இருந்து எழுந்துவந்து கிரியைகளை நடாத்துவதற்குக் குருக்களுக்கு உதவி புரிகிறார்கள். கும்பச் செம்புகளுக்கு நூல் சுற்றுதல், நிறைகுடம் வைத்தல், கோடி மில் துணியை அளவளவாகத் தேவைக்கேற்றபடி கிழித்து வைத்தல் முதலான வேலைகளை அநுபவக் கைவண்ணத்தோடு லாவகமாகச் செய்கின்றனர். ஒரு பக்கத்தில் கூலிக்குத் தேவாரம் படிக்க வந்தவர்கள், பாயிலே அமர்ந்திருந்து தமக்கேயுரிய பாணியில் தப்பும், தவறுமாகத் தேவார இருவாசகங்களையும், பட்டினத்தார் பாடலையும் ஒரு கை பார்க்கிறார்கள்.

குருக்கள் சவத்தைக் குளிப்பாட்டத் தேவையான அபிஷேகத்திரவியங்களை ஆயத்தம் செய்ததும், சவம் குளிப்பாட்ட எடுத்துச்செல்லப்படுகிறது. சீதாவை கைத்தாங்கலாக, குளிப்பாட்டும் இடத்திற்குச்சில பெண்கள் அழைத்துச்செல்கிறார்கள். செல்வரத்தினம் சவரம் செய்து தோய்ந்து, புது மில் துணியை அரையிலே சுற்றிக்கொண்டு திருநீறு பூசி, சவமாயிருக்கும் தனது சகதர்மிணிக்கு அபிஷேகம் செய்கிறார். அடுத்து சீதா, பின் உற்றார் உறவினர் என்று பலரும் மாறி சிவபாக்கியத்திற்கு எண்ணெய் அரப்பு வைக்கிறார்கள். ஒருவாறு குளிப்பாட்டலும் முடிகிறது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் மணப்பெண்ணாய்ச் சிவபாக்கியம் அணிந்த கூறை, சட்டை அணிவித்து, நகைகளாலும் பூமாலையாலும் அலங்கரித்து, திருநீறுபூசி, முன்

களக்குங்குமம் நெற்றியிலிட்டு, சவப்பெட்டியிலே தூக்கி வைத்து நாலு பெண்கள் சவத்தை சுமந்து வந்து, குருக்களின் முன்னாலிருந்த கட்டிலிலே கிடத்துகிறார்கள்.

குருக்கள் மணியைக் குலுக்கியபடி மந்திரங்களை ஓதத் தொடங்குகிறார். பறை நிற்கிறது. கசமுசக்குரல்கள் ஒடுங்குகின்றன. மௌனக்கொப்பளம் சோகச்சிறை உள்ளே தேக்கி, வெளியில் மினுமினுக்கிறது.

சவத்தின் தலைமாட்டிலே, குத்துவிளக்கிலே சுடர்கள் வெளியேறித் தள்ளாடுகின்றன.

ஆரம்ப கிரியைகள் முடிவுற்றதும், செல்வரத்தினம் உரலிலிட்டிருந்த உலக்கையைப் பற்றிய வண்ணம் உடல் நடுங்க, உளம் சோர்ந்து நிற்கிறார்.

கர்ப்பூரம் எரிகிறது; சாம்பிராணி புகைகிறது; ஊதுவர்த்தி புகைந்து சுழல்கிறது. தேவாரம், திருவாசகம், புராணம் யாவும் சொல்லியாயிற்று. இனித் திருப்பொற் சுண்ணம். அதன் ஒவ்வொரு பாடலையும் படித்து முடிய, குருக்கள் தீபம் காட்டும் பொழுது, செல்வரத்தினம் உலக்கையைத் தூக்கி ஒரு முறை உரலில் குற்றல் வேண்டும்.

திடீரென்று செல்வரத்தினத்தின் சகலமும் ஒடுங்கிப் போகின்றன. உலக்கை பாரம் நிறைந்த உருளையாகிவிட்டதுபோல அவர் உணர்கிறார்,

தொண்டைக்குள்ளே வீக்கித்துக் கண்களுக்குள்ளே இரத்தம் சுண்டிப்போய், நெஞ்சுக்குள்ளே விறைத்த நிலையில் அவர் சில கணங்களை மென்று விழுங்குகிறார்.

காலம் பின்னோக்கிச் செல்கிறது. இளமையை உடலிலும், கனவுகளை நெஞ்சிலும், கற்பை உயிரிலும் ஏந்திக் கொண்டு சிவபாக்கியம் என்ற குமரி செல்வரத்தினத்தோடு மலாயாவுக்கு கப்பல் ஏறுகிறாள். அங்கே அவரின் புயல்வாழ்விலே அகப்பட்டுச் சிதறிப் பூவிழந்த கொடியாக, பேரிளம் பெண்ணாகிக் கண்ணீரிலே காவியம் எழுதினாள். இன்று சலனங்களற்ற நீண்ட நித்திரையிலே

நரை திரையோடு கிழவியாகப் பூவும் மஞ்சளுமாய் நீண்டு கிடக்கிருள்.

செல்வரத்தினத்தின் நெஞ்சு ஓலமிடுகின்றது. கைகள் பக்கத்தில் நின்றவரால் இயக்கப்படுகின்றன. நினைவு 'ஆச்சி பூச்சி' ஆடிச் சுழல்கிறது.

★

''என்னை விட்டுப் போறீங்களா? அம்மா! அம்மா!'' சீதா கேற்றைக் கடந்து செல்லும் தாயின் பாடையை நோக்கி ஓலமிடுகிருள். பறைச் சத்தம் பிச காது, தாளக் கட்டோடு முழங்குகிறது.

தமது காலைக் கட்டிக்கொண்டு அழும் மகளைப்பலவந்த மாக விலக்கியபடி அவளின் நெஞ்சுப் பாரத்தையும் தம் முள்ளே ஏற்றபடி செல்வரத்தினம் கொள்ளிக் குடத் தோடு தள்ளாடித் தள்ளாடிப் பாதையின் முன்னுல் நடக்கிருர்.

சிறிது வேளையில் பறையொலி நிற்கிறது. ''நமச்சிவாய வாழ்க, நாதன்ருள் வாழ்க'' என்று சிவபுராணம் தொடங்குகிறது. பின் அதுவும் கரைந்து மறைகிறது.

சீதாவின் கண்ணிலிருந்து பாடை மறைந்து சந்தியிலே திரும்புகிறது.

இன்னும் சில மணித்தியாலங்களில் சாம்பரோடு சாம்பராய், காற்ருேடு காற்ருய்க் கலந்துவிடப் போகிறது, சீதா தாய் என்று நம்பியிருந்த சடலம்...! ''ஐயோ! அம்மா!''

## 2.

இரவு ஒன்பது மணி. எல்லாம் முடிந்துவிட்டன. பந் தலிலே அங்கொருவர் இங்கொருவராகச் சிலர் அரைத் தூக்கத்தில் இருக்கின்றனர். விருந்தையிலே ஒரு கட்டிலி[ல்] செல்வரத்தினம் படுத்திருக்கிருர்.

பந்தலிலே தூங்கிக் கொண்டிருக்கும் பெற்றோமாக்ஸ் விளக்கு இருந்திருந்து 'கிஸ்' என்று இரைகிறது. அதைச் சுற்றி வந்து காமக் கிறக்கத்திலே ஈசல்கள் தற்கொலை புரிந்து கொள்கின்றன. விளக்கின் ஒளி தெறித்து விழுகிற சுவரிலே வால் அறுந்த பல்லி ஒன்று தன் இரையை நோக்கிப் பதுங்குகிறது.

தமது வாழ்க்கையையும், விதிப் பல்லி இரையாக்க எண்ணிப் பதுங்குவதாக அவர் நினைத்துக் கொள்கிறார். பெருமூச்சு நெஞ்சைப் பிளக்கிறது. மனம் முப்பது ஆண்டுகள் பின்னோக்கித் தாவுகிறது.

அப்பொழுது அவர் இளைஞர். கல்கத்தாவிலிருந்து பட்டதாரியாகத் தம் சொந்த ஊரான வயற்காட்டிற்குத் திரும்பியிருந்தார். இந்திய தேசிய காங்கிரசும், வங்காள மக்களின் தேசிய உணர்வும், மகாத்மா காந்தியின் ஹரிஜனத் தொண்டும், அவரின் நாடிகளிலும், நாளங்களிலும் புத்துணர்ச்சியை ஏற்றிக்கொண்டிருந்த வேளை அது.

ஆங்கில இலக்கிய ரசனையும், இயல்பாகவே உணர்ச்சி கொந்தளிக்கும் சுபாவமும் கொண்ட செல்வரத்தினம் தமது எதிர்காலம் பற்றிய மோகனக் கனவுகளையும் தம்மோடு இறக்குமதி செய்திருந்தார்.

'ஏதாவது புதிதாகச் செய்யவேண்டும்' என்று அவரின் உள்மனம் துடித்தபடியே இருந்தது. தாகூர், சரச்சந்திரர் போன்றோரின் கதாபாத்திரங்களையே அவர் தமது இலட்சிய புருஷர்களாய்க் கொண்டிருந்தார்.

அந்தக் காலத்திலே அவர் வாழ்ந்த கிராமம் பழைமையிலே ஊறித் திளைத்திருந்தது. சாதித் திமிர் கொடிகட்டிப் பறந்த நேரம்.

செல்வரத்தினம் தமது செயல்மூலம் சாதித் திமிருக்கு சாவுமணி அடிக்க எண்ணினார். கீழ்சாதி எனக் கருதப்படும் பெண் ஒருத்தியை விவாகம் செய்வது, தமது ஊரிலே செய்யத்தக்க மாபெரும் புரட்சி என்று அவர் உறுதியாக நம்[illegible]ர்.

செல்வரத்தினத்தின் தந்தை சிதம்பரப்பிள்ளை. அவர் உயர்சாதி வேளாளர். அவருக்கு யாரும் இலட்சியமில்லை. கீழ்சாதியார் எவராவது அவரை எங்கே கண்டாலும் தோளில் உள்ள சால்வையை எடுத்து, 'கமக்காரன் வர' என்று அடக்கமாக ஒடுக்கமாக விலகிநின்று மரியாதை பண்ண வேண்டும். தவறினால் என்ன நடக்குமோ சொல்ல முடியாது.

அவர், தம் ஏகபுத்திரனுக்கு இருமரபுந்தூய வேளாள வகுப்பிலே கொழுத்த சீதனத்தோடு பெண்தேடியதில் வியப்பில்லை. ஆனால், எதையும் தட்டிக்கழித்து வந்த செல்வரத்தினத்தை வழிக்குக் கொண்டுவருவதுதான் இயலாததாய் இருந்தது.

செல்வரத்தினம் கடைசியிலே தமது இலட்சியத்திற்கு ஏற்ற ஒரு சோடியைத் தேடிக்கொண்டு, சிதம்பரப்பிள்ளை யின் தலையிலே பெரியதொரு கல்லைப் போட்டார். தாங்க முடியாத தலையிறக்கத்தோடு சிதம்பரப்பிள்ளை கோபக் கிராந்தராய்க் குமுறியபொழுது, செல்வரத்தினம் அசாதாரணமான துணிவையும், பொறுமையையும் கடைப்பிடித்ததை நினைத்தால் இப்பொழுதுகூட ஆச்சரிய மாகத்தான் இருக்கிறது.

"தம்பி! எனக்கு முகத்தில் கரி பூசாதே. சிவபாக்கியம் எங்கள் வீட்டில் தொழும்பு செய்யும் கீழ்சாதியனின் மகள். வேண்டுமானால் அவளை வைப்பாக வைத்திரு. ஆனால். முறையாக நல்ல மரபிலே கலியாணம் செய்து கொள்" என்று சிதம்பரப்பிள்ளை நயந்தார்.

"அப்பு! பல நூறு வருஷங்களாக மிருகத்தனமாக ஒரு பகுதியாரை அடக்கி வைத்திருந்தோம். இனியும் அப் படிச் செய்யக்கூடாது. எங்கள் வருங்கால சந்ததியாவது உயர்வடைய நாங்கள் வழி செய்தல் வேண்டும். காந் தியை மகாத்மா என்று போற்றுகிறீர்கள். அவர் யாழ்ப் பாணம் வந்தபோது அவரது பாததூளியைச் சிரத்தில் தரித்தீர்கள். ஆனால், அவரின் போதனைகளைக் காற்றிலே

பறக்கவிடுகிறீர்களே! இதைத்தான் என்னால் விளங்க முடியவில்லை. எனக்கு நா ஒன்றுதான். நான் செய்யும் முடிவும் ஒன்றுதான். சிவபாக்கியத்தைத்தான் நான் மணக்கப் போகிறேன்'' என்று செல்வரத்தினம் தீர்மானமாகச் சொன்னபோது, அவரின் தகப்பனார் கோபத்தில் தம்மையே மறந்துபோனார்.

அதன்பின் நடந்தவை சில வார்த்தைகளுக்கு அடங்கிவிடும். சிதம்பரப்பிள்ளை தம் மகனைத் துறந்துவிட்டார். ''இவன் என் மகனுமல்ல. நான் இவனுக்குத் தகப்பனுமல்ல. இன்றோடு எல்லா உறவும் தொலைந்தது. இவனுக்குக் கொள்ளி வைத்து இதோ குடமும் உடைக்கிறேன்'' என்று தம் வீட்டுக்கு முன்னாலேயே புதுப் பானை ஒன்றை உடைத்து, தமது சொல்லைச் செயலாக்கிக் காட்டினார் அந்தப் பொல்லாத கிழவர். சரவணையர், சுப்பர் போன்ற மகான்கள் சிவபாக்கியத்திற்கும் அவளின் பெற்றோருக்கும் இறுதிசூழ முனைந்ததாகவும் கேள்வி.

செல்வரத்தினத்தால் எதிர்ப்பைச் சமாளிக்க முடியவில்லை. 'பழமை என்பது மண்ணாங்கட்டியல்ல. அது ஒரு மலைப்பாறை என்பதை அவர் அப்போதுதான் உணர்ந்தார். அதனை உடைக்கும் வல்லமை தமது சீர்திருத்தம் என்ற கடப்பாறைக்கு இல்லையே என்று அவர் வருந்தினார்.

ஆனாலும், வழக்கமான கதைபோல அவர் கதையும் முடிந்துவிடவில்லை. உயர்ந்த அந்தஸ்திலுள்ள வாலிபர்கள் செய்வதைப் போலத் தம் காதலியைத் துறந்து வேறொருத்தியை அவர் கைப்பிடிக்கவில்லை. பதிலாகத் தமது தாயகத்தையே துறந்து, சிவபாக்கியத்துடன் மலாயாவிற்குப் புறப்பட்டார்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கப்பல் மலாயா நோக்கிப் புறப்பட்டபொழுது சிவபாக்கியம் சொன்ன வார்த்தைகள், அந்த வேளையிலே செல்வரத்தினத்தின் நினைவில் வருகின்றன. ''எனக்காக நீங்கள் ஊரையும்

உற்றுரையும் மறந்து புறப்பட்டுவிட்டீர்கள். நானே உங்களுக்காக எதையும் தியாகம் செய்யவில்லை. ஆனால், ஒருநாள் வரும். அன்று நீங்கள் என்னிடம் எதிர்பார்ப்பது எனது உயிரிலும் மேலானதாக இருந்தாலும் அதை என் மனப்பூர்வமாக உங்களுக்குத் தருவேன்.''

செல்வரத்தினத்தின் நினைவு தடைப்படுகிறது. கண்கள் உடைப்பெடுக்கின்றன. அவர் புரண்டு படுக்கிறார்.

*

வானத்தில் திரளும் மேகங்கள் எத்தனை எத்தனையோ? ஆனால் அத்தனையும் மழைபெய்து மண்ணைச் செழிக்க வைத்துவிடுவதில்லை. பெரும்பாலானவை காற்றிலே சிதறிப் போக ஒருசிலதாம் எஞ்சி நின்று பயன் தருகின்றன. இளைஞர்களின் இதயவானத்திலே திரள்கின்ற இலட்சிய மேகங்களுக்கும் இந்தக் கதிதான். ஒன்றிரண்டு மழைபொழிய மற்றவை கலைந்துதான் போய்விடுகின்றன.

செல்வரத்தினத்தின் வாழ்க்கையிலும் அப்படித்தான் நடந்தது. அவர் மிக விரைவிலேயே தமது இலட்சியங்களை கைநெகிழவிட்டார்.

நல்ல உத்தியோகம் கிடைத்தது. கை நிறையப் பணம் வந்தது. காந்தியமும், உன்னத இலட்சியங்களும் வர் வாழ்விலே பழங்கதைகளாவதற்குக் கேட்கவா வேண்டும்? இலக்கிய ஞானமும், கலைத்தாகமும், ஆசைக் கனவுகளும் குமுறி ஆர்ப்பரித்த அவளின் எதிர்ப்புகளை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் சிவபாக்கியத்திற்கு இல்லாத நிலையில் அவளை அவர் மிகக் குரூரமாகப் பழிவாங்கத் தொடங்கினார். தெய்வ நிலைக்கு மேலேறியவர், மனித நிலைக்குவந்து படிப்படியாக மிருக நிலைக்குத் தள்ளப்பட்டார். மதுவைச் சுவைத்தவர், மதுவைக் குடித்து, மதுவை மாந்தி, மதுவால் குடிக்கப்படும் நிலைக்கு ஆளானார்.

உத்தியோகம் முடிந்து வீடு திரும்பினால் ஏதாவது ஒரு பொருளுக்குத் தலைவலி எடுக்கும். கோப்பை, நாற்

காலி, பாத்திரங்கள் என்ற பேதம் அவருக்கு இல்லை. அவை தரையை முத்தமிட்டதும் உண்டு. சிவபாக்கியத்தின் உடலைப் பதம்பார்த்ததும் உண்டு.

சிவபாக்கியம் இந்த வேளைகளில் அனுங்குவதுகூட இல்லை. பாதாதிகேசம் உடைந்து உதிரம் ஓடினாலும் அவள் அமைதிகாக்கத் தவறியதேயில்லை.

''நீ கீழ்சாதிக்காரி. படிப்பா, பழக்கவழக்கமா ஒரு மண்ணும் இல்லை! உன்னைக் கலியாணம் செய்து நான் கண்ட பயன் என்ன? உன்னாலை நான் பிறந்த மண்ணையும் பெற்றோரையும், உற்றாரையும் இழந்துவிட்டேன்'' என்று செல்வரத்தினம் அவள் நெஞ்சிலே வேலேற்றுவார். கண்ணுக்குள்ளே கண்ணீரைத் தடுத்துநிறுத்தி, சிவபாக்கியம் ''ஆம்! அது உண்மைதான்'' என்பாள்.

செல்வரத்தினத்தின் கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல அவர் ஒரு நாள் மலாய்ப் பெண் ஒருத்தியை வீட்டிற்குக் கூட்டிவந்தார். ''ஏய்! இவள் உன் சக்களத்தி'' என்றார்.

சிவபாக்கியம் மறுபேச்சுப் பேசவில்லை. புன் முறுவலோடு அந்தப் பெண்ணை வரவேற்றாள். அன்றிலிருந்து அவளுக்கும் பாதசேவை செய்யத்தொடங்கினாள்.

''நான் முஸ்லிமாகப் போகிறேன். உன்னுடைய சைவம் எல்லாவற்றையும் மூட்டை கட்டிவிட்டு எனக்கு மாட்டிறைச்சி காய்ச்சித் தரவேண்டும்'' என்று ஒரு நாள் அவர் சிவபாக்கியத்தை வம்புக்கிழுத்தார். முருகன்படத்திற்கு முன்னால் கற்பூரம் கொளுத்திக் கும்பிட்டவள், குங்குமத்தை எடுத்து நெற்றியிலே தரித்தபடி, ''ஆம்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தது மறக்கமுடியாத சம்பவம். அடுத்த நாள் சாப்பாட்டு மேசையிலே மாட்டிறைச்சிக்கறி இருந்தது.

சிவபாக்கியம் தன்னுள்ளே அழுகிறாள் என்பது அவருக்குத் தெரியாதா? தனக்கு மனமே இல்லாத கறியை

ருஷிப்பது போலப் பாவனை செய்து, சிவபாக்கியத்தை வருத்தி மகிழ்ந்தார் அவர்.

மலாய்ப் பெண் கர்ப்பவதியானாள். சிவபாக்கியமும் கருத்தரித்தாள். மலாய்ப் பெண் இரண்டுமாதம் முன் பாகவும், சிவபாக்கியம்பின்பாகவும் கருத்தரித்தது செல்வ ரத்தினத்திற்கு வாய்ப்பாய்விட்டது. சிவபாக்கியம் இரைக்க இரைக்க ஓடி ஆடி மலாய்ப் பெண்ணின் பிரச வத்தைப் பார்த்தாள். அதுகூட செல்வரத்தினத்திற்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. அவளை அந்த வேளை யிலும் தமது சொல்லாலும், செயலாலும் அவர் வருத் தத் தவறவில்லை.

கடவுள் செயலோ என்னவோ? பிரசவத்தில் மலாய்ப் பெண் இறந்தாள். சிவபாக்கியம் தப்பிப் பிழைத்தாள். குழந்தைகளிலும் ஒன்றுதான் தப்பிப் பிழைத்தது.

மகள் பிறந்தாள். செல்வரத்தினத்தின் முரட்டு வாழ்க்கையிலும் சிறிது மாற்றம் ஏற்படத்தொடங்கியது. மகளுக்கு சீதா என்று பெயரிட்டு அவளிலே தம் உயி ரையே வைத்தார்.

என்றாலும் சிவபாக்கியத்தின் வாழ்க்கையில் நிம் மதியே இல்லை. ''இதோ பார், அவளோடு (மலாய்ப் பெண்ணோடு) எனது வாழ்வே போய்விட்டது. உன்னை அவளின் ஸ்தானத்தில் என்னால் நினைக்கவே கூடவில்லை. நீயும், நானும் கணவனும், மனைவியுமாக இனி வாழ முடி யாது. வேண்டுமானால் நீ உன் ஊரோடு போய்விடு. உன்னைத் தொட்டுத் தாலி கட்டிய குற்றத்திற்குப் பிரா யச்சித்தமாக மாதாமாதம் பணம் அனுப்பிவிடுகிறேன்'' என்று செல்வரத்தினம், சிவபாக்கியத்தின் நாடியைப் பிடித்துப் பார்த்தார்.

சிவபாக்கியம் அப்பொழுதுதான் முதன்முதலாகத் தன் கணவர் முன்னால் கண்ணீர் விட்டாள். ''நீங்கள் எதைக்கேட்டாலும் நான் செய்யவேண்டியவள். ஆனால், உங்களைப் பிரிந்து போகமட்டும் சொல்லாதீர்கள். உங்கள் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு உங்கள் கண்ணை வே

படாமல் ஒரு மூலையில் இருக்க அனுமதியுங்கள்'' என்று கூறி தமது காலடியிலே விழுந்த சிவபாக்கியம்விட்ட கண்ணீர் மாலை செல்வரத்தினத்தின் இதயத்திலும் விழத்தான் செய்தது.

ஆனாலும், தமது மனநெகிழ்ச்சியை வெளிக்காட்ட விரும்பாதவராய் அவர் அந்த இடத்திலிருந்து எழுந்து போய்விட்டார்.

இந்த இரவு வேளையிலே பழைய நினைவுகளெல்லாம் வந்து அவரைச் சித்திரவதை செய்தபொழுது......

படுக்கையிலே குப்புறக் கிடந்துகொண்டு செல்வரத்தினம் தமது விம்மல் பொருமல்களை எவ்வளவோ அடக்க முயன்றும் கூடவில்லை.

★

''ஐயா!''

செல்வரத்தினம் திடுக்குற்றுப் படுக்கையில் இருந்து எழுகின்றார்.

''அழுது என்ன பிரயோசனம்? உள்ளுக்கு வாருங்கோ ஐயா.''

செல்வரத்தினம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மகளின் பின்னால் உள்ளே செல்கிறார்.

மங்கிய மேசை விளக்கு டீப்போயில் எரிந்துகொண்டிருக்கிறது. பக்கத்திலே தனது பயங்கர நிழலை விளக்கிலே வீழ்த்தியபடி விஸ்கிப் போத்தலும், கிளாஸும் வைக்கப்பட்டிருக்கின்றன.

''ஐயா! நானே இதைச் செய்ய நேர்ந்தமைக்காக மன்னியுங்கள். அம்மா இதை வழக்கமாக உங்கள்சேவை போல நினைத்துச் செய்து வந்தா. அவ இல்லாதபொழுது நான்...''

''சீதா!''

''உங்கள் உடல் நிலை எனக்குத் தெரியும். இது இல்லாவிட்டால் உங்களுக்கு நித்திரை வராது என்பதும்

தெரியும். உங்கள் வேதனையைக் கண்டு சகிக்காமல்தான் அலுமாரியிலிருந்து இவற்றை எடுத்துவைத்தேன்.''

செல்வரத்தினம் விம்மிவிம்மிக் குழந்தை போல அழுகிறார். தமது பலவீனத்தை நினைத்து அநாதரவான நிலையில் அவர் துடித்துத் துடித்து அழுகிறார்.

சீதா திகைத்து நிற்கிறாள்.

செல்வரத்தினம் விஸ்கிப் போத்தலையும், கிளாஸையும் எடுத்து யன்னலூடாக எறிந்துவிட்டு வெளியே வருகிறார். அவை கல்லில்பட்டு நொருங்கும் சப்தம் கேட்கிறது.

## 3.

பிரமஸ்ரீ பாலநாகேந்திர ஐயர் தமது பழைய மொடல், 'றலி' சைக்கிளிலே ஆரோகணித்து வயற்காட்டுச் சந்தியிலே திரும்பி வருகிறார். மணியைத் தவிர மற்றப்பகுதியெல்லாம் சப்தம் போடுகிற துவிச்சக்கர வண்டி அது. அதிலே ஓடி வருவதே ஒரு சாதனை.

ஐயர் பறங்கிப் பூசினிபோலச் சிவப்பு. அந்திச் செக்கரின் மஞ்சள் அவரின் முன் பக்கம் வழித்த மண்டையிலே பொன்முலாம் பூசுகிறது. வெள்ளைவெளேரென்று தும்பைப் பூப்போல நரைத்திருந்த மயிரைச் சேர்த்துப் பிடரிப் பக்கத்திலே கொட்டைப்பாக்கின் அளவிலே முடிந்திருக்கிறார். இடத்தோளிலே காலத்தின் சுவடும் அழுக்குப் படிந்த பூணூலை மறைத்தும் மறைக்காமலும் காற்றிலே ஆடுகின்ற செட்டைத் துண்டு அரையிலே விரற்கடை அகலமான சிவப்புக் கரையிட்ட வேட்டி ஒன்றைச் சோமனாகக் கட்டி, அதன்மேல் அதே ரகச் சால்வையை வரிந்துகட்டியிருக்கிறார். அந்த அரை மடிப்புக்

குள் பச்சை நிறத் திருநீற்றுப் பை ஒன்று எட்டிப் பார்க்கிறது. அதனுள்ளே திருநீற்றோடு திருநீறாய், சிரார்த்தத்திலே கிடைத்த ஒரு ரூபா ஆறு சதம் கனக்கிறது. "உம்! காலம் மாறிவிட்டது. பிராமணனை மதித்ததெல்லாம் கனவாகிவிட்டது. முன்பு ஒரு வருஷத்தில் நான்கோ, ஐந்தோ சிரார்த்தம் செய்தால் போதும். வருஷம் முழுவதும் குந்தியிருந்து சாப்பிடலாம். இப்பொழுதோ மக்களின் மனங்களைப் போலவே தானமும், தட்சணையும் குறைந்துவிட்டன."

ஐயரின் சைக்கிள் ஆமை வேகத்தில் ஊர்கிறது. கரியரிலே கட்டிய அரிசி மூடை அங்கும், இங்கும் ஆட அதனால் தளம்பிய கைப்பிடியை ஒரு கையாலும், கரியரில் கட்டிய துணிப் பொதியை ஒரு கையாலும் பிடித்துக் கொண்டு பெடலை ஊன்றி உதைக்கிறார். ஆனால் அவரது வாகனம் தென்னாலிராமனின் குதிரைக்குத் தான் ஒன்றும் சளைத்ததல்ல என்று சவால் விடுகிறது. மணித்தியாலம் மூன்றுமைல் வேகத்தில் சைக்கிள் என்ற அந்த ஊர்தி செல்கிறது.

ஐயர் நன்கு பட்டுக் களைத்த சீவன். முதல் தாரத்தின் மூலம் நான்கு பிள்ளைகளையும், இரண்டாவது தாரத்தின் மூலம் ஐந்து பிள்ளைகளையும் பெற்று, நிலையான வறுமையோடும், பிணிமூப்புக்களோடும் போராடிப் போராடி பழக்கமாகி மரத்துப் போனவர் அவர்.

அவருக்கும் ஒரு கோயில் இருக்கிறது. கல்லாய்ப்போய் விட்ட அம்மனுக்கு, ஒரு காலத்தில் பஞ்சாராத்தியாய் இருந்து இப்பொழுது இரண்டு தீபக்கால்கள் உடைந்து போன திரியாராத்தியால் நாள்தோறும் தீபங்காட்ட அவர் தவறுவதில்லை. அம்மனும் அவரின் பஞ்சத்திற்கு ஏற்பத் தன்னை அட்ஜஸ்ட் பண்ணிக்கொண்டிருக்கிறாள். கர்ப்பூரத்திற்குப் பதில் தேங்காய் நெய்ச்சேலையை வைத்து ஐயர் எரிக்கின்றாரே என்றாவது அத்திபூத்தாற் போலத்

தான் தனக்குச் சர்க்கரைப் பொங்கல் கிடைக்கிறது என்ருவது அவன் முணுமுணுத்தது கிடையாது.

பாவம்! ஐயர்தாம் என்ன செய்வார். மாதம் முப்பது ரூபாச் சம்பளத்தில் அம்மனுக்கு இதற்குமேல் என்ன தான் செய்யலாம்?

அவரும் வஞ்சகம் இல்லாமல்தான் உழைக்கிருர். கொடியேற்றத் திருவிழா நடைபெறும் கோயில்களுக்குச் சாத்துப்படிகாரராகவும், எடுபிடி ஆளாகவும், பரிசாரகராகவும் வருடத்தில் நான்கு மாதங்கள் அவர் போவதுண்டு.

இருந்தும் என்ன? கோயில் நிர்வாகிகளுக்கு இவரைப் போன்றவரின் கஷ்டங்கள் எங்கே தெரிகின்றன? ஆயிரம் குடம் தண்ணீர் கொண்டு அபிஷேகம் செய்வதையாவது மடப்பள்ளிப் புகையினுள்ளே வெந்து கருகுவதையாவது இடுப்பு விறைக்க இருந்து சாத்துப்படி செய்வதையாவது அவர்கள் யோசிக்கிருர்களா? சதிருக்கும், மேளத்திற்கும் வாணத்திற்கும் அள்ளிஅள்ளிக் கொடுப்பார்கள். ஆனுல் ஐயர்மாருக்கோ ஐந்து பத்தென்று கொடுத்தாலே அதிகம் என்று முணுமுணுப்பார்கள். "சீ! கூலிப்பிழைப்பிலும் கேடுகெட்ட பிழைப்பு" என்று வெறுத்தவராய், அவர் காறித் துப்பியது, காற்றுவாக்கிலே திருப்பி வந்து அவர் நெஞ்சிலேயே படுகிறது. வெறுப்பின் வேகத்திலே அவர் அதைக் கவனிக்கவில்லை.

"என் பிள்ளைகளுக்கு இந்தக் கேடுகெட்ட பிழைப்பை ஒருக்காலும் சொல்லிக்கொடுக்கமாட்டேன். எப்படியோ என் மூத்த மகன் ஆத்மநாதன் நாலு எழுத்தைப் படித்துக் கிளறிக்கலும் பாஸ்பண்ணிக் கொழும்பிலே உத்தியோகம் பார்க்கிருன் இந்த ஆண்டு கிளாஸ் ருவும் பாஸ் பண்ணிவிடுவேனென்று எழுதியிருக்கிருன். என்னவோ அவன் மாதாமாதம் அனுப்புகிற எழுபத்தைந்து ரூபாவிலே தாம் நம் பிழைப்பே நடக்கிறது."

ஆத்மநாதனை நினைத்துக்கொண்ட பொழுது அவருக்குப் பெருமை பிடிபடவில்லை. ''ஆகா! என்னமாதிரி வளர்ந்து விட்டான். கொத்தி இழுக்கிற நாசியும், வண்டு விழிகளும் அகன்றுயர்ந்த நெற்றியும், அலையாய் நெளியும் கரு மயிரும் செக்கச் சிவந்த மேனியுமாய் விளங்கும் தன் மகனை நினைத்துக்கொண்ட பொழுது, அவரது தந்தையுள்ளம் தாயுள்ளமாய் மாறிக் கனிகிறது.

அவன் முதன் முதல் பின் குடுமியை வெட்டிக் குறுப் வைத்துக்கொண்ட பொழுது, தாம் வைதிக மனோபாவத்தால் அவனை அடித்துத் திட்டியதை நினைக்க இப்பொழுது கூட லஜ்ஜையாக இருக்கிறது அவருக்கு.

''பாவம்! இளம் பிள்ளை, காலம் மாறுவதை அவன் உணர்வது போல என்னால் உணரக் கூடவில்லை'' என்று அவர் நினைக்கிறார். காலமாற்றத்தை நினைத்ததும் அவருக்குச் சிரிப்பு வருகிறது. ''பூமி சுற்றுவது போலவும், காற்று வீசுவது போலவும் மாற்றங்களும் கண்ணுக்குப் புலனாகாமல் நடந்துகொண்டேயிருக்கின்றன'' என்று அவர் நினைத்துக்கொள்கிறார். ஆத்மநாதனைப் பற்றிய நினைவின் குளுகுளுப்பில் அவர் சைக்கிளைச் சிறிது விரைவாக செலுத்துகிறார். சந்தித் திருப்பத்திலே திருப்பியபொழுது சரவணையர் அவரை, ''நில்லுங்காணும் ஐயர்'' என்று மறித்தபொழுது அவருடைய முகம் சுண்டிப் போகிறது. ஐயர் தயங்கித் தயங்கிச் சைக்கிளிலிருந்து இறங்குகிறார்.

சரவணையரின் எண்சாண் உடம்பும், ஒரு கைப்பிடி இருதயமும் நஞ்சின் வார்ப்படங்கள் என்பது ஐயருக்கு நன்கு தெரியும். இந்த ஆள் மறிப்பது ஒன்றும் நன்மைக் கல்லஎன்று உள்மனம் சால்ல, அதனால் இருதயம்டக்டக் என்று அடிக்க வாய்க்குப் பதில் முகபாவத்தால் கேள்வி கேட்கிறார் ஐயர்.

''என்ன ஐயர் உங்கள் மகன் கொழும்பால் எப்போ வந்தவர்?'' சரவணையர் கேள்வியைத் தொடுக்கிறார்.

ஐயருக்கு வியப்பாக இருக்கிறது. ''சென்ற கிழமை தானே இரண்டுநாள் லீவில் நின்று கொழும்பு திரும்பி ஞன். இப்பொழுது அவசரமாக வர என்ன வந்துவிட்டது'' அவருக்கு விளங்கவில்லை. பதில் சொல்லவும் தோன்றவில்லை.

ஐயரின் முகபாவத்திலிருந்து அவருக்கு ஆத்மநாதன் வந்தது இன்னமும் தெரியாது என்பதைச் சரவணையர் புரிந்துகொள்கிருர். ''ஓ! உமக்குத் தெரியாமல் திடீர் என்று வந்திருக்கிருர். வருகிறவழியில் செல்வரத்தினம் வீட்டில் அவரைக் கண்டேன். என்னமோ! செல்வரத்தினம் வீட்டுத் தொடர்பு உமது மகனுக்கு நல்லதில்லை, அவன் மகள் சீதா கோவிச்சிக்குப் பிறந்தவள். கோவிச்சி ஒருத்தியின் சாவீட்டுக்கு ஐயர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்தாரென்ருல் அது உமக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் தலையிறக்கம். ஏதோ யோசித்து நடந்தால் நல்லது.''

சரவணையர் நடையைக் கட்டுகிருர்.

சரவணையரின் வார்த்தைக்குள்ளே பொதிந்திருந்த குறும்பை ஐயர் புரிந்து கொள்கிருர்.

உலகமே சுழல்கிறது. அவர் முன்ஞல்....!

## 4.

ஆத்மநாதன் செல்வரத்தினத்தின் வீட்டுப் படியில் கால் வைத்த பொழுது உட்புற ஹோலில் நாற்காலி ஒன்றில் அமர்ந்த வண்ணம் சீதா சிந்தனையில் ஆழ்ந்திருக்கிருள். அவன் காலடியோசைகூட அவளுக்குக் கேட்டதாய் தெரியவில்லை.

''சீதா!''

சீதா திடுக்குற்று திரும்புகிறாள். நாற்காலியிலிருந்து எழுந்த போது சோகமும் அவளுடன் சேர்ந்து எழுந்து விழிகளிலே நிலை குத்தி நிற்க அவள் விம்முகிறாள். ஆத்மநாதனின் கண்களும் கலங்குகின்றன. அவன் பெருமூச்சோடு உள்ளே வந்து நாற்காலியில் அமர்கிறான். அவனது கலக்கத்திலே காணப்பட்ட எல்லையற்ற அனுதாபம் சீதாவை மேலும் அழ வைக்கிறது. அவள் விம்மி விம்மி அழுகிறாள்.

அந்த அழுகையிலே அவளின் மனப்பாரம் குறைகிறது. அநாதைத்தனம் அமிழ்ந்திப்போய் மறைந்துவிடுகிறது. தங்கள் குடும்பத்திலே உண்மையான அன்புகொண்ட ஒரு சீவனுவது இருக்கிறது. அது தந்தியைக் கண்டதும் புறப்பட்டு ஒருநாள் பிந்தி வந்திருக்கிறது. தன் தாய்க்காக அதுவும் கண் கலங்குகிறது என்று நினைக்க, அந்தத் துன்பச் சூழ்நிலையிலும் சீதாவுக்குச் சிறிது ஆறுதல் ஏற்படுகிறது.

''நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்று அழுகையின் முடிந்த எல்லையிலே சீதா சொல்கிறாள்.

''அது எப்படி உறுதியாகச் சொல்லுவாய்? அலுவலகத்திலே ஏகப்பட்ட வேலைகள். கடைசி நிமிடம்வரை புறப்படுவது நிச்சயமாக இருக்கவில்லை'' என்று ஆத்மநாதன் பதிலிறுக்கிறான்.

''நினைவுதான் முக்கியம். நினைவு உறுதியாக இருந்தால் முடிவு சாதகமாகவே இருக்கும்'' என்று எப்பொழுதோ ஆத்மநாதன் சொன்னதை அவள் திருப்பிக் கூறுகிறாள்.

'நினைவு என்பது யார் நினைவை? சீதா தனது நினைவைச் சொல்கிறாளா? அல்லது என் நினைவைப்பற்றிச் சொல்கிறாளா? முதலில் சொன்னதானல் சீதா நான் வரவேண்டுமென்று உறுதியாக நினைத்திருக்க வேண்டும். இரண்டாவதானல் நானே கட்டாயம் இங்கு வரவேண்டுமென்று நினைத்திருக்க வேண்டும். எது உண்மை?' என்று ஆத்மநாதன் சிந்திக்கிறான்.

''இந்த இரண்டு நினைவுகளுமே உண்மையானல்...'' ஆத்மநாதனின் உள்ளத்தில் இனம்புரியாத கிளுகிளுப்பு ஏற்படுகிறது. அதேசமயம் அச்சமும் பிறக்கிறது.

''உண்மையில் நீங்கள் வந்தது எனக்குப் பெரிய அமைதியாக இருக்கிறது. நான் என் தாயை இழந்துவிட்டேன். ஆனல், என்னைப் பொறுத்தவரையில் உலகில் அன்பு முற்றுக வரண்டுவிடவில்லை. இதற்கு உங்கள் வருகையே சாட்சி'' என்று சீதா வார்த்தைகளை உதிர்த்த போது அந்த உண்மையின் ஒளியில் ஆத்மநாதன் கூசிப் போகிருன்.

''சீதா! அலுவலக வேலைகள் என்று நான் சொன்ன பொய்க்காக என்னை மன்னித்துவிடு. ஐயா அடித்த தந்தி கிடைத்ததும் உடனே பறந்துவந்து உங்கள் துக்கத்தில் நானும் ஒருவனய்க் கலந்துகொள்ள வேண்டுமென்று என் மனம் துடித்தது. உன் அம்மாவின் அன்பை, உன் பாசத்தை, ஐயாவின் பற்றை என்னல் எவ்விதம் மறந்து விட முடியும்? ஆனல்...''

''... ... ... ... ...''

''எனது வருகை ஊராரின் வாயைக் கிளறிவிடும். உன்னையும் என்னையும்பற்றி வேண்டாத கதைகளையெல்லாம் கட்டிவிடுவார்கள் என்று நான் பயந்தேன். உடனடியாக நான் புறப்பட்டு வராதது இந்தப் பயத்திஞலே தான்'' என்ருன்.

''ஊருக்கும் உலகுக்கும் நீங்கள் பயப்படுகிறீர்களா?'' என்று சீதா கேட்டபொழுது, தாங்கமுடியாத அடி ஒன்று தன்மீது விழுந்த உணர்ச்சியை ஆத்மநாதன் அடைகிருன். அவனின் தலை குனிகிறது. உடல் தன்னை அறியாமலே நடுங்குகின்றது.

ஆத்மநாதன் நாலு எழுத்துப் படித்து உத்தியோகம் பார்க்கும் ஒரு சாமானியன் மட்டுமல்ல. அவன் ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளன். சமூகப் பிரச்சினைகளைத் துணிவாக எடுத்துச் சொல்பவனென்றும், கண்மூடிப் பழக்கங்

களை ஈவு இரக்கமின்றிச் சாடுபவனென்றும் பெயரெடுத் திருந்தவன். அவஞ இப்படிப் பயப்பிடுகிருன்? அவன் சொல்லும் வார்த்தைகளா இவை? வெட்கத்தில் ஆத்ம நாதன் கூனிக் குறுகிப் போகிருன்.

''சீதாவின் 'ஓட்டோகிரு'பில் தான் எழுதியவை, அந்த வேளையில் அவன் நினைவில் வருகின்றன.

''உனது கைகள் வலிமை குறைந்தனவாக இருக்க லாம். உடல் மெலிந்து விளங்கலாம். உனது சக்தி மிகச் சிறியதாகவும் இருக்கலாம். ஆனல், அஞ்சாதே. மகத் தான மலைபோன்ற இலட்சியத்தை உன்னல் சாதிக்க முடி யும் என்று திடமாக நம்பு. அந்த நம்பிக்கை உனது சிறிய கைகளுக்கும், மெலிந்த உடலுக்கும், குறைவுற்ற உன் சக் திக்கும் எதிராக எழுகின்ற தடைகளையெல்லாம் பொடிப் பொடியாக்கிவிடும்'' என்று பேரொலி எழுப்பிய வார்த் தைகள் அவனது பலவீனத்தை எள்ளி நகையாடுகின்றன. அவன் மௌனமாகத் தலைகுனிந்திருக்கிருன். சீதாவிற்கு அவன் மனப்போராட்டங்கள் தெளிவாகப் புலனுகின் றன. பதினைந்து வருடங்களுக்கு மேலாய் அவனோடு பழ கிப் பழகி அவனது உணர்வோட்டங்களை நன்கு தெரிந்து வைத்திருப்பவள் அவள். சிறிய காற்றின் அசைவிலே உதிர்ந்துவிடும் பவள மல்லிகைப் பூக்கள்போலச் சிறிய சிறிய சலனங்களால் பெரும் பாதிப்பினை அடையும் அவ னைப் பார்க்கக் கோபத்திற்குப் பதில் இரக்கமே பிறக் கிறது. அவளுக்கு மேலும் அவனைக் கிண்டிக் கிளறி வேடிக்கை பார்க்க விரும்பாதவளாய்க் கதையை வேறு திசைக்கு மாற்றுகிருள்.

''அம்மா இறந்துவிட்டாரென்று நினைக்கவேகூட வில்லை. அந்த அன்புத் தெய்வம் ஐயாவிலும் உங்களிலும் சாந்நித்யமாகி இருப்பதாக நான் உணர்கிறேன். அவ ருடைய படத்தின் முன்னல் மண்டியிட்டு நிற்கும் ஒவ் வொரு சமயத்திலும் என் மனம் இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறது. அத்தர் முடிந்துவிட்டாலும் அது

தெளிக்கப்பட்ட உடையிலெல்லாம் பல நாட்களுக்கு மணம் கமழ்வதுபோல, அவரின் அன்பு உங்களிலெல்லாம் தெளிக்கப்பட்டிருப்பதாக நான் நம்புகிறேன்'' என்று பரவசமடைந்தவள்போல நீர் தயங்கும் விழிகளோடு சீதா தளதளத்த குரலிலே பேசுகிருள்.

''நீ நினைப்பதுபோல எனது அன்பு உறுதியானதன்று, ஊர் உலகமென்ற உஷ்ணத்தில் என் அன்பு மலர் வாடிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்'' என்று ஆத்மநாதனின் உள்மனம் வெளிவந்துவிடத் துடிக்கின்றது. பலவந்தமாக அவன் அதை அடக்கிக்கொள்கிருன். தனது பலவீனத்தை மிகச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு, சீதாவின் அன்பிற்குத் தன்னைப் பாத்திரனுய் ஆக்குவதில் அவன் முனைகின்ருன்.

''இந்தச் சீதாதான் எனது தாழ்வு மனப்பான்மையை புறங்கண்டு வாழ்வைத் தூண்டிப் பிரகாசிக்க வைத்தவள். சிற்றன்னையின் கொடுமையால் வருந்திய எனக்குத் தாய் போல அருள் சுரந்தவள் இவளின் தாய். என்னுள்ளே நீறு பூத்துக்கிடந்த அறிவுக் கனலைத் தூண்டி எரிய வைத்தவர் இவள் தந்தை. கேவலம் ஊருக்குப் பயந்து அதன் சாதித் திமிருக்கு அடிபணிந்து இவர்களின் புனிதமான அன்பைத் துறப்பதா? கூடாது. கூடவே கூடாது'' என்று ஆத்மநாதனின் அடிமனம் ஓலமிடுகிறது. அவன் உறுதி கொண்டு நிமிர்ந்து உட்காருகிருன்.

''சீதா! எனது உயிர் உள்ளவரை நான் உனக்கும், உனது பெற்ருேருக்கும் கடமைப்பட்டவன். உன் கண்ணிலே நீர் வழிந்தால், அதை என் இதயத்துச் செந்நீரால் கழுவித் தூய்மை செய்வேன். என் உலகமே நீதான்'' என்று அவன் அன்பொழுகக் கூறுகிருன்.

சீதா தன்னை மறந்துவிடுகிருள். அவளின் நெஞ்சு உருகுகிறது. உணர்ச்சியின் உன்னத நிலையிலே வார்த்தைகள் வெளிவர மறுக்கின்றன. ஆத்மநாதன் அவளின்

அன்பு மழையிலே தனது நெஞ்சக் கறையைக் கழுவிக் கொள்கிறான்.

காலம் சிறகொடிந்த பறவையாக மெல்ல நகர் கிறது. சரவணையரின் நச்சு விழிகள் தம்மைத் தீண்டிச் செல்வதையாவது, 'கரவாடும் வன்நெஞ்சரான' அவரது உதட்டிலே ஏளனச் சிறுநகை நெளிந்ததையாவது அந்த இருவரும் காணவேயில்லை.

## 5.

ஆத்மநாதன் சீதாவின் வீட்டிலிருந்து புறப்பட்ட பொழுது மாலையாகிக்கொண்டிருக்கிறது. வானத்தை கரு மையாக்கியவண்ணம் காகக் கூட்டங்கள் பறக்கின்றன. சோம்பேறி மாடுகள் இரண்டொன்று அப்பொழுதுதான் மேய்ச்சலிலிருந்து திரும்புகின்றன. அவற்றின் பின்னால் தலையில் புல்லுக்கட்டு ஒன்றைச் சுமந்தவண்ணம் சிறுவன் ஒருவன் வருகிறான்.

அவன் ஆத்மநாதனின் அருகில் வந்ததும் அவனைத் தெரிந்துகொண்டதற்கு அறிகுறியாகப் புன்முறுவல் பூத்து மரியாதையாக வழிவிட்டு நிற்கிறான். அந்த முறுவலிலே உயிரில்லை. வேண்டுமென்றே சிரித்ததுபோல இருந்தது. தாழ்ந்த சாதியான் உயர்ந்த சாதியானுக்குக் காட்டும் செயற்கையான மரியாதையாக அது தோன்றியது.

சிறுவனைக் கடந்து சென்றபொழுது அவனது முடை நாற்றம் வீசும் செம்பாட்டுத் துணியும், குளிப்பையே அறி யாத உடம்பின் அழுக்கும் சேர்ந்து தன் மூக்கைத் துளைக் கும் உணர்ச்சியை ஆத்மநாதன் அடைகிறான். பரம்பரை பரம்பரையாகச் சுகாதார உணர்ச்சியே இன்றி வாழ்ந்த பெற்றோரின் பிள்ளை அந்தச் சிறுவன். சரவணையர் போன்ற வர்களின் கண்களிலே புழுவிலும் கேவலமாகக் கணிக்கப் படுபவன்.

வீட்டுக்குப் போனாலும் மாற்றுடை தரிக்கப் போகிறானா? என்ன? தரிக்கத்தான் வழியேது? கிடைக்கும் பாணையோ, கிழங்கு முழங்கையோ தின்றுவிட்டுக் கிழிந்த பாய் ஒன்றிலே சரியப்போகிறான். விடிந்தது விடியுமுன்னம் எழுந்து கிடைத்ததை வயிற்றுள் கொட்டிவிட்டு, எருக்கடகத்தோடு வயல்வெளிக்குப் போகப் போகிறான். இது தான் அவன் வாழ்க்கைச் சுழல்!

அனுதாபத்தின் வெளிப்பாடாக ஆத்மநாதன் பெருமூச்சு விடுகிறான். தாழ்ந்து கிடக்கும் இந்தச் சமூகத்தின் வாழ்வை இரத்தத்தில் தோய்த்தாவது எழுதிவிடவேண்டும் என்று அவன் உறுதிகொள்கிறான்.

திடீரென்று அவனுக்கே அவன் சக்தியிலே சந்தேகமுண்டாகிறது. ''நிமிடத்துக்கு நிமிடம் சலனமடையும் கோழைத்தனம் நிறைந்த தன்போன்ற ஒருவனால் மனித உள்ளங்களை உணர்வுபெறச் செய்ய முடியாது'' என்ற தாழ்வு மனப்பான்மை அவனைப் பெரிதும் பாதிக்கிறது.

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்று பாரதி தெரியாமலா சொன்னான்?

இந்த எண்ணம் வந்தபொழுது சில நாட்களுக்கு முன்பு நடந்த கதையரங்கம் ஒன்று அவன் நினைவுக்கு வருகிறது. அந்தக் கதையரங்கிலே ஐந்து எழுத்தாளர்கள் ஒரே தலைப்பில் கதைகள் எழுதி வாசித்தார்கள்.

அவர்களில் ஒருவர் சாதிக் கொடுமையைத் தமது கதையின் கருப்பொருளாகக் கொண்டிருந்தார். அப்பப்பா! அவர் கதை வாசித்ததும் போதும்! பட்டபாடும் போதும். அவர் கையாண்ட கரு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தியதாம். சாதிக்கொடுமை சாடப்பட்டு அது அழிந்தொழிந்தே போய்விட்டதாம்!

இந்தக் கண்டனங்களின் உள்ளர்த்தம் என்னவாக இருந்தாலும் எழுத்தாளரின் அறியாமையை நினைக்க அவனுக்கு அப்பொழுதும் சிரிப்பு வந்தது; இப்பொழுதும் சிரிப்பு வருகிறது. எழுத்து

என்பது பாஷையைப் போலக் காலத்தின் போக்கிற்கும், சுவைக்கும் ஏற்ப மாறவேண்டியதுதான். ஆனால், இந்த விஷயத்தில் தேவைக்கு மேல் ஈரிசனை காட்டும் எழுத்தாளர் கள், உண்மையிலே தங்கள் எழுத்தினால் பிரச்சினைகள் எந்த அளவிலே தீர்க்கப்பட்டுள்ளன என்று அறிய முயல் கிறார்களா? பேனா மன்னர்கள் என்று மார் தட்டும் இவர் கள் இதுவரை செய்து கிழித்தது என்ன? உள்ளத்தை யும், வாழ்க்கையையும் வேறுவேறாக்கி, சொந்தக்குரோதங் களையும், ஆசைகளையும், தாபங்களையும் எழுத்துக்களாக் கித் தமது வளர்ச்சிக்குப் படி சமைத்துக் கொண்டார் களேயல்லாமல் சமுதாய நலனைச் சிறிதாவது பேணியதா யில்லை. அவ்வாறு பேணி, உண்மையைத் தெளிவாக எழுத்துக்களிலே வடித்திருந்தால் இன்று சமுதாயம் எவ் வளவோ மாறியிருத்தல் வேண்டும்.

சாதிக்கொடுமை சாடப்பட்டுவிட்டது என்று பீத்தற் பெருமை பேசும் எழுத்தாளர்களில் எத்தனைபேர் தங்கள் வீடுகளிலே சமத்துவத்தை அனுமதித்திருக்கிறார்கள்? கதையரங்கம் முடிந்ததுமே, சாதித் திமிரைக்கைகோர்த்து வீடு சென்றவர்களை ஆத்மநாதன் எப்படி மறப்பான்?

ஆத்மநாதனின் இரத்தம் கொதிக்கிறது. பனங் கொட்டுப் போல உள்ளே ஒன்றும் இல்லாது, வெளியே பருத்து விளங்கும் எழுத்தாளர்களில் ஏற்பட்ட எரிச்சல் அடங்க அவனுக்கு வெகுநேரமாகிறது. ''இலட்சியங்களை மேடைகளிலே பேசித்தீர்ப்பவர்கள் அரசியல்வாதிகள். அவற்றிற்கு எழுத்துருவம் தருபவர்கள் எழுத்தாளர்கள். இலட்சியம் பற்றிப் பறையடிக்காமலேதாம் செய்வது ஏதோ பெரிய காரியம் என்ற நினைவே இல்லாமல்சேவை செய்து வாழ்பவர்கள் பெரியோர்கள்'' என்ற புதிய வரை விலக்கணம் ஒன்று ஆத்மநாதனின் சிந்தனையிலே சுடர் விடுகிறது.

சில மணித்தியாலங்களுக்கு முன்பு சீதாவின் முன்னால் தனது பலவீனத்தைக் கொட்டி அளந்தபின், தானும் ஒரு மனிதன் என்று நினைக்கவே ஆத்மநாதனுக்கு வெட்கமாக

இருக்கிறது. ''நானும் ஓர் எழுத்தாளன்தான். எந்தச் சூழலில் என் சகோதர எழுத்தாளர்களை அகப்படுத்தி னேஞே அதே சூழலில் நானும் அகப்பட்டுக்கொண்டேன். எனது மன உறுதியும், இலட்சியங்களும்கூட அடிக்கடி தளர்ந்து போகின்றன'' என்று அவன் மனம் நொந்து தன்னுள்ளே பேசிக்கொள்கிருன்.

சிந்தனை திசைமாறிச் சீதாவையும், அவளின் குடும்பத் தினரையும் பற்றிய எண்ணங்களிலே லயித்த பொழுது, அவன் முகத்திலே கோபம் மறைந்து கனிவு ஏற்படுகிறது.

★

பதினைந்து வருடங்களுக்கு முன்னுல் ஒரு நாள் வெள் ளிக்கிழமை. மாலைநேரம் அம்மன் கோவிலில் பாலநாகேந் திர ஐயர் பூசை செய்துகொண்டிருந்தார். வழக்கத்திற்கு மாருக வயற்காட்டுப் பக்த கோடிகள் பலர் பூசை காண வந்திருந்தார்கள்.

அவர்களிலே பலரின் நோக்கம் அம்மனைத் தரிசனம் செய்து அருட்பிரசாதம் பெறுவதன்று. மலாயாவிலிருந்து பல வருடங்களுக்குப் பிறகு திரும்பியிருந்த செல்வரத்தி னத்தையும், மனைவி சிவபாக்கியத்தையும் அவர்களின் மகள் சீதாவையும் ''பூராயம்'' பார்ப்பதுதான்.

மூலஸ்தானத்திலே மணி அடித்துக்கொண்டும், அவ் வப்போது எடுபிடி வேலை செய்து தந்தைக்கு உதவி செய்துகொண்டும் நின்ற பத்துவயதுச் சிறுவனுன ஆத்ம நாதனையும், செல்வரத்தினம் குடும்பத்தினரின் வருகை கவரத்தான் செய்கிறது.

வெளியேவரும் ஒவ்வொரு சமயத்திலும் கடைக்கண்ணுல் அவர்களைப் பார்க்க அவன் தவறவில்லை. துவேஷமும் வயிற்றெரிச்சலும் கனன்றெரிந்த அந்த இடத்திலே புதுமை விருப்பினனுன அந்தச் சிறுவனின் கருத்தில்லாத வெகுளிப் பார்வை சிறிது குளிர்மையை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான்.

எத்தனையோ வகையான தீபங்களை ஏற்றி வழிபட்டாலும், பஞ்சாராத்தியைக் காட்டும்பொழுது புதியதொரு சோபை ஏற்படுகிறதல்லவா? அடியார்கள் தங்கள் கைகளை தலைக்குமேல் குவித்து 'அரஹர' கோஷம் செய்வதும் அந்த வேளையில்தானே? அதுபோலத்தான் பல தீபங்களிடையே பஞ்சாராத்தி போல அந்த மூவரும் அவனுக்குக் காட்சி தந்தார்கள்.

பட்டு வேட்டி, பட்டுச் சால்வை, இடதுகை மணிக் கட்டிலே கைக்கடிகாரம், வலது கை மோதிரவிரலிலே வைரிய மோதிரம் ஒன்று என இத்தனை அலங்காரங்களுடன் செல்வரத்தினம் காட்சிதந்தார். அவருக்குப் பக்கத்திலே சர்வாலங்காரபூஷிதையாகச் சிவபாக்கியம் நின்றாள். அவளின் முந்தானையைப் பற்றியபடி ஏழுவயதுச் சிறுமியாக கைகளிலே வளையல்களும் கழுத்திலே தங்கச் சங்கிலியும், கவுணும் அணிந்து அழகிற்கு வரைவிலக்கணம் உணர்பவள் போலச் சிதா நின்றாள்.

செல்வரத்தினத்தின் நரையோடிய தலைமயிரிலேகூட ஏதோ ஒருவகைக் கவர்ச்சி. அகன்ற நெற்றியும், கூரிய நாசியும், உயர்ந்த தோற்றமும் அன்றே ஆத்மநாதனைக் கவர்ந்துவிட்டன.

சிவபாக்கியத்தில் செல்வரத்தினத்தின் கம்பீரமில்லை. தொட்டால் துவண்டுவிழக்கூடிய மெல்லிய உடல். அடிக்கடி நோயிலே கிடந்து வாடிய முகக் களை. சற்றே மாநிறம் இருந்தாலும் ஏதோ ஒன்று அவளிலே கூடுதலாக இருந்ததாக அவனுக்குப் புலப்பட்டது. அதைச் சொல்லிலே கூற அன்று அந்தச் சிறுவயதில் அவனால் முடிந்திராது. ஆனால் இன்று தெரிகிறது. சிவபாக்கியம் தாய். பூமியைப்போல ஓடுகின்ற நதியைப் போல, எதையும் தாங்கி, சகலருக்கும் உவப்பளித்து உதவுகின்ற தாய்மைப் பண்புதான் அந்த மெல்லுடலை அவ்வளவு கவர்ச்சி வாய்ந்ததாக ஆக்கியிருந்தது.

சிதா! மாலை வெயிலைப் போன்ற மஞ்சள் நிறம். வாழையின் மினுமினுப்புடன் கூடிய உடல். கன்னங்கரிய

கூந்தல். பெரிய விழிகள். ஆனால், சற்றுச் சிறுத்த நாசி. எட்டமுடியாத ஒரு கனவுக்கன்னியாக அன்றுஅவள் ஆத்ம நாதனுக்குத் தோற்றினாள். ''இன்று மட்டும் என்ன? சீதா கனவுக் கன்னிதான்.''

அன்று இவர்களோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்த பொழுது, அவனுடைய தேகம் வெட்கத்தால் கூனிக்குறுகியது உண்மை. முன் பக்கம் வழித்த பின் குடுமி தண்ணீரிலே முங்கிமுங்கிப் பிசாண் பிடித்து நாற்றம் எடுத்தது. ஆனசாப்பாடு இல்லாததால் சூச்சி பற்றிப்போன காலும், கைகளும் தாயின் அன்பையே காணாதை ஏக்கம் நிலையாகக் குடியேறிவிட்ட விழிகள், சோகைபற்றிவெளுத்த முகம். இவைதான் அன்றைய ஆத்மநாதன். வெட்கமாக இராதா?

இந்த நிலையில் அவர்களை ஆர்வம் சுடர்விட ஏறிட்டுப் பார்ப்பதற்கும் திடீரென்று ஏற்பட்ட கூச்சம் தடை விதித்தது. அவர்களைப் பார்க்காமலிருக்கவே அவன்விரும்பினான். ஆனால், தன் பிடறிக்குப் பின்னால் அவர்களின் பார்வை வந்து தன்னை மொய்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுவதையும் அவனால் தடுக்கக் கூடவில்லை.

பூசை முடிந்தது. ஐயர் விபூதி கொடுக்கத் தொடங்கினார். ஆத்மநாதன் கெண்டியிலே தீர்த்தம் எடுத்துக் கொண்டு அவர் பின்னாலே சென்று தீர்த்தம்வழங்க ஆரம்பித்தான்.

செல்வரத்தினமும் மனைவியும், மகளும் நின்ற இடத்திற்கு வந்தபொழுது பாதாதிகேசம் இனிமையும், கூச்சமும் நிறைந்த ஓர் உணர்வு அவனில் ஊறியது. அவன் கையிலே நடுக்கம் தோற்றத் தீர்த்தத்தை வழங்கினான். முதலில் செல்வரத்தினம் தீர்த்தம் வாங்கினார். தொடர்ந்து சிவபாக்கியம் வாங்கினாள். என்ன அடக்கம்! என்ன மரியாதை!

அடுத்ததாகச் சீதாவின் முறை. அவள் வெகுளித்தனத்தோடு தனது வலது உள்ளங்கையை நீட்டினாள். சிவபாக்கியம் பதட்டத்தோடு அவளின் கையை இழுத்து

"ஐயாவிடம் மரியாதையோடு இரண்டு கைகளையும் நீட்டித் தீர்த்தம் வாங்கு தங்கச்சி" என்று சொல்லித் தீர்த்தம் வாங்கும் முறையை அவளுக்குக் காட்டிக் கொடுத்தாள்.

சீதா, தாய் சொன்னபடியே தீர்த்தத்தை வாங்கி, வாய், தலை, சட்டை அனைத்தையும் நனைத்துக்கொண்டாள்.

அந்தக் காட்சி வேடிக்கையாக இருந்தது. செல்வரத்தினமும், சிவபாக்கியமும் சிரித்தார்கள். ஆத்மநாதனும் சிரித்தான். சிதாவும் சிரித்தாள்.

செல்வரத்தினத்தின் குடும்பத்தோடு சேர்ந்து அவர்களின் சிரிப்பில் மட்டுமல்ல, அழுகையிலும் தான் கலந்துகொள்ளப்போவதை ஆத்மநாதன் அன்று உணரவே இல்லை.

## 6.

ஆத்மநாதன் நடந்துகொண்டிருக்கிறான். நினைவுகள் நெஞ்சிலிருந்து கழன்று விழுந்தன. காலடியிலே சிக்குண்டு நடப்பதைத் தடைசெய்வது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. அதோ அம்மன் கோயிலின் முன்புறத்திலே விளக்குச் சுடர் அசைந்தசைந்து இருளை மென்றுதின்கிறது. வீடு கிட்டிவிட்டது.

உலகின் அலுப்பும், விரக்தியும் ஒன்று சேர்ந்து ஆத்மநாதனின் தோள்களிலே வந்து அமர்ந்துவிடுகின்றன.

"என்னை அன்போடு வரவேற்க அப்பாவைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? எனது தங்கையும் மணம் செய்து புருஷன் வீடு சென்றுவிட்டாள். தம்பிமார் இருவரும் அப்பாவிற்கே இரக்கம் காட்டாத தடியன்கள். சித்தியின் புத்திர சிகாமணிகளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்.

சித்தியின் நஞ்சு உதரத்திலே தோன்றி வளர்ந்தவர்கள் தாமே? என்னை வெறுக்கவென்றே தொட்டிலிலே கிடந்த நாளிலிருந்து பழக்கப்பட்டவர்கள். வயது சென்ற அப்பாவைத்தான் இரண்டாம் தாரமாக மணந்துகொண்டதற்குக் காரணமே தானும், என் தம்பி தங்கைகளும்தாம் என்று எண்ணும் சித்தியிடம், இரக்கத்தை எதிர்பார்ப்பதும் பாறையிலே பசுமையை எதிர்பார்ப்பதும் ஒன்றுதான்!

எப்போதோ இறந்துவிட்ட தாயின் எண்ணம் அந்தச் சமயத்திலே அவனுக்கு ஏற்பட்டதும் அவன் கண்கள் பனிக்கின்றன. உதடும், உள்ளமும் ''அம்மா, அம்மா'' என்று விம்மிப் பொருமுகின்றன.

திடீரென்று அவன் சிந்தனை சிவபாக்கியத்தை நோக்கித் திரும்புகின்றது. ''என் அம்மா என்றோ இறந்தது உண்மைதான். ஆனால் என்னைப் பற்றிப் பிணைத்து வாழ்வின் அர்த்தத்தைச் சொல்லித்தந்த தாய்மை நேற்றுத்தான் செத்துச் சாம்பராயிற்று'' என்று அவனால் நினைக்காதிருக்கக் கூடவில்லை.

நினைவே நினைவைத் தின்று பொருமி வெடிக்க, இனி நடக்க இயலாது என்ற நிலையில் அம்மன் கோயில் விளக்குக் கம்பத்தின் முன்னுள்ள இருப்பை மரத்தின் அடியில் அவன் உட்காருகிறான்...

வீட்டின் முன்புற விறாந்தையிலே சாய்மனை நாற்காலியிலே படுத்துக்கொண்டு, செல்வரத்தினம் ஏதோ புத்தகமொன்றைப் படிப்பதில் ஆழ்ந்து போயிருந்தார். அவருக்குச் சிறிது தூரத்திலே சிவபாக்கியம் தரையிலே இருந்து சீதா மூன்று சில்லுச் சைக்கிளில் ஏறி முற்றத்தை வளைய வருவதைப் பார்த்துச் சுவைத்தவண்ணம் இருந்தாள்.

அந்த வேளையிலே தயங்கித் தயங்கிக் கேட்டைத் திறந்துகொண்டு ஆத்மநாதன் வந்து முற்றத்திலே நின்றான். சிவபாக்கியம் அவனை நோக்கி, ''ஐயர்! வாரும், வாரும். என்ன சங்கதி?'' என்று ஆவலோடு கேட்டாள். சீதாவும் தனது சைக்கிள் ஓட்டத்தை நிறுத்திவிட்டுத்

தலையைத் திருப்பி ஆத்மநாதனைப் பார்த்தாள். செல்வ ரத்தினம் மாத்திரம் தமது புத்தகத்தினுள்ளே சமாதியாகிக் கிடந்தார்.

ஆத்மநாதன் கன்னத்தை ஒரு கையாலே மறைத்துக் கொண்டு விஷயத்தைச் சொல்ல முயன்றான். ஆனால் தயக்கத்தின் பின்னணியிலே அமுங்கிப் போயிருந்த வேதனை கொப்பளித்து கண்களிலே வழிந்து அழுகைதான் வெடித்தது முதலில்.

சிவபாக்கியம் ஓடிவந்து ஆத்மநாதனை அணைத்துக் கொண்டாள். செல்வரத்தினமும் தமது புதை குழியில் இருந்து எழுந்து அவனை வியப்போடு பார்த்தார். சீதா விறைத்துப் போய்ச் சைக்கிளோடு சைக்கிளாய்க் கிடந்தாள்.

சிவபாக்கியத்தின் அணைப்பு ஆத்மநாதனது அழுகையைக் கூட்டியதேயல்லாமல் குறைந்தபாடில்லை. அவன் உரத்த குரலிலே மேலும் மேலும் கதறிக் கதறிக் கேவிக் கேவி அழுதான்.

சிவபாக்கியம் அவனை இழுத்து வந்து நாற்காலியில் இருத்தினாள். இருத்திவிட்டுக் காலோடு தலையாக அவனை நோக்கினாள்.

ஆ... அவளுடைய கண்கள் அவனது கன்னத்தின் அருகில் வந்தபோது நிலைகுத்தி நின்றுவிட்டன.

அந்த இடத்தில் குறுக்குவாட்டாகக் கொள்ளியாலே குறி இழுக்கப்பட்டு, தோல் கருகிக் கொடூரமான காட்சியை அளித்தது.

''என்ன இது?''

ஆத்மநாதன் பெருங்குரலெடுத்துக் கதறினான்.

''சித்தி கொள்ளியாலே சுட்டுவிட்டாள். தம்பியைத் தாலாட்டவில்லை என்ற கோபம் அவளுக்கு. என்னைப் பொலிசுக்குக் கூட்டிப்போங்கோ. இனி அந்த வீட்டில் என்னால் இருக்க முடியாது.''

''அடி இராட்சசி!'' என்ற வார்த்தைகள் செல்வரத்தினத்தின் தொண்டையைக் கீறிக்கொண்டு வெளிப்பட்

டன. சிதா அச்சத்தால் அலறியேவிட்டாள். சிவபாக்கியம் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாது வீட்டி னுள்ளே ஓடிச் சென்று மை போத்தலை எடுத்துவந்தாள். ஆத்மநாதனின் கன்னத்திலே மையைத் தடவினுள்.

ஆத்மநாதனின் விம்மல் அடங்க வெகுநேரம் சென் றது. பழையபடி பொலிசுக்குப் போகவேண்டுமென்ற பல் லவியைப் படிக்கத் தொடங்கினுன். செல்வரத்தினமும் அவனுக்கு ஆமாம் போடத் தொடங்கியதும் அவனின் உஷார் மேலும் கூடியது.

''ஐயர் பொலிசுக்குப் போனுலும் நீர் பிறகும் சித்தி யிடம்தான்வரவேண்டும். உமக்கு மேலும் தொல்லைதான். பேசாமல் வீட்டுக்குப் போம். என்ன குறையிருந்தாலும் நீர் எங்களிடம் வந்து சொல்லும். நாங்கள் கவனித்துக் கொள்கிறேம். இனி சித்தி உமக்கு ஒரு தொந்தரவும் செய்யாதபடி நான் கவனிப்பேன். பயப்படாமல் போய் வாரும். நீர் என் பிள்ளைபோல'' என்று சிவபாக்கியம் சொல்லி அவனுடைய கோப நெருப்பைத் தணித்தாள். அத்துடன் செத்துப்போய்விட்ட தாய்ப்பாசத்தையும் அவ னிலே தளிர்க்கவைத்தாள்.

அவளுடைய கைகள் தன் உச்சியைத் தடவியபொழுது தனதுதாயே மீண்டும் உயிர்பெற்று வந்ததுபோன்ற உணர்ச்சி ஆத்மநாதனுக்கு ஏற்பட்டது. அந்த ஆனந்தத் திலே அவன் மீண்டும் ஒரு தடவை அழுதான்.

☆

அன்று அவனுக்கு அப்பிள் பழங்கள், திராட்சைப் பழங்கள், விசுக்கோத்துகள் என்று பல புதுவகை உண்டி கள் கிடைத்தன. வயற்காட்டு அம்மன் கோயில் பூசகரின் மகன் இதற்குமுன் அவற்றைக் கண்ணுல் கண்டானைக் கூட விரல்விட்டு எண்ணிவிடலாம்.

பாலநாகேந்திர ஐயரின் வீட்டிற்கு செல்வரத்தினமும் சிவபாக்கியமும் சென்று ஐயரையும், மனைவியையும் நயத் தாலும், பயத்தாலும் வழிப்படுத்தி, ஆத்மநாதனில் இனி அவர்கள் கைவைக்கக்கூடாத நிலையை ஏற்படுத்தினர்

அன்றோடு ஆத்மநாதனின் வழிக்குச் செல்வதையே சித்தி கைவிட்டுவிட்டாள். கோழை! பொலிசையும், வழக்கையும் கேட்டவுடன் ஒரேயடியாகப் பயந்து போனாள்.

பின்னேர வேளைகளில் ஆத்மநாதன் தமது வீட்டுக்கு வந்து படிக்கவேண்டுமென்றும் அதற்கு எவ்வித தடையும் இருக்கக் கூடாதென்றும் செல்வரத்தினம் கேட்டுக் கொண்டதை பாலநாகேந்திர ஐயர் முழு மனதுடன் ஏற்றார்.

வீட்டைவிட்டு வெளியே வந்தபொழுது ஐயரும் அவர்களுடன் கூட வந்து வீட்டுப் படலையடியில் நின்று, ''ஐயா! நான் பெண் என்று நினைத்துப் பேயைக் கொண்டு விட்டேன். அதன் பலனை நல்லாய் அனுபவித்துத்தான் வருகிறேன். என்ன செய்வது? அவளுக்கு அடங்கி வாழ்ந்தால் தான் என் மானம் கப்பலேறாமல் இருக்கும். என்னை மன்னித்துவிடுங்கள். இனி ஆத்மநாதன் உங்கள் பிள்ளை. அவனுடைய வளர்ச்சி உங்கள் கையிலே. நான் பிராமணன். உங்களுக்குத் தர என்னிடம் உள்ளது வெறும் ஆசீர்வாதங்கள்தான்'' என்று கண்ணீர் விட்டபடி சொன்னார். அதைக் கேட்ட செல்வரத்தினமும் கண்கலங்கினார். அவர் தமது பக்கத்திலே வந்த ஆத்மநாதனை இறுக அணைத்துக்கொண்டார். சிவபாக்கியம் மறுபக்கம் திரும்பித் தன் கண்ணீரைத் துடைத்தாள்.

*

செல்வரத்தினத்தின் மனமும் விரிவடையத் தொடங்கி இருந்தது. ஆத்மநாதனை அவர் தமது பிள்ளை போலவே நடத்தி வந்தார். அவருடைய கைகளிலே ஆத்மநாதனும் சீதாவும் உருவாகிக்கொண்டிருந்தனர்.

தூங்கிக் கிடந்த அவரின் அறிவு விழிப்படைந்தது. அதன் கதிர்கள் பிள்ளைகளின்மேல் தெறித்து அவர்களும் பிரகாசிக்கத் தொடங்கினர்.

உலகத்து அறிஞர்களின் சிந்தனைக் கருவூலங்கள் யாவும் செல்வரத்தினத்தின் வாயிலாக அவர்களை அடைய லாயின. இயற்கையாகவே நல்லுணர்வும், கலையாற்ற லும் பொருந்தியிருந்த ஆத்மநாதனுக்கு செல்வரத்தினத் தின் தூண்டுதல் வரப்பிரசாதமாயிற்று. எனினும் அறிவை உள்வாங்குவதில் சீதா அவனுக்கு ஒருபடி மேலாகவே எப் பொழுதும் இருந்து வந்தாள்' இருவரும் போட்டி போட் டுக்கொண்டு முன்னேறினர்.

இவ்வாறு அறிவு ஒரு பக்கத்திலே வளர, மறு பக்கத் திலே நீண்ட நாட்களாய் ஆத்மநாதனது மனதிலே குறைவுபட்டிருந்த பாசமும் மேலெழுந்து வளர்ந்தது. அகன்ற சமுத்திரத்தைப்போல, நீண்ட நெடிய வானத் தைப்போல சிவபாக்கியத்தின் தாய்மை அவனுள் பரந்து விரிந்தது.

அவர்களிடையே சாதிப் பிரிவினை இல்லை; வயதுப் பிரி வினை இல்லை; அந்தஸ்துப் பிரிவினை இல்லை. 'ஐயர்' என்ற மரியாதைச் சொற்பிரயோகமும் மறைந்துபோயிற்று' 'நீங்கள்' என்ற ஆத்மநாதனின் முகமன் சொல்லும் இல்லையாயிற்று. ''தம்பி'', ''அம்மா'' என்ற சொற்களே அந்த இடங்களை நிறைத்தன.

சீதாவோ ஆத்மநாதனின் காவல் தெய்வமாக மாறிவிட்டாள். இருவரும் ஒன்றாகவே பாடசாலைக்குப் போய் வந்தனர். பெண்மையில் ஆவாகனமாகிவிட்ட ஆண்மையோடு சீதா ஆத்மநாதனைக் கண்போலக் காத் தாள்.

ஒருநாள் இருவரும் பாடசாலைக்குச் சென்றுகொண் டிருந்தார்கள். வழியிலே ஆத்மநாதனிலே 'பழங் கறள்' வைத்திருந்த தில்லைநாதன் அவனோடு சண்டைக்குப் போனான். தடியனான தில்லைநாதனுக்கு நோஞ்சானான ஆத்மநாதனால் ஈடுகொடுக்க முடியவில்லை.

தில்லைநாதன் ஆத்மநாதனுடைய குடுமியைப் பிடித்து ஆட்டு ஆட்டென்று ஆட்டினன். கையைத் திருகிக் கழுத்திலே பிடித்துத் தள்ளி......

ஆத்மநாதன் 'ஐயோ' என்று கதறியது சீதாவை ஆவேசம் கொள்ள வைத்தது. அவள் பாய்ந்து விழுந்து தில்லைநாதனை இழுத்து விழுத்தி......

'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று தில்லைநாதன் ஓட்டம் பிடித்தான்.

சீதா சிறுமிதான். ஆனால், அவளின் நரம்பு நாளங்களில் அந்தக்காலத்திலிருந்தே தீமையை, தீயவரை எதிர்த்துப் போராடும் உணர்ச்சி பிரவாகித்த வண்ணமிருந்தது. யாருக்கும் அஞ்சாத வீராங்கனையாக அவள் வாழ்ந்தாள். தாய்க் கோழியின் சிறகினுள்ளே பாதுகாப்பைத் தேடும் குஞ்சுபோல, சீதாவின் ஆளுமையிலே ஆத்மநாதன் ஒட்டிக்கொண்டான். அதுவே அவனிலே தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் தூண்டி வளர்த்தது.

இன்பமயமான சிறுபராய நினைவுகள் கனவுகள்போல ஆத்மநாதனின் மனத் திரையிலே விரிகின்றன. வீட்டில் சித்திக்கு ஒளித்து புற்கை, மோதகம், வடை என்று கொண்டுபோய் சீதாவிற்குக் கொடுத்ததையும், அவளுடைய கையால் அவளின் வீட்டிலே செய்த பலகாரங்களை வாங்கி, அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு சாப்பிட்டதையும் அவன் நினைத்துக்கொள்கிறன்.

அன்று சாதித் திமிரை அஞ்சி அஞ்சிச் சமயம் கிடைத்த போதெல்லாம் மறைமுகமாகச் சாடினன். இன்று அதை நேர்முகமாகத் துணிவோடு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு எதிர்க்கப்போகிறன்!

''உண்மையிலே நான் துணிந்துவிட்டேனு?''

அவனுக்குச் சந்தேகமாக இருக்கிறது. தன் நெஞ்சே தன்னை ஏமாற்றுவது போலவும், தானே தன்னைப் புரிந்துகொள்ளாதது போலவும் தடுமாறுகிறன்.

கோயில் தீபக் கம்பத்து விளக்குக் கூடுபற்றி அணைந்து போகிறது.

ஆத்மநாதன் எழுந்து வீடுநோக்கிப் போகிறான்.

# 7.

பாலநாகேந்திர ஐயர் ஒன்றும் தோன்றாது அந்த இடத்திலேயே ஆணி வைத்து அடித்ததுபோல அசையாது நிற்கிறார். தூரத்திலே துளி துளியாக மறைந்துகொண்டிருந்த சரவணையர் தமது நிம்மதியைப் பிடுங்கி எடுத்துச் செல்வதுபோன்ற உணர்வு அவருக்கு ஏற்படுகிறது.

''சொந்த மைத்துனனுக்கே கொள்ளி செருகச் சமயம் பார்த்துக்கொண்டிருப்பவர் சரவணையர். இந்த நிலையில் நானோ ஆத்மநாதனோ அவருக்குத் தூசுக்குச் சமானம். அவர் வீண் அபவாதங்களைக் கிளப்பிவிடப் போகிறார். நிம்மதியாய் ஓடிக்கொண்டிருந்த என் மகனுடைய வாழ்க்கையை மனிதன் புயலாக மாற்றிவிடப் போகிறான். இதைத் தடுப்பது எப்படி? அம்மாளே! நீதான் துணை'' என்று மனதுக்குள்ளும், மிக மெதுவாக உதட்டிற்குள்ளும் சொல்லிக்கொண்டு அவர் மீண்டும் சைக்கிளில் ஏறுகிறார்.

காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை. குறைகளையெல்லாம் அம்பாளின் தலையிலே போட்டுவிட்டு நிம்மதியாக இருக்கவும் கூடவில்லை. எதிர்காலம் எப்படி அமையப் போகிறதோ என்று அவர் சிந்தித்துக்கொண்டு சைக்கிளில் ஊர்கிறார்.

''உண்மையில் அப்படியும் நடக்குமா? என்ன? என் மகன்...... சீச்சீ இருக்காது...... ஏன் இருக்காது? இன்று நேற்றைய தொடர்பா? என்றாலும்?

சாதக பாதகமான கேள்விகளும் விடைகளும் ஐயரின் உள்ளத்தைக் குடைகின்றன. சந்தேகமும் துன்பமும் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றன.

மெல்ல மெல்ல இருளும் கவிகிறது. இனி மாலைக்கண் வந்துவிடும் ஐயருக்கு. ஒன்றும் தெளிவாகத் தெரியாது. அவர் சிறிது விரைவாகச் சைக்கிளை ஓட்டுகிறார். ஆனால், சைக்கிளை ஓட்டுவதுபோல நினைவுகளைத் தமது கட்டுப் பாட்டினுள் அடக்கிச் சரியான வழியிலே ஓட்டிச் செல்ல முடிகின்றதா? அது தன்பாட்டில் தன் வழியிலேதான் செல்கிறது.

ஏதோ ஒரு தடுக்க முடியாத சூழ்நிலையிலே ஆத்மநாதனுக்கும் செல்வரத்தினம் வீட்டாருக்கும் தொடர்பு ஏற்பட்டது உண்மை. அவனுடைய படிப்பு ஓர் ஒழுங்கிலே அமைந்து இன்றைக்கு அதனால் அவன் நாலு காசு உழைப்பதும் உண்மை.

இதற்குமேல்......?

ஐயர் கூனிக் குறுகிப் போகிறார். அவரின் நினைவே அவரைப் பயமுறுத்துகிறது. ''நடக்குமா? யுகதர்மம் மாறுவதுபோல லௌகிக வாழ்க்கையும் மாறுமென்றால் பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வந்த வருணாச்சிரம தர்மமும் அழிந்தொழிந்துபோய்விடுமா?'' என்று நடுங்கும் நெஞ்சோடு அவர் நினைத்துக்கொள்கிறார்.

ஐயர் படித்தவரல்ல. ஏதோ சிறுவயதிலே உபநயனத்துக்குப் பின்பு மந்திரங்களையெல்லாம் தமிழிலே எழுதிப் பாடமாக்கி, பூசை, அந்தியேட்டி, சிரார்த்தம் என்று பெயர் பண்ணுகிறார். உண்மையில் அவர் சப்தம் போட்டு ராகம் இழுத்துச் சொல்லுகின்ற மந்திரங்களின் பொருள் பற்றி அவர் என்றைக்கும் அக்கறை செலுத்தியதில்லை.

வேதத்தைப் பொருள் அறிந்து ஓதவேண்டுமென்றும் உச்சரிப்புச் சரியாக இல்லாவிட்டால் பெரும் பாவம் என்று சொல்லக் கேட்டிருந்தாலும் சம்சார பந்தத்திலே

மிக இளமையிலேயே உழலத் தொடங்கியதால் இவற்றிலே கவனம் செலுத்த நேரம் இருந்ததில்லை.

இத்தகையவர் யுகதர்மம், வர்ணாசிரமம் என்று அஞ்சுவதெல்லாம் பரம்பரை பரம்பரையாக இரத்தத்தோடு ஊட்டப்பட்ட சாதி உணர்ச்சியேயல்லாது வேறில்லை. அந்தத் தளையிலிருந்து அவரால் எளிதில் அறுத்துக்கொள்வது இயலாத காரியம்.

மாற்றங்களை அவர் விரும்பாமலில்லை. ஓரளவு தம் வீட்டிலேகூட அதை அனுமதித்து வைத்திருந்தார். ஆத்மநாதனும் அவன் தம்பிமாரும் பின் குடுமியை வெட்டிக் குறுப் வைத்துக்கொள்ள அவர் அனுமதிக்கவில்லையா? சமயாசமயங்களில் அவரின் வீட்டில் பாண் வாங்கிச் சாப்பிடுவதைக்கூட அவர் அனுமதித்திருக்கிறாரே! ஆத்மநாதனின் பிராமணரல்லாத நண்பர்கள் வீட்டிற்கு வந்தால் கூடத்திலே வைத்து பலகாரம், காப்பி கொடுப்பதற்கு அவர் ஆட்சேபித்ததில்லையே!

சென்ற கிறிஸ்மஸ் லீவின் போது ஆத்மநாதன் கொழும்பிலிருந்து இரண்டு நண்பர்களைத் தன்னோடு அழைத்து வந்திருந்தான். அவர்கள் என்ன சாதியோ? ஆனால் அவர்களை ஐயர் முகமலர்ந்து வரவேற்கவில்லையா? வீட்டிலே உள்ளவர்களைப் போலவே அவர்களுக்கு எவ்வித வேறுபாடும் காட்டாது உணவு முதலியன அளித்து உபசரிக்கவில்லையா? இதற்காகத் தம் மனைவியின் வாயை அவர்கள் போகும்வரை அடைத்துவைக்க அவர் பட்டபாடு கொஞ்சமோ? எல்லாம் யாருக்காக? ஆத்மநாதனின் மானத்தைக் காப்பாற்றவும், அவன் மனத்தைத் திருப்தி செய்யவும்தானே?

இதற்குமேல் எந்தவித மாற்றத்தையோ, புரட்சியையோ தம் வீட்டில் அனுமதிக்க அவர் தயாராயில்லை இனி ஒன்றும் செய்ய முடியாது. முடியவே முடியாது என்று தமக்குத் தாமே சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தார்.

''ஆத்மநாதன் இனியும் சிறுவனல்ல. முன்போல அவன் ஒரு குமர்ப்பெண் இருக்கிற வீட்டிற்குப் போகக் கூடாது. என்னதான் உதவி பெற்றிருந்தாலும் அவர்களின் சாதி வேறு, எங்களின் சாதி வேறு. இதனை ஆத்மநாதன் உணரச் செய்ய வேண்டும்'' என்று அவர் தீர்மானிக்கிறார். ஆனால், இதை எப்படிச் சொல்வது?

''சிவபாக்கியம் செத்துவிட்டான் என்று கொழும்பில் இருந்து ஓடிவந்த இவன், நான் சொன்னால் மட்டும் அங்கே போகாதிருந்துவிடுவானா? அல்லாமலும் இப்பொழுது அவன் என்னை எதிர்த்துப் பேசவும் தொடங்கிவிட்டான். படித்தவன் அல்லவா? சில வேளைகளில் அவன் சொல்வதுகூட எனக்கு விளங்குவதில்லை.''

ஐயரைப் பொறுத்தவரையிலே பிரச்சினை வளர்கிறதே அல்லாமல் குறைந்தபாடாய்க் காணோம். எந்தப் பக்கத்திலும் ஒளிச்சுவடே தெரியவில்லை. ஒரே இருள்!

''செல்வரத்தினத்திடம் இதுபற்றிப் பேசிப் பார்க்கலாமா?''

''சீச்சீ! அவன் நல்லவனென்றாலும் குடிகாரன். இந்த நிமிஷம் சொன்னதை அடுத்த நிமிஷம் மறந்துவிடுவான். அல்லாமலும் அவனோடு இந்த விஷயம் பற்றிப் பேச இது தருணமல்ல, அவன் மனைவியை இழந்து இரண்டுநாள்கூட ஆகவில்லை.''

''ஆனால், இப்படியே விட்டுக்கொண்டு போனாலும் பிழை. விஷயம் கைமிஞ்சிப் போய்விடும். சிறிய கொப்பளந்தான் பெரிய புண்ணாகி ஆளையே முடித்துவிடுகிறது. செல்வரத்தினமே சாதிவிட்டுத் தன்னிலும் எத்தனை மடங்கோ கீழான சாதியில் கலியாணம் செய்தவன். தன் மகளுக்கும் ஆத்மநாதனுக்குமிடையே இப்படி ஒரு தொடர்பு ஏற்படுவதைக்கூட அவன் விரும்பத்தான் செய்வான். மறைமுகமாக ஊக்கம் அளிக்கவும் கூடும். பிராமணனே மருமகனாக வந்தால் கசக்குமோ?''

தண்ணீரிலே கல்லை எறியப் புதிய புதிய வட்டங்கள் ஏற்பட்டு ஏற்பட்டு ஒன்றையொன்று அழித்துச் செல்வ

தைப்போலப் பல்வேறு சிந்தனைகளால் அலைக்கழிகிறார் ஐயர்.

அவர் ஒழுங்கை முடக்கிலே திரும்புகிறார். சந்தியிலே கிராமச்சங்கத்தின் சேவையைப் பறைசாற்றும் தேங்காய் நெய்க்கூட்டு விளக்கு சலனித்து எரிகிறது. அதன் மங்கிய ஒளியிலே கிராமச்சங்க அங்கத்தவர் விஜுசித்தம்பி, தம்மைக் கண்டு மரியாதையாகத் தோள் சால்வையை எடுத்து, ''ஐயா! வர'' என்று சொல்வதைக் காண்பதற்குப் பதில் கேட்டவராய், அவருக்குத் தலையசைத்துவிட்டு மேலே செல்கிறார்.

''உயிர் போனாலும் இனி ஆத்மநாதன் செல்வரத்தினத்தின் வீட்டிற்குப் போவதை அனுமதிக்கக் கூடாது'' என்று உறுதி செய்துகொள்ள அவர் தம் மனத்தை ஆயத்தம் செய்கிறார்.

கோயில் வந்துவிட்டது. ஐயர் சைக்கிளிலிருந்து இறங்கி கோயில் முன்னால் உள்ள விளக்கை ஏற்றுகிறார்.

பின்னர் சைக்கிளை உருட்டியபடி வீடுநோக்கிச் செல்கிறார்.

## 8.

சிலந்தியின் நூல்போல் ஊசிப்போன மோதகத்திலிருந்து கைக்கும் வாய்க்குமிடையே ஏதோ இழுபட்டது. நாற்றமெடுத்த பழைய வடை வயிற்றையே குமட்டி வெளியே கொண்டுவந்து விடும்போலிருந்தது. புற்கைக்குள் இருந்த கல் பல்லைப் பதம் பார்த்தது.

ஆனல், சீதா பலவந்தமாகத் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டாள். உருசித்துச் சாப்பிடுவது போலப் பாசாங்கு செய்தாள். எதையுமே மிச்சம் மீதியென்று வைக்காமல் அத்தனையையும் சாப்பிட்டு முடித்தாள்.

அன்பிலே விளைந்த பெருமிதம் முகத்திலே துள்ள அவன் சாப்பிடுவதை ஆத்மநாதன் பார்த்து நின்றான். தான் சாப்பிடும்பொழுது சித்தியின் கண்களை எப்படியோ ஏமாற்றி, மடியினுள் மோதகம், வடை, புற்கையைக் கட்டிக்கொண்டு இளைக்க இளைக்க ஓடிவந்த களைப்புக்கூட பறந்துவிட்டது அவனுக்கு.

சீதாவிற்கு அந்தக் காட்சியைப் பார்க்க நெஞ்செல்லாம் நிறைந்துவிட்டது. 'இவருக்காகக் கல்லை, மண்ணைக் கூடச் சாப்பிடலாமே' என்று அவள் நினைத்துப் பூரித்தாள்.

ஆத்மநாதனுக்கும் சீதாவிற்குமிடையே சிறு பருவத்தில் நடந்த அன்புப் பிணைப்புகளில் இதுவும் ஒன்று.

இந் நினைவுகளைச் சீதாவால் மறக்கவே முடியாது. 'பொருளின் தேவையை ஒட்டியே அதன் பெறுமதியும், விலையும் அமையும்' என்ற ஆரம்பப் பொருளியலைக்கூடத் தெரிந்துகொள்ளாத பருவம் அது.

'முன்னை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'

என்று நினைத்து நினைத்துப் பூரிக்கக்கூடிய வயதும் அல்ல அது!

ஆனால், உணர்ச்சிக்கு வயதோ, அறிவோ ஒன்றும் தேவை இல்லையே! ஓடிவருகின்ற கன்றை நாவால் நக்கி, மடியைச் சுரந்து அதைத் தன் அன்பால் குளிப்பாட்டப் பசுவிற்குப் படிப்பும், பருவமும் எங்கிருந்து வந்தன? எல்லாம் உள்ளத்தில் பொங்கிப் பிரவாகிக்கின்ற உணர்ச்சி வெள்ளந்தான்.

ஆத்மநாதன் வீட்டிலிருந்து புறப்பட்டுக் 'கேற்'றைத் தாண்டிச் சென்றபொழுது, சீதாவின் உள்ளத்திலே இப்படிப் பல சிந்தனைகள் கருவாகி உருவாகின்றன.

'ஆத்மநாதன்! ஆத்மநாதன்!' என்று அவள் வாய் முணுமுணுக்கிறது; நெஞ்சு இனிக்கிறது; உடலெங்கும் புளகாங்கிதம் ஊற்றெடுக்கிறது. பாலிலே குளித்தெழுந்த சீதளக் குளிர்மையிலே அவள் பரவசமாகிவிடுகின்றாள்.

சீதா முல்லைபோல மென்மையானவள்தான். ஆனால், கல்லிலும் வலிய உறுதியுடையவள். இந்த விடயத்தில் அவள் சிவபாக்கியத்திற்கும், ஆத்மநாதனுக்கும் நேர் விரோதம். வளவளா விளக்கெண்ணெய்ப் பேச்சுப் பேச அவளுக்குத் தெரியாது. வெட்டொன்று, துண்டிரண்டு என்ற வகையிலே அவள் பேச்சு அமைந்திருக்கும். மகா துணிச்சற்காரி.

ஆனால், கணத்துக்குக் கணம் சலனிக்கின்ற ஆத்ம நாதனின் பேச்சிற்கும் போக்கிற்கும் வளைந்து கொடுப் பதை எந்தக் காலத்திலும்அவளால் தவிர்க்கமுடிந்ததில்லை. ஆத்மநாதனிலே அவள் சிறப்பாகக் கண்டதுதான் என்ன? அவளுக்கே அது புதிர்தான்.

உணர்ச்சிகளை அடக்க இயலாத, உணர்ச்சிகளிலே ஆழ்ந்துபோகிற ஆத்மநாதனைச் சீதா தனது இதயக் கமலத்திலே எழுந்தருளச் செய்து, பாசமலர்களாலே அநவரதமும் பூஜிக்கக் காரணம் யாதோ? சீதாவுக்குத் தெரியவேயில்லை.

அவனுடைய குறைகளிலே அவள் நிறைவு காண் கிறாள். பொய்யின் பரம விரோதியான சீதா, ஆத்ம நாதன் சொல்வது பொய்யென்று தெரிந்துங்கூட அவனை மன்னித்துவிடத் தவறியதேயில்லை.

எப்படி ஊசிப்போன மோதகத்தையும், பழுதாய்ப் போன வடையையும் அவள் பல்லைக் கடித்துக்கொண்டு தின்றுவிடுகிறாளோ, அப்படியே ஆத்மநாதனின் குறைகளை யும் சிறு வயதிலிருந்தே மென்று சீரணித்து விடுகிறாள். ஆச்சரியந்தான்.

சீதாவின் மனம் இறந்த காலத்தை நோக்கித் தாவு கிறது. ஏழு எட்டு வருடங்களுக்கு முந்திய சம்பவங் களிலே அது நிலைக்கிறது. செல்வரத்தினத்தின் அறிவுத் தடத்திலே துளைந்தாடிய நாட்கள் நினைவிலே திரை விரிக் கின்றன.

அப்பொழுது சீதாவிற்கு வயது பதினறு. ஆத்மநாத னுக்கு வயது பத்தொன்பது. அவள் எஸ்.எஸ்.சி.யில் படித்த காலம். அவன் எச்.எஸ்.சி.யில் கற்றுவந்த நேரம்.

கல்லூரியிலே இவர்களிருவரும் படித்ததிலும் செல்வ ரத்தினத்திடம் படித்ததே அதிகம். ஷேக்ஸ்பியரிலிருந்து கம்பன் வரை, காளிதாசனிலிருந்து மில்டன்வரை, வ. வே. சு. ஐயர் தொடக்கம் புதுமைப்பித்தன் வரை, அவர் புலவன், எழுத்தாளன் என்று பலரையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

ஆரம்பத்திலே செல்வரத்தினத்திற்குத் தமிழிலே விஷயங்களை விளக்குவது கடினமாகத்தானிருந்தது. ஆனல் காலகதியில் அதுதான் சுகமாகப்பட்டது. பிறந்த மண் ணேடும், பிறப்போடு கலந்துவிட்ட மொழியோடும் ஒட் டிக்கொள்வது என்றைக்கும், யாருக்கும் இயல்பான ஒன்றுதானே?

குருட்டாம் போக்கில், ''நான் சொல்வதையெல்லாம் நம்பு'' என்ற ரீதியில் அவர் கற்றுத் தரவில்லை. அறிவு விளக்கினை ஏந்திச் சென்று சீதாவுக்கும், ஆத்மநாதனுக் கும் இருண்ட இடங்களையெல்லாம் விளக்கி வைத்தார் அவர்.

புதியன சொல்லும் பொழுது அவர் ஒரு குழந்தை போல மாறிவிடுவார். தெரிந்ததையும் தெரியாதது போலப் பாவனை செய்து அவர்களின் சிந்தனையைத் தூண்டி, நல்லதைக் கறந்தெடுப்பதில் அவர் அசகாய சூர ராய் இருந்தார்.

''ஐயா எவ்வளவு அறிவாளி? நெஞ்சுடலான தத்து வங்களையும், தெளிந்த நீர்போல இலகுவாய் விளக்கும் இவருக்கு இணையேயில்லை. ஆனல், தமது வாழ்க்கை யிலே......? குடிகாரன் மகள் என்ற நினைவே என்னைக் கொல்கிறதே'' என்று கண்ணீரிலும், புன்னகையிலும் கலந்த எண்ணங்களில் சீதா மிதந்த நாட்கள் பலப் பல,

ஒரு நாள் செல்வரத்தினம் புது மாதிரியிலே தமது பாடத்தைத் தொடங்கினார்.

''இலக்கியத்தைப் படியுங்கள். ஆனால், இலக்கிய கர்த்தாவாக மட்டும் மாறிவிடாதீர்கள். எழுதிக் குவிக்க கை துருதுருத்தால், பேசாமல் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு வயலுக்குப் போய்விடுங்கள். புலவர்கள் தமது கவிதைகளிலே எதைக் கற்பிக்கிறார்களோ, அதனை அவர்கள் துன்பத்திலிருந்தே கற்றுக்கொள்கிறார்கள். (They learn in suffering what they teach in song) இது இலக்கிய கர்த்தாக்களுக்கு நல்ல பாடமாக இருக்க வேண்டும்'' என்றார் அவர்.

தன் தந்தை, தான் எழுதிய கவிதையைப் பார்த்து விட்டுத்தான் இவ்வாறு கேலி செய்கிறார் என்பது சீதாவுக்கு விளங்கியது. அவள், ''இப்படி எல்லாரும் விலகி விலகிப் போனால், இலக்கியம் உருப்பட்டாப் போலத் தான்'' என்று ரோசத்தோடு கூறினாள்.

ஆத்மநாதன் எப்பொழுதும் சீதாவின் பக்கம்தான். ''கதையை, கவிதையை ரசிப்பது கடலின் கரையிலே நின்று அதன் ஆழத்தையும், அலையையும் பார்த்து மகிழ்வதைப் போலத்தான். புலவனின், எழுத்தாளனின் முயற்சியோ அந்த கடலில் இறங்கிச் சிருஷ்டியாகிய முத்தினைக் கொண்டுவருதலாகும். அத்தகையவனை நான் மதிக்கிறேன், நேசிக்கிறேன்'' என்றான் அவன்.

''ஆத்மநாதா... ஜாக்கிரதை! 'கவிதை துன்பத்தின் சகோதரி. எந்தவொரு மனிதன் துன்பப்பட்டு அழுகிறானோ அவன் ஒரு கவிஞன்தான். அவனுடைய கண்ணீர்த் துளி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலாகிறது. அப்படிப் பட்டவனுடைய இதயமே கவிதையாகிறது' என்றார் ஒரு பெரியார்.''

''நான்கூட ஒரு காலத்திலே கவிதை இயற்றினேன். அது ஒரு முட்டாள்தனம்'' என்று செல்வரத்தினம் சிரிப்பிலே தொடங்கி, பெருமூச்சிலே தமது பேச்சை முடித்தார். அவரின் கண்கள் கலங்கின. எட்ட இருக்கும் ஏதோ

ஒன்றைத் தொட முயல்ப்வர் போல அவர் கண்களில் ஓர் ஏக்கம்.

ஆத்மநாதனும் சிதாவும் வியப்போடு அவரைப் பார்த்தார்கள்.

## 9.

அங்கு சிறிதுநேரம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை உடைத்துக்கொண்டு சிதாதான் முதலிலே பேசினுள். ''எனது கவிதை பாழ்பட்ட சமுதாயத்தின் கண்களைத் திறக்கும் மருந்தாக இருக்குமானுல் அப்படியான கவிதைக் கண்ணீர் என்னிலிருந்து கடலாகப் பெருகட்டும்'' என்று சொன்னவள், 'எனது கவிதை' என்றதற்காகத் தன் பல்லைக் கடித்துக்கொண்டாள்.

செல்வரத்தினம் அவள் சொன்னதைப் பிடித்துக்கொண்டார். ''ஓ! அப்படி வா வழிக்கு. நீ கவிதையும் இயற்றுகிருயா? ஆத்மநாதா! உனக்கும் இந்தத் தொற்றுநோய் இருக்கவேண்டுமே? உண்மையைச் சொல்'' என்று ஒன்றுந் தெரியாத அப்பாவிபோலக் கேட்டார் அவர்.

ஆத்மநாதனும், சிதாவும் கூச்சத்தோடு தலை குனிந்தனர். செல்வரத்தினம் சாய்மனை நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தபடி, ''சரி எங்கே உங்கள் கவிதைத் திறமையைப் பார்ப்போம். கண்ணீர் என்ற தலைப்பிலே ஒரு கவிதை இயற்றுங்கள் பார்க்கலாம்'' என்ருர்.

தூண்டுதல்தானே வேண்டியிருந்தது? இளமை உள்ளங்கள் சிருஷ்டியின் நிலைக்களன்கள் அல்லவா?

கடதாசியும், பேனுவும் வந்தன. சிதாவும், ஆத்மநாதனும் கடதாசியிலே சொல்லேர் உழவு செய்யத் தொடங்கினுர்கள்.

பாடல் சில நிமிடங்களில் எழுதி முடிந்தது. செல்வ ரத்தினம் முதலில் ஆத்மநாதனின் பாடலைப் பார்வை யிட்டார்.

மாலைச் செவ்வானில் வலம் வந்த சூரியனும்
மாலை மறைய மறைகின்றான் மேற்கடலில்
நீல விதானத்தில் நித்திலங்கள் பூத்திடலும்
சாலவே வந்து நின்று சந்திரனும் ஆடுகிறான்.

சந்திரனின் ஆடலிலே சஞ்சலங்கள் நீங்குமென
வந்தித் திருந்த வனிதையிவள் காதலனைச்
சந்திக்க மாட்டாமற் சாநிறைந்த சிந்தையளாய்க்
கந்தமலர் மேனி கருகப் புலம்புகிறாள்.

எண்ணம் பிழைக்க இளமை பலியாகக்
கண்ணீர் பெருக்கிக் கதறி உளங்குமுறி
வண்ணம் அழிந்து வழிமேல் விழிவைத்துப்
புண்ணுள்ளத்தைக் கீறிப் புலம்பி அழுகின்றாள்.

தென்றல் பகையாகத் தேனிலவு தீயாக
நின்றுதன் வாயிலிலே நெடுமூச் செறிகின்றாள்.
சென்றநாள் வாழ்வுகளைச் சிந்தனையிற் கொண்டுவரக்
கன்றிவிழி யுருகிக் கண்ணீர்க் கடலாச்சே.

''கண்ணீரே! கண்ணீரே! காரிகையென் கண்ணீரே!
உண்ணீரே என்னுயிரை உடலென்ற பாத்திரத்தில்
தண்ணீரே போலத் தருகின்றேன் உண்ணீரே
பண்ணீரே சாக''வெனப் பாவை புலம்புகின்றாள்.

ஆத்மநாதனின் பாடலிற் சொற்களின் மாயத்தை யும், காதலின் கண்ணீரையும் கண்டு செல்வரத்தினம் சிறிது நயந்தார். ஆனால், காலாதிகாலமாகக் கவிஞர் சென்ற தடத்திலேயே ஆத்மநாதனும் சென்றமையை அவரால் ஊன்றி ரசிக்க முடியவில்லை. 'காதல், காதல், காதல், காதல் போயிற் சாதல், சாதல், சாதல் என்றே

பாடுவதால், சூழவுள்ள சமுதாயத்திற்கு என்ன பயன்? காதல் என்ற உணர்வு மிகைப்பட்டு அசீரணத்தை உண்டாக்கித் தமிழினத்தின் வாழ்வைப் பாழாக்கித் தமிழ்க் கவிஞரின் கவித்துவத்தை மூடமாக்கிவிட்டது' என்று அவர் தனக்குள் நினைத்துச் சிரித்துக்கொண்டு, ''உம்... பரவாயில்லை. நல்ல சொல்லாட்சி'' என்று சொல்லிய வண்ணம் அப்பாடலை ஆத்மநாதனிடமே திருப்பிக் கொடுத்தார்.

அடுத்து சீதாவின் கவிதை. அது ஒரே ஒரு பாடல் தான்.

சாடும் சமூகக் கொடுமைகளால்
சாதிப் பிரிவின் கேடுகளால்
வாடும் மக்கள் நாள்தோறும்
வடிக்கும் கண்ணீர் ஓர்நாளில்
ஓடும் காட்டா ருகியிந்த
உலுத்தர் கூட்டைச் சடமாக்கும்
நாடும் கண்ணீர் இதுவேயாம்
நாமும் வடிப்போம் கண்ணீரே.

இந்தப் பாடலிலே சொற்களின் மாயக் கவர்ச்சி யில்லை. ஆனால் புதிதாகப் பிறக்கப் போகும் சமுதாயத்தின் பிரசவ வேதனை இதிலே துலாம்பரமாகத் தெரிந்தது. சீதாவின் உள்ளக் குமுறலும் துல்லியமாக வெளிப்பட்டது. மக்களின்தாழ்வு நோக்கித் துடிக்கும் துடிப்பும் அவர்களுக்கு விமோசனம் ஏற்படவேண்டுமென்ற உள்ளத்தாசையின் பிரதிபலிப்பும் சீதாவின் பாடலை உயர்ந்த தரத்திற்கு ஏற்றியிருந்தன.

இவ்வுண்மையைச் செல்வரத்தினத்தால் மறைக்க முடியவில்லை.

''சீதா! உன் கவிதையிலே உனது மனக் குமுறலை நன்றாக வடித்திருக்கிறாய். ஆத்மநாதன் சென்ற பாதை பழைய பாதை. அது சுவைக்கவில்லை. நீயோ மக்களின் துன்ப துயரங்களின் மூலத்தை அறிந்துகொண்டு அதைச் சொல்லிலே வடிக்க முயன்றிருக்கிறாய். உனது அனுபவ

மின்மையால் கவிதை பூரணமடையவில்லை என்பது உண்மையே. ஆனால், எதிர்காலக் கவிதை நோக்கினை நீ இனம் கண்டுகொண்டதை இக்கவிதையால் புலப்படுத்திவிட்டாய். காலம் மாறிக்கொண்டு வருகிறது. வானத்தையும், மதியையும், மலரையும், புனலையும், காதலையும், அது தரும் ஏக்கங்களையும் பாடுவதும், எழுதுவதும் மறக்கப்படப் போகின்றன. உண்மையும், ஏழ்மையும், எளிமையும் அவற்றின் போராட்டங்களும் வெற்றி தோல்விகளுமே எதிர்கால எழுத்தின் கருக்களாய் அமைந்திடும். அவையே நசிகின்ற சமூதாயத்தை நல்ல பாதையில் வழி நடத்தப் போகின்றன. அந்த புதுமைக் காவியத்தின் குரல் தான் உன் கவிதையிலே கேட்கிறது. நீ உனது எழுத்துக்களால் எனக்கு பெருமை தேடித்தரப் போகிறாய்'' என்று அவர் சீதாவிற்குப் புகழ்மாலை சூட்டினார்.

சீதா லஜ்ஜை கொண்டு தலை குனிந்தாள்.

எனினும் அவளால் ஆத்மநாதனைப் பார்க்காதிருக்கக் கூடவில்லை. ஆத்மநாதன் தனது பொறாமைத் தீயிலே தானே வெந்த வண்ணமிருந்தான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

அடுத்தநாள் தனிமையிலே ஆத்மநாதனைச் சந்தித்த பொழுது, சீதா ஆத்மநாதனை நோக்கிச் சொன்னாள் :

''ஐயா சரியான பாரபட்சம் பிடித்தவர். தம்முடைய மகள் என்பதால் என்னை 'ஆஹா ஊஹூ' என்று புளுகித்தள்ளிவிட்டார். நான் இனிக் கவிதை எழுதப் போவதில்லை.''

''ஏன் சீதா? உண்மையிலே உனது கவிதை நன்றாகத் தான் இருந்தது. நான்தான் வெறும் தென்றலையும், சந்திரனையும், காதலையும் கொட்டியடித்துக் குழப்பம்பண்ணி விட்டேன். நீ கவிதை எழுதவென்றே பிறந்தவள்'' என்று ஆத்மநாதன் சொன்னான். அவன்உதட்டிற்கும், உள்ளத்திற்கும்தொடர்பிருக்கவில்லை. என்பது அவனது படபடப்பிலேநன்கு புலனாயிற்று.

சிதா ஆத்மநாதனை அன்போடு பார்த்து, ''சேச்சே உங்கள் கவித்திறனிலே ஆயிரத்தில் ஒன்றுகூட எனக்கு இல்லை. தயவு செய்து என்னை நெருக்காதீர்கள். எழுத்துலகிற்கு நேற்றோடு பிரியாவிடையளித்துவிட்டேன்'' என்றாள்.

ஆத்மநாதன் ஒன்றும் பேசவில்லை. சிதா மேலும் தொடர்ந்தாள்.

''நீங்கள் எழுத்துலகிலே தீபமாக ஒளிவீசும்போது அந்த தீபத்தைத் தூண்டிவிடும் தூண்டுகோலாக நான் இருந்தேன் என்ற பெருமை மாத்திரம் எனக்குக் கிடைத்தால் அது போதும்.''

பின்பு ஆத்மநாதன் சிதாவை நெருக்கவில்லை. நெருக்குவதில் பயன் ஏற்படாது என்பதும் அவனுக்குத் தெரியும். சிதா பிடிவாதம் பிடித்தால் அதற்கு முடிவேயிருக்காது. அவள் அதற்குப் பிறகு கவிதையோ, கதையோ எதுவும் எழுதவேயில்லை.

இன்று ஆத்மநாதன் பிரபல எழுத்தாளன். அதிலே சிதாவுக்கு அளவிடமுடியாத பெருமை! மகிழ்ச்சி!

ஆனால், ஆத்மநாதன் தன் எழுத்திலே புலப்படுத்தும் உணர்வுகளை வாழ்க்கையிலே பயன் செய்ய முயல்கிறானா? என்பதே சிதாவின் இன்றைய சந்தேகம். ''ஊருக்கும், உலகத்திற்கும் பயந்து, தன் தாய் போன்றவளின் இறுதிப் பயணத்திலேகூடக் கலந்துகொள்ளாமல் எல்லாம் முடிந்த பின்னர் ஒளித்து ஒளித்துக் கள்வனைப் போல் வந்தவனை, எவ்விதம் நம்புவது? இலட்சியங்களை எழுத்தில் உருவாக்கிவிட்டு வாழ்க்கையிலே அவற்றை உதாசீனம் செய்யும் இவன், எதிர்ப்புப் புயல்களை எப்படிச் சமாளிக்கப் போகிறான்?''

சிதாவிற்கு விளங்கவில்லை. விளங்கவேயில்லை. அவள் பெருமூச்சுடன் தனது இடத்திலிருந்து எழுகிறாள்.

முற்றத்து மரங்களின் இலைகளைத் தடவி விளையாடிய மஞ்சள் வெயில் வேலியையும் கடந்து அப்பாற்சென்று

மறைகிறது. இரண்டு காகங்கள் ஒன்றை ஒன்று மிக நெருங்கியபடி வானத்திலே பறந்து பறந்து கண்ணுக்கு மறைகின்றன.

சீதா விளக்கேற்றுவதற்காக உள்ளே செல்கிருள்.

## 10.

''ஐயரின் மனத்தில் நஞ்சைக் கொட்டிவிட்டேன். அது வேலை செய்யாமல் போகாது. செல்வரத்தினத்தை யும், மகளையும் சந்தி சிரிக்க வைப்பதற்கு இதுதான்முதற் படி'' என்று எண்ணியபடி சரவணையர் நடந்துகொண்டி ருக்கிறுர். அவருடைய நெஞ்சிலே புயலுக்கு ஆரம்ப அறி குறியான பெரியதொரு அமைதி நிலவுகிறது. அவரது வாய் பொச்சடிக்கிறது. 'இப்பொழுது ஒரு போத்தல் கள் அடித்தால் ..?'

வழியிலே அவரின் சகலன் சுப்பர் எதிர்ப்படுகிறுர். சரவணையர் துரியோதனன் என்றுல் சுப்பர் சகுனி. இரண்டு பேருக்கும் நல்லது செய்யத் தெரியாது. கோணல் வழியிலேதான் அவர்களின் புத்திபோகும். முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம் என்பார்களே அதுபோல!

இரண்டுபேரும் தரகர்கள். 'வெள்ளைக் காகம் வந்து வீட்டிலிருந்த குண்டுச் சட்டியைக் குண்டுக்கட்டாகத் தூக் கிச் சென்றது' என்று வாய் கூசாது சொல்லி, அதை நிரூபிப்பதிலே தங்கள் முழுத் திறமையையும் காட்டி உழைப்பவர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலே யாரின் கை களிலே எப்படி அகப்பட்டாலும் பாம்பு போலநெளிந்து நழுவித் தப்பிவிடக்கூடிய அதிசமர்த்தர்கள். இருவரும்

போடும் திட்டங்கள் எப்பொழுதுமே தவறியதில்லை. இருவரும் பக்கத்துப் பக்கத்து வீடுகளிலே ஒன்றாக ஒன்றை எண்ணி ஒருமுகமாய் வாழ்ந்துவருகிறார்கள். பாம்பும், பல்லியும், ஒன்றாய் வாழ இயலாதுதான். ஆனால் பாம்பும் பாம்பும் இணைந்து பிணைந்து வாழத் தடையில்லையே.

சரவணையருக்குச் செல்வரத்தினத்திலே ஏற்பட்ட கறளுக்கு ஆயுள் ஐம்பது. சுப்பருடையதற்கோ வயது ஐந்து. ஆனால் முன்னவருடைய துவேஷத்திற்குப் பின்னவருடைய துவேஷம் எள்ளளவும் குறைந்ததல்ல. இருவரும் ஒருவராகி செல்வரத்தினத்தை அள்ளி வைப்பதிலேயே கவனமாய் இருந்தார்கள்.

சரவணையருக்கு செல்வரத்தினத்தின் மேல் ஏன் இவ்வளவு கோபம்?

செல்வரத்தினம் சொந்த மைத்துனன் என்ற உரிமையால் தம் சகோதரியைச் செல்வரத்தினத்திற்கு மணம் முடித்து வைத்து, அவரைத் தமக்கு அடிப்படுத்தவும். அவரின் திரண்ட முதிசத்தைத் தமது சகோதரிக்கு ஆக்கி அதன்மூலம் ஆண்டு அனுபவிக்கவும் சரவணையர் திட்டம் தீட்டினார்.

ஆனால், செல்வரத்தினமோ இக்கோரிக்கையைத் தூக்கி எறிந்து சரவணையரின் நெஞ்சிலேயே மிதித்துவிட்டார்.

பாம்பு சீறியது. சிவபாக்கியத்தையே ஒழித்துக்கட்ட சுப்பரோடு சேர்ந்து முயன்றது. படுதோல்விதான் கண்ட பயன்.

சரவணையர் பழிவாங்க நீண்டகாலம் காத்திருக்க நேரிட்டது. செல்வரத்தினம் ஊர் திரும்பி பதினைந்து ஆண்டுகளாகியும் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

சுப்பருக்கோ இரு வகையான ஆத்திரங்கள். திரண்ட செல்வத்திற்கும், காணிபூமிகளுக்கும் உரியவராயிருந்த செல்வரத்தினத்தின் ஏகபுத்திரியாகிய சீதாவைத் தமது

மகனுகிய தில்லைநாதனுக்கு (சிறுவயதில் ஆத்மநாதனுடன் சண்டை போட்டுச் சீதாவிடம் வாங்கிக்கட்டியவன்) மனைவியாக்க நப்பாசை கொண்டிருந்தார்.

தில்லைநாதன் படு காவாலி. சிறு வயதிலேயே பள்ளிப் படிப்பிற்கு முழுக்குப் போட்டு, குடி, கூத்தி என்று சுற்றித் திரிந்தவன். ஊரில் நடைபெறும் அடிபிடிசண்டைகளுக்கெல்லாம் காரணனே இவன்தான். சுப்பருடைய காணி பூமிகளும், சொத்துச் சுதந்திரமும், இவனுக்காக வழக்காடி வழக்காடிக் கோடேறிக் கரைந்துவிட்டன. இந் நிலையில் இவன் குணமறிந்து யாரும் இவனுக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை.

சுப்பருக்கு இது பெரும் தலையிறக்கம். இந்தத் தலையிறக்கத்திலிருந்து விடுபடச் சீதாவை மருமகளாக்குவது தான் ஒரே வழியாகத் தோன்றியது. செல்வரத்தினத்தின் ஐசுவரியத்தைக் கொண்டு சீதாவின் சாதிக் கறையைக் கழுவி விடலாமென்றும், தாம் நினைத்ததைச் சாதிக்கலா மென்றும் அவர் நெடுநாட் கனவு கண்டார்.

தமக்கு இது விருப்பமில்லாதது போலவும், சாதியை விட்டு இறங்கும் அவமானம் தமக்கு ஏற்படுவது போலவும் காட்டி, ஆனுல், நீண்டநாள் உறவு விட்டுப் போகாமல் இருக்கவும், செல்வரத்தினத்தின் பழியிலிருந்து காப்பாற்றி அவரைக் கரை சேர்க்கும் தியாகத்தைத் தாம் செய்யவும் முன்வந்ததுபோல பம்மாத்துப் பண்ணி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சீதாவை மணம்பேசி ஆட்களை அனுப்பினுர் சுப்பர்.

செல்வரத்தினமும், சீதாவும் அவரின் கோரிக்கையை எள்ளி நகையாடி, வந்த ஆட்களைத் திருப்பி அனுப்பிவிட்டனர். அன்று தொடங்கியது அவரின் குரோதம்.

பின்பு இக் குரோதம் கிளைவிட வேருெரு சந்தர்ப்பமும் ஏற்பட்டது. சுப்பரின் வடக்குப்புற வேலியைஅடுத்து செல்வரத்தினத்தின் காணி ஒன்று இருந்தது. அதிலே நீண்டகாலமாகத் தாழ்ந்தசாதிக் குடும்பம் ஒன்று குடி

யிருந்து வந்தது. அந்தக் காணியிலிருந்து அக் குடும்பத்தை வெளியேற்றி, செல்வரத்தினத்திடமிருந்து அதை மலிவு விலைக்குத் தட்டி, அதில் ஒரு வீட்டைக் கட்டவும், அதனை தன் மகனுக்குச் சீதனமாய்க் கொடுக்கவும் சுப்பர் திட்ட மிட்டார்.

திட்டம் போட்டாயிற்று. செயற்படுத்த வேண்டுமே? ஒருநாள் அவர் சரவணையரையும் அழைத்துக்கொண்டு செல்வரத்தினம் வீட்டிற்குப் போனார்.

வழக்கம் போல சாய்மனைக் கதிரையினுள்ளே புதைந்து போய்ப்புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தார் செல்வரத்தினம். பக்கத்திலே பெட்டியொன்றை இழைத்தபடி சிவபாக்கியம் இருந்தாள். சீதாவும் ஒரு பக்கத்திலேயிருந்து பத்திரிகை வாசித்தாள்.

சிவபாக்கியம் மரியாதையாக எழுந்து வீட்டுக்கதவோடு போய் நின்றாள். சீதா எழும்பவில்லை. செல்வரத்தினம் தலையை நிமிர்த்திப் பார்த்து நெஞ்சிலே புத்தகத்தை வைத்துவிட்டு, ''மச்சான்! சுப்பண்ணை! வாருங்கோ'' என்று வரவேற்றார்.

''கோவிச்சியின் நடப்பைப் பார். ஒரு ஒதுக்க பதுக்கம் இல்லை. மரம்போல நிற்கிறாள். இவனைப் பார்! பணப் பெருமை. வயதைக்கூடக் கவனிக்காமல் கதிரையில் சாய்ந்தபடியல்லவா வரவேற்கிறான்?'' என்று சகலர் இருவரும் மனதிற்குள் கறுவிக்கொண்டு, அதை வெளிக்காட்டாமல், ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.

என்றாலும் வந்தகாரியம் முடியவேண்டுமே! நெஞ்சுக்குள் ஆலகாலத்தை அடக்கிக்கொண்டு, உதட்டிலே இனிப்பைக் காட்டி இருவரும் செல்வரத்தினத்தின் முன்னால் இருந்த கதிரையில் அமர்ந்தார்கள்.

குசலப் பிரச்சனம் நடந்தது. கோப்பி வந்தது. குடிப்பார்களா? ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கோப்பியைக் குடிக்காமலே கடத்தினார்கள். செல்வரத்தினமோ, சிவபாக்கியமோ கெஞ்சிக்கவில்லை. 'என்ன திமிர்?'

பேச்சைத் தொடங்கியது. சுப்பர் விஷயத்தை விளக்கினார். ''இதோ பார் செல்வரத்தினம்! நீ இன்னும் சிறு பிள்ளையல்ல. உனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். உன் காணிகளோ அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கின்றன. உனக்கே அவற்றின் விபரம் தெரியாது.

''உதாரணமாகப் பார். என்னுடைய வீட்டு வடக்கு எல்லையில் இருக்கிற காணி உன்னுடையதுதானே? இதிலே இருபது வருடத்திற்கு மேலாக முத்தன் குடியிருந்து வருகிறான். நாளைக்கு அவன் இதற்கு ஆட்சிக்கு வந்துவிட்டால்...? கொஞ்சம் யோசித்துப் பார்?''

செல்வரத்தினம் தலையை நிமிர்த்தி எழுந்து உட்கார்ந்தார். சிரிப்பு அவரின் உதடுகளிலே விளையாடியது. ''சுப்பண்ணை, முத்தன் பாவம்! இருக்குமட்டும் அவன் இருந்து போகட்டுமே? பிறக்கும்பொழுது இந்த மண்ணைக் கொண்டா வந்தோம்? போகும்போது கொண்டா போகப் போகிறோம்? எந்தவோ ஒருகாலத்தில் எங்கள் மூதாதையர் ஆண்டனுபவித்தது. அதை முத்தன் சொந்தமாகஎடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளட்டும். பரவாயில்லை. எனக்குத்தான் வேண்டியது இருக்கிறதே! இதையும் பெற்றுக்கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன். 'No possessions are good, but by good use we make of them' (எந்த உடைமையையும் நாம் நல்ல முறையிலே பயன் படுத்தாவிட்டால் அவற்றால் சுகமில்லை.)'' என்று கேம்ரிட்ஜ் யூனியர் சித்தியெய்திய சுப்பருக்கும், அதே வகுப்பில் மூன்று ஆண்டுகளைச் சுகமே கழித்த சரவணையருக்கும் உறைக்கும்படியாக அவர் பதிலிறுத்தார்.

சுப்பர் சிரித்தார். சரவணையர் முகத்தைக் கடுகடு என்று வைத்துக்கொண்டார்.

மீண்டும் சுப்பரே, செல்வரத்தினத்தை அமைதியாக நோக்கியபடி, ''என்னவோ நன்மைக்குக் காலமில்லை. உனக்கு விருப்பமில்லாவிட்டால் சரவணையருக்காவது அந்தக் காணியை எழுதிக் கொடு. எல்லையிலே பன், பனையை

வைத்துக்கொண்டு என்னால் அமைதியாக இருக்க முடியாது. சரவணையரும் நானுமாய்ச் சேர்ந்து எப்படியாவது முத்தனைக் குடியெழுப்பி எங்கள் வழியைப் பார்த்துக் கொள்கிறோம்'' என்று 'பக்கத்திலிருப்பவனுக்குப் பாயாசம் விடு''என்ற பாணியிலே நயமாக எடுத்துரைத்தார்.

செல்வரத்தினத்திற்கு அவர்களின் நோக்கம் புரிந்தது. தம்மையும், தமது மனைவியையும், மகளையும் ஏசிப் பேசி அவமதித்து ஊரெல்லாம் வசைபாடிய இக் கயவர்கள், தமது காணி என்றதும் வாயைப் பிளப்பது அவருக்கு மிகவும் அருவருப்பாயிருந்தது.

இந்த அருவருப்பைக் காட்டவும், சூடாக ஏதாவது கூறி அவர்களைக் கூசவைக்கவும் நினைத்தவராய் அவர், ''மச்சான் சாதி வேளாளன் ஆயிற்றே! இந்தக் கீழ்சாதி மகனுடைய மண்ணிலே மிதித்தால்கூட அவருக்குத் தீட்டுப்பட்டுவிடுமே!'' என்றார்.

சரவணையருக்கு நெஞ்சிலே நெருப்பைக் கொட்டியது போல இருந்தது. இதுவரை ஒன்றும் பேசாதிருந்த அவர், ''நான் ஒன்றும் சும்மா பிச்சை கேட்க வரவில்லை. அதன் பெறுமதியைத் தருகிறேன். உனக்குப் பயன்படாத காணி தானே'' என்று கடுகடுப்பாகச் சொன்னார்.

செல்வரத்தினம் ஒன்றும் பேசவில்லை. அவரது அமைதியிலே கடந்தகால நிகழ்ச்சிகள் குமுறி ஆர்ப்பரித்திருக்க வேண்டும். இதைச் சுப்பராவது, சரவணையராவது கவனிக்கவில்லை. பதிலாக விஷயம் சாதகமாகி வருவதாக நினைத்துக்கொண்டார்கள்.

இப்பொழுது சுப்பர் சிவபாக்கியத்தை நோக்கித் தமது வலையை விரித்தார். ''சிவபாக்கியம்! நீதான் இதை யோசிக்கவேண்டும். செல்வரத்தினம் இன்றைக்கும்அன்று போல விளையாட்டுப்பிள்ளைதான். அவனுக்கு எதுவும் அக்கறையில்லை. சிகறற் கிடைக்காவிட்டால் காசையே சிகறற்றாகச் சுருட்டிக் குடிக்கக்கூடியவன் இவன். உன் பிள்ளையின் சொத்தை நீதான் கவனிக்க வேண்டும். நாளைக்கு

நீயும் மகளுந்தான் கஷ்டப்படுவீர்கள். நீ யோசித்துச் சொல்'' என்று கடைசிப் பாணத்தையும் வீசினர்.

சிவபாக்கியம் சிரித்தாள். ''அன்றைக்கும் இன்றைக்கும் இவர்தான் எங்கள் தஞ்சம். இவர் சொல்லும் வழியும், செல்லும் வழியுமே எனக்கும் வழி. இவருடைய முடிவுதான் எனது முடிவும். என்னைத் தனித்துப் பிரித்துக் கேட்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்று அவள் சொன்ன பொழுது, சகலர் இருவரின் முகங்களிலும் அசடு வழிந்தது. சரவணையர், ''பெரிய கற்பரசிதான்'' என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டார்.

''அடடா! கோவிச்சியின் மூளையைப் பார். நீங்கள் எங்களின் கஷ்ட நஷ்டத்தைப்பற்றி அக்கறைப்படுத்த வேண்டாம் என்று எவ்வளவு நறுக்காகச் சொல்கிருள்'' என்று நினைத்து சுப்பர் வயிறெரிந்தார்.

சரவணையர் பொறுமையை இழந்தார். ''செல்வரத்தினம்! இருபத்தைந்து வருஷங்களுக்கு முந்தி நீ செய்த பிழையால் உற்ருர் உறவினரையெல்லாம் இழந்து தனிமரமாய் நிற்கிருய். என்ருலும் நாளைக்கு உன் கடமை காரியங்களைச் செய்யப்போவது எங்களின் பிள்ளைகள்தான். இதை மறந்துவிடாதே. ''பெண் கோழி கூவிப் பொழுது விடியாது'' என்று அவர் பொரிந்து தள்ளினர்.

இதற்குச் சீதாதான் பதிலிறுத்தாள். ''சேவல் கூவாமலும் பொழுது விடியத்தான் செய்யும். எங்களுக்காக நீங்கள் உருகவேண்டியதில்லை. எங்கள் வழி எங்களுக்குத் தெரியும். ஐயா பண ஆசை பிடித்தவரல்ல. அவருக்கு இப்பொழுது இருப்பதே போதும். கேவலம், ஒரு சிறு துண்டு நிலத்திற்காக அந்த ஏழைகளின் வயிற்றிலே அடித்து அவர்களைத் தெருவிலே விட எங்கள் மனம் துணியாது. வீண் பேச்சுக்கள் எதற்கு?'' என்று அவள் தன்னை மறந்து எரிமலையாய் முழங்கினுள். பெண்மையின் விசுவரூபத்தினை அந்தப் பதினெட்டே வயதான இளம் பெண்ணிலே கண்ட இருவருக்கும் நெஞ்சிலே உதறல் எடுத்

தது. எதிர்பாராத அதிர்ச்சி! அதற்குப் பிறகும் அங்கு நிற்க அவர்களுக்குப் பைத்தியமா?

★

இன்று இந்த இரண்டு நச்சரவங்களும் துணைசேர்ந்து செல்வரத்தினத்தைச் சர்வநாசஞ் செய்யக் கங்கணம்கட்டி நிற்கின்றன.

சரவணையர், தமது திருவிளையாடலை —ஐயர் மனதில் நச்சேற்றியதை— சுப்பருக்குச் சொன்னபோது அவர் விழுந்து விழுந்து சிரிக்கிறார். தமது பாராட்டுக்கு அறிகுறியாகச் சரவணையரின் முதுகிலே தட்டிக்கொடுக்கிறார்.

தவசியின் கள்ளுக் கொட்டிலிலே ஒன்றுக்கு நான்கு போத்தல்களாகக் கள்ளை, அவன் தந்த கருவாட்டுச் சுண்டலோடு வயிற்றுக் கும்பிக்குள் தள்ளியவர்களாய், அவர்கள் போகும் வழியெல்லாம் வதந்தியென்ற நச்சு விதையைக் காண்பவர்களின் உள்ளங்களிலே விதைத்துச் செல்கிறார்கள்.

''அப்படியா விஷயம்? பிராமணனுக்கும் கோவியப் பொடிச்சிக்கும் காதலாமே? பிராமணப்பிள்ளை கோவிச்சியின் தந்தியைக் கண்டதும் செத்தவீட்டிற்குப் பறந்தடித்து வந்தாராம்? வெட்கமில்லாமல் இவ்விரு காதலர்களும் அருகருகே நெருங்கியிருந்து, பகிரங்கமாகக் காதலுரை நடத்தினார்களாம்'' என்று வயற்காடெங்கும் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்.

## 11.

அந்த வீட்டுத் தாழ்வாரத்திலே தூங்கும் 'அரிக்கேன் லாம்'பிலிருந்து கருமை ஏறிய சிமினியூடாக ஒளி பிதுங்கிக்கொண்டு வெளியே வர முயல்கிறது. குப்பை கூழங்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கின்றன.

கூரையின் வளையிலே கட்டித் தூங்கிக்கொண்டிருக்கும் ஏணையிலே அரைத் தூக்கத்திலே நெளிந்துகொண்டிருக்கிறான், ஆத்மநாதனின் கடைக்குட்டித் தம்பி. அவன் விட்ட சலம் பாம்புபோல நெளிந்து தரையை ஈரமாக்குகிறது. அதைக் கவனிப்பார் யாருமில்லை.

விருந்தையின் மறு பகுதியிலே தனது பாயை விரித்து அதிலே தனது தோய்த்த சட்டைக்கு 'இஸ்திரிக்கை' பிடிக்கிறான் இராமநாதன். அவன் ஆத்மநாதனுக்கு நேரே இளையவன். அவன், ஆத்மநாதனது செருப்புச் சத்தத்தைக் கேட்டுத் தலையைத் திருப்பியபொழுது, சிறிய சந்தனப் பொட்டு அவன் நெற்றியிலே அழகாகத் துலங்குவது தெரிகிறது. காலையிலும் மாலையிலும் உடைந்த, முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை வைத்துக்கொண்டு பொட்டு வைக்கும் கலையிலே அவன் ஈடுபடத் தொடங்கினால் நேரம் போவதே அவனுக்குத் தெரியாது. ஆள் கொஞ்சம் சொகுசாளி. உடை அலங்காரங்களிலே அளவுக்குமீறிய விருப்பம். எப்பொழுது ஆத்மநாதன் லீவில் வந்தாலும் அவனுடைய சட்டை, வேட்டிகளின் தொகையைக் குறைக்கும் சேவையிலே முன்னணியில் நிற்பவன் அவன். இந்த ஒன்றிற்காகவே ஆத்மநாதனோடு ஒட்டி உறவாடுவது போல ஒரு பாவனை. தமையன் காலால் இடும் வேலையை தலையாலே செய்வதுபோலப் பாசாங்கு.

இப்பொழுதும் ஆத்மநாதனின் வருகையால் மகிழ்ந்தவன்போல முகமலர்ச்சி காட்டி, ''வா அண்ணா'' என்று வரவேற்று அவன் கையிலிருந்த சூட்கேசை வாங்கிக்கொண்டு உள்ளே போகிறான்.

அப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுக் கையைப் பாவாடையிலே துடைத்தபடி சமையலறையில் இருந்து வந்த பாலாம்பிகை, ''பெரியண்ணா வந்துவிட்டார், பெரியண்ணா வந்துவிட்டார்'' என்று சைரன் ஊதுகிறாள். அதன் எதிரொலி போலச் சமையலறையின் பாத்திரங்கள் உருளுகின்றன சித்தியின் வரவேற்புபசாரத்தின் முதல் அங்கந்தான் அது.

பாலாம்பிகையின் சங்கோசையைத் தொடர்ந்து ஸ்ரீதரன், பரமேஸ்வரி, ஜகதாம்பாள், சந்திரமௌலி ஆகியோர் வெளியே ஓடி வருகிறார்கள். நாலே வயதான சந்திரமௌலி, ஆத்மநாதனின் காலைக் கட்டிக்கொண்டு தனது மூக்கிலிருந்து வழிந்த புனித ஜலத்தை பெரியண்ணாவின் உடையிலே பூசுகிறாள்; எட்டு வயதான ஜகதாம்பாள் சிறு குழந்தைபோல அவனுடைய சட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறாள். இவ்வளவும் சொக்லட்டுக்கும் விஸ்கோத்துக்குமாகவே என்பது ஆத்மநாதனுக்குத் தெரியாதா என்ன?

அவன், அவர்களை ஏமாற்றவில்லை. இராமநாதனிடம் சூட்கேஸ் திறப்பைக் கொடுத்து அதனுள் இருக்கும் விஸ்கோத்தை எடுத்துப் பங்கிடுமாறு சொல்கிறான்.

பிள்ளைகள் இப்பொழுது இராமநாதனை மொய்த்துக்கொள்ள ஆத்மநாதன் விடுதலைபெறுகிறான். நிம்மதிப் பெருமூச்சோடு விறுந்தைத் திண்ணையிலே இருந்த கதிரையிலே போய் அவன் உட்காருகிறான். பிரம்பறுந்து கிழடுதட்டிப் போன நாற்காலி 'கிறீச்' என்று சப்தித்து வீட்டு நிலையைப் பறைசாற்றுகிறது.

அறுந்த பிரம்பு பின்னலுக்குமேல் வழக்கமாகப்போட்டிருக்கும் பலகை இல்லாமையே அந்தப் பேரொலிக்குக் காரணம். தொடர்ந்து அதிலே அமர்ந்திருப்பது ஆபத்து என்பதை உணர்கிறான் ஆத்மநாதன்,

பலகையைத் தேடி சுற்றுமுற்றும் பார்க்கிறான். கண்ணுக்கெட்டிய தூரத்தில் கசங்கின பூக்களோடும், களிமண் பூச்சோடும் கிடந்த அந்தப் பலகை, "நான் என்ன செய்வது? எல்லாம் உன் தம்பியாகிய சந்திரமௌலியினதும், ஜகதாம்பாளினதும் வேலை! நேற்று அந்த இரண்டு வால்களும் என்னைத் தற்காலிக பீடமாக்கி, களி மண் சாமியை என்மீது பிடித்துவைத்து இந்த வீடெல்லாம் சாமிகொண்டு திரிந்தன" என்று சோகரசம் ததும்ப மௌனமாகத் தன் கதையை எடுத்துச் சொல்கிறது.

ஆத்மநாதன் எப்படியோ தன் காலில் ஒன்றை முட்டுக்கொடுத்தபடி பல்லைக் கடித்துக்கொண்டு அந்த நாற்காலியிலே அமர்ந்திருக்கிறான். உடையை மாற்றவோ, உள்ளே போகவோ மனம் இருந்தால்தானே!

தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீடென்றாலும், அவனுக்கும், அதற்குமிடையே என்றைக்கும் அதிகமான ஒட்டுறவு இருந்ததில்லை. ஐந்து வயதாக இருக்கும் போது தாய் இறந்துபோக, இந்த வீடு அவனைப் பொறுத்தவரையில் ஒரு விடுதியாகவே மாறியிருந்தது.

பிசாண் பிடித்த தலையணையும், கிழிந்த பாயும், குழந்தைகளின் மலசலமும், பல நாள் மெழுகாது வெடித்துப் புழுதி கிளம்பிய தரையும், அடிக்கடி மாறிமாறி ஏற்படும் நோய்களும் அந்த வீட்டை நரகலோகமாக்கி அவனைப் பயமுறுத்தாத நாளே இல்லை.

கொழும்புக்கு எழுதுவினைஞராகச் சென்ற நாளில் இருந்து அவனுக்கு ஓரளவு நிம்மதி. சுத்தமான உணவு, சுத்தமான படுக்கை, சுகமான வாழ்வு என்ற இவை எல்லாம் அங்கு அவனுக்குக் கிடைத்தன.

என்றாலும், எவ்வளவு உயரப் பறந்தாலும் பருந்து தனது இரையை நாடித் தரைக்குத்தானே வரவேண்டும்? அதுபோல என்னதான் செய்தாலும், எப்படி வாழ்ந்தாலும் வீடு என்ற ஒன்று இருப்பதால் அங்கு வரவேண்டித்தானே இருக்கிறது?

வீடா...? அவர்களுக்குச் சொந்தவீடு ஏது?

இப்பொழுது இருக்கும் வீடும் கோயிலைச் சேர்ந்தது. கோயில் எஜமானரின் தயவு, என்று இல்லாது போகின்றதோ அன்று நாகேந்திர ஐயரும், அவரின் வம்சவித்துக்களும் நடுத்தெருவில் நிற்கவேண்டியதுதான். அவர் தமது தந்தையாரிடம் முதுசமாகத் தர்ப்பைக் கட்டொன்றையும், மந்திரங்கள் தமிழிலே எழுதப்பட்ட இரு ஏடுகளையும், ஒட்டை உடைசல்களுடன் கூடிக் கழிம்பேறிப் போன சில பாத்திரங்களையும் பற்றிப் பெருமையடிக்கலாமே தவிர, ''இது எங்கள் வீடு'' என்று சொல்ல அவ

ருக்கோ, அவரின் பிள்ளைகளுக்கோ என்றைக்கும் வாய்ப்பு ஏற்பட்டதில்லை.

''யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் நிலத்துக்குச் சொந்தக்காரனுயிருக்கும் வேளாளனே உயர்ந்தவன். அவன் தனது வர்க்கப் பாதுகாப்பிற்கும், சுயநலங்களுக்கு மாகவே பிராமணர் தொடக்கம், தாழ்ந்த சாதியார் எனக் கூறப்படும் இனம் வரை பல சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறுன். குரு என்றும், ஐயர் என்றும் பிராமண சமூகத்தை உயர்த்துவதெல்லாம்தனது சொந்த நன்மைக்காகவேயன்றி வேறல்ல. இல்லாவிட்டால் அன்றும் இன்றும் எனது தந்தை கோயில் எஜமானர் முன்பு கூனிக் குறுகி அவர் தயவுக்காகக் காத்திருப்பதெல்லாம் ஏன்?என்றும் வறுமையையேஇவர்கவசமாகப் பூண்டிருப்பதும் ஏன்?''

இவ்வாறு பல புதிய தத்துவங்கள் அவ்வேளையிலே ஆத்மநாதனின் சிந்தனையை ஆக்கிரமிக்கின்றன.

சாண் ஏற முழம் சறுக்கும். ஐயரின் வாழ்க்கையிலே காணி வாங்கி வீடு கட்ட வசதி எப்படி ஏற்படும்?

ஆனுல் வசிக்கும் வீட்டையாவது ஒழுங்காகத் திருத்தி வைத்திருக்கலாமல்லவா? ஆத்மநாதன் வழக்கமாகத் தான் அனுப்பி வரும் மாதாந்த எழுபத்தைந்து ரூபாவோடு அவ்வப்போது ஓவர் டைம், பத்திரிகைச் சன்மானம் எனப் பெறும் பணத்தையும் இந்நோக்கத்திற்காகவே அனுப்பி வைத்தால்......?

''அப்பா கவனித்தால்தானே?''

அவருக்கு அந்த வேளையிலேதான் வேறு செலவு ஏதாவது காத்துக்கொண்டிருக்கும். அல்லது தமது சகதர்மிணிக்கு— அவளின் கட்டளையை ஏற்று— புதுப்புடவை வாங்கவேண்டிய நிர்ப்பந்தமாவது ஏற்படும். இந்த நிலையில் வீடு காடாயிருந்ததற்குக் கேட்கவா வேண்டும்?

சென்ற விடுமுறையில் அவனின் நண்பர்கள் இருவர் கிறிஸ்மஸ் லீவைக் கழிக்க அவனோடு கொழும்பிலிருந்து வந்தார்கள். அந்த வேளையில் அவர்கள் செல்வரத்

தினத்தின் வீட்டிலேயே தங்கியிருக்க ஒழுங்குகள் செய்ய வேண்டியிருந்தது.

ஆத்மநாதன் கூனிக்குறுகுகிறுன். ''வரும்பொழுது வழியிலே கண்ட தாழ்ந்த சாதிச் சிறுவனின் நிலைகண்டு நான் இரங்கினேன். இப்பொழுது என்னையும், எனது வீட்டு நிலைமையையும் பார்த்து நானே இரங்க வேண்டி இருக்கிறது'' என்று அவன் உள்ளம் நினைந்து நைந்து போகிறது.

ஐயரும், அவரின் மூன்ருவது மகன் சுப்பிரமணியமும் பசுவிற்கு வைக்கோல் போட்டு விட்டுக் கையிலே லாந்த ரோடு வீட்டினுள் நுழைகிருர்கள்.

வீட்டினுள் கலகலப்பைக் கண்டு ஆத்மநாதன் வந்து விட்டதை ஐயர் அறிந்து கொண்டு, அதன் வழக்கமாக இருக்கும் கதிரையை பார்க்கிறுர். ''அப்பா'' என்றபடி ஆத்மநாதன் தன் ஆசனத்திலிருந்து எழுந்து நிற்கிறுன்.

நெஞ்சுக்குள்ளே எரியும் எரிமலையையும் கூடக் குளிர்மை செய்துகொண்டு, பிள்ளைப்பாசம் ஐயரின் முகத் திலும், அகத்திலும் ஆட்சி செய்கிறது.

சுப்பிரமணியன் திரும்பிப்பாராமல் விளக்கோடு உள்ளே போகிறுன். அவனுக்கும் ஆத்மநாதனுக்கும் ஒத் துப்போவதில்லை. என்ருே ஒருநாள் சுப்பிரமணியம் செய்த ஏதோ குற்றத்திற்காக ஆத்மநாதன் அவனுக்கு அடிக்கப் போக அவன் கல்லைத் தூக்கிக்கொண்டு அவனை அடிக்க வர விஷயம் விரஷமாகிவிட்டது. அன்றிலிருந்து சகோத ரர் இருவருக்கும் பேச்சுவார்த்தை கூடவில்லை.

இப்பொழுதும் அவன் தமையனேடு முறைத்தபடி தான் வீட்டிற்குள்ளே செல்கிருன்.

''தம்பி! இப்போதுதான் வந்தாயா? உடுப்பை கூடக் கழற்றவில்லையே? கழற்றிப் போட்டு முகம் கழுவி வா'' என்று அன்போடு ஐயர் சொல்கிருர்.

தந்தையின் கட்டளையை ஏற்று யந்திரம் போலத் தன் கடமைகளை முடித்துவிட்டு ஆத்மநாதன் வருகிருன்.

தந்தையும், மகனும் சாப்பிட உட்காருகிறார்கள். சிடு சிடுத்த முகத்தோடு சித்தி அள்ளிப்போட்டதை, மூச்சைப் பிடித்துக்கொண்டு நெஞ்சு நிறைந்த அருவருப்போடு ஆத்மநாதன் விழுங்கித் தள்ளுகிறான்.

ஐயர் தலையை நிமிர்த்தாமலே ''எத்தனை நாள் லீவில் வந்திருக்கிறாய்?'' என்று கேட்கிறார்.

''மூன்று நாள் லீவு எடுத்திருக்கிறேன். ஏன் அப்பா கேட்கிறீர்கள்?''

''இல்லை! இன்னும் இரண்டு நாட்கள் கூடுதலாக லீவுக்கு எழுதிப் போடு'' என்கிறார் தந்தை.

ஆத்மநாதன் கேள்விக்குறியோடு தந்தையை நோக்குகிறான்.

''போன லீவிற்கு நீ இங்கு வந்திருந்த போது தோப்புக் காட்டுச் சுந்தரராச சர்மா உன்னைப் பார்க்கவர இருந்தார் வசதி கிடைக்கவில்லையாம்.''

''வருகிற வெள்ளிக் கிழமை நல்ல நாள். அவர் வந்தால் பேசவேண்டியதையெல்லாம் பேசி ஒரு ஒழுங்குக்கு வந்துவிடலாம்!''

''சென்ற திருவிழாவின் போது அவரின் கோயிலுக்கு உதவி செய்யப் போயிருந்தேன். அந்த வேளையில் அவரின் மகளைப் பார்த்தேன்' எட்டாம் வகுப்புவரை படித்திருக்கிறாள். பெண் ரதி மாதிரி. நல்ல குடும்பப் பாங்கு உள்ளவள். நீகூட வேண்டுமென்றால் கொழும்புக்குப் போகமுன்னம் அவளை ஒரு தடவை போய்ப் பார்க்கலாம். என்ன சொல்கிறாய்?''

# 12.

ஆத்மநாதனுக்குப் பதில் சொல்லவே தோன்றவில்லை. அவன் மௌனமாகச் சாப்பாட்டிலே ஈடுபடுவது போலப் பாசாங்கு செய்கிறான். மூளை மாத்திரம் விரைவாக வேலைசெய்கிறது. 'என்ன பதில் சொல்லலாம்?'

சித்தி இதற்குத்தான் காத்திருந்தவள் போலப் பொரிந்து தள்ளுகிறாள். "என்ன அப்பா கேட்கிறார். பதில் சொல்லாமல் இருக்கிறாயே. உன்னைப் பற்றி ஊரெல்லாம் ஒரே கெட்டபெயர். அப்பா இதற்காகத்தான் உனக்குக் கல்யாணமே செய்துவைக்கப் பார்க்கிறார். உன் தறுதலைத் தனம் அப்போதாவது உன்னைவிட்டுப் போகாதா என்ற நப்பாசை. நீ என்னடா வென்றால் பதிலே பேசாமல்இருக்கிறாய். முடிவைச் சொல்லிவிடு."

ஆத்மநாதனால் பொறுக்கக்கூடவில்லை. "சித்தி" என்று அவன் உரக்கக் கத்துகிறான்.

சித்தி பனங்காட்டு நரி. இந்த சலசலப்புக்கா அஞ்சுவாள்?

"இன்னும் இரண்டு வருஷம் சென்றால் பரமேஸ்வரி பெரியவளாகிவிடுவாள். ஜகதாம்பாளுக்கோ ஐந்து வருஷம் அதிகம். என்குழந்தைகளை நல்லஇடத்திலே கொடுக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இராதா?. உன் அப்பாவுக்கு இராதா? நீ மரியாதையாக நடந்து ஒழுங்காகக் கலியாணம் கட்டினால்தானே எங்கள் ஆசை நிறைவேறும்" என்று படபடவென்று பேசுகிறாள் சித்தி. முடுக்கிவிட்ட பொம்மைக் கார் குறிக்கப்பட்ட சுழற்சி வரை ஓடித்தான் நிற்பதுபோல அவளின் பேச்சும், ஓர் எல்லை வந்ததும் தான் முற்றுப்புள்ளி வைக்கிறது. அப்பாடா அந்தப் பார உடம்போடு மூச்சுவிடாமல் அல்லவா பேசித்தள்ளுகிறாள்.

ஆத்மநாதன் தந்தையைப் பார்க்கிறான். அவரோ மௌனம் சாதிக்கிறார். வெகுளியான அவர் தம்மால் பேசமுடியாததையெல்லாம் மனைவியின் மூலம்பேசவைக்கிறார் போலும். சினிமாவில் இரவல் குரல் கொடுப்பவர் போலத் தந்தையின் வாயாகச் சித்தி பயன்படுகிறாள்? இதுவும் ஒருவகையிலே நல்லது தான். 'சித்தியுடன் வாக்கு வாதப் பழுவது போல அப்பாவுடன் வாக்கு வாதம் செய்வது சரியல்ல. புலவர்கள் கையாளும் ஒட்டணி போலச் சித்தியைக் கருவியாகக்கொண்டு அப்பாவிற்கு சில விஷயங்களைச் சொல்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம்.'

''சித்தி! மரியாதை, ஒழுங்கு என்று நீ ஒன்றும் எனக்குப் போதிக்க வேண்டாம். என் வழி எனக்குத் தெரியும். உன் பிள்ளைகளின் கலியாணத்திற்கும், என் கலியாணத்திற்கும் என்ன சம்பந்தம்? மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாயே. உங்கள்அவசரத்திற்கு நான் கலியாணம் செய்யப்போவதில்லை.''

''ஆத்மநாதா!'' எதிர்பாராத இடத்திலிருந்து எதிர்பாராத வகையிலே புறப்பட்ட குரல் அது. இல்லை, குமுறல்! அப்பாதான் அப்படிக் கத்துகிறார்.

ஆத்மநாதன் அதிர்ந்து போகிறான்.

''டேய் கழுதை! உனக்கு இப்போ வாயும் முளைத்து விட்டது. என்ன? நாங்கள் கூண்டோடு கைலாயம்போனாலும், ஏன் என்று திரும்பிக்கூடப் பாராத நீ, சிவபாக்கியம் செத்தவுடன் ஓடிவந்தது பெரிய ஒழுங்கு தான். இந்தா, நீ படித்தவன். புட்டுப் புட்டுச் சொல்ல வைக்காதே: நான் சொல்வதைக் கேட்டுப் பிழைத்துப்போ'' சாப்பாட்டிலிருந்து கையை உதறிவிட்டுக் கோப உணர்ச்சியால் வார்த்தைகள் தடுமாறப் பேசுகிறார் ஐயர்.

ஆத்மநாதன் இதை எதிர்பார்க்கவேயில்லை. இந்த அதிர்ச்சி நீங்குவதற்கு முன்பே சித்தி இடி முழக்கத்தோடு பொழிவது அவன் காதை உடைத்துக்கொண்டு செல்கிறது.

''புட்டுப் புட்டுச் சொல்ல நீங்கள் பயந்தால் நான் சொல்கிறேன். டேய் ஆத்மநாதா! நீ ஒன்றும் சிவபாக்கியத்தில் உருகி ஓடிவரவில்லை. சீதாவில் மயங்கித்தான் பறந்து வந்தாய். உங்கள் கதைதான் சந்திசிரிக்கிறதே'' என்று அவள் தன் வார்த்தைகளால் ஆத்மநாதனின் நெஞ்சையே நார்நாராகக் கிழித்துவிடுகிறாள்.

ஆத்மநாதன் தட்டத்தைத் தள்ளிவிட்டு எழுந்து நிற்கிறான். கோபமே உருவாகி, உணர்ச்சியிலே தன்னை இழந்து வாயும் அடைத்துப்போன நிலையில்... யார்மேல் அவன் தன் கோபத்தைக் காட்டுவது? தன் தலையிலேயே மடமடவென்று அடித்துக்கொள்கிறான்.

''ஐயோ! என்னை எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். சீதாவைப் பற்றி எந்தவித அபவாதமும் பேசவேண்டாம். கலியாணம் பற்றி இனியும் பேசினீர்களானால் எனது பிணத்தைத்தான் காணநேரும்.''

ஐயர் மலைத்துப் போகிறார். அவரின் வாய் அடைத்துப்போகிறது. அவர் மௌனமாக எழுந்துபோய் கையை கழுவுகிறார், ஆத்மநாதனும் அவரைத் தொடர்ந்துபோய் கைகழுவுகிறான்.

இருவரும் திண்ணையிலே போய் தங்களுக்குப் போடப்பட்டிருக்கும் பாயிலே சரிகிறார்கள்.

சித்தி மாத்திரம் பாத்திரங்களோடு சண்டைபோடுகிறாள். அவளின் கோபத்தை அறியாமல் ஓடிச் சென்று அவளைக் கட்டிக்கொண்ட சந்திரமௌலிக்கு மொத்து மொத்தென்று குத்து விழுகிறது.

சிறிது நேரத்தில் ஏணையிலே சிணுங்கிய குழந்தையை அவள் ஆட்டிய வேகத்தில்... வளையும், ஏணையும் சிணுங்கி அவலக் குரல் எடுக்கின்றன. அதன் பின்னணியிலே சித்தியின் வசைமொழிகள் ஆரோகணகதியில் மேலெழுகின்றன. இடையிடையே அவள் களைத்து ஓய்வெடுக்கும்

பொழுது, ஏணையின் கிறீச் சப்தம் செவிகளைத் துளைக் கிறது.

இரண்டு மணித்தியாலங்களுக்குப் பிறகு அந்த வீட் டில் ஓரளவு அமைதி நிலவுகிறது. மெல்லிய குறட்டை ஒலிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் எழுகின்றன. தூக்கத்தில் அவ்வப்போது சந்திரமௌலியும், ஜகதாம் பாளும் வாய் பிதற்றுகிறார்கள். ஏணைச் சத்தமும் சிறிது சிறிதாக ஓய்ந்து மடிகிறது.

ஐயர் புரண்டு புரண்டு படுக்கிறார். நித்திரை வர மறுக்கிறது. வேதனை நெஞ்சிலே நெறிகட்டி நிற்கும் பொழுது நித்திரை எப்படி வரும்? துருத்திபோல அவ ரின் நெஞ்சு எழுந்து எழுந்து தணிகிறது.

ஆத்மநாதனின் ஆவேசம் அவரை வருத்துகிறது. தம் ஆசைகளையெல்லாம் மகன் அழித்துவிடுவானோ என்ற அச் சம் பெரிதாக ஏற்படுகிறது.

ஆத்மநாதன் சிதாவைக் கலியாணம் செய்துகொள் வது போலவும், வயற்காட்டுக் கிராமமே இதை எதிர்த் துக் குமுறுவது போலவும், தாமும், தன் மனைவிமக்களும் வீட்டிலிருந்து துரத்தப்பட்டு நடுத் தெருவில் நிற்பது போலவும் பல பயங்கரக் காட்சிகள் அவரின் மனக் கண் முன்பு திரை விரிக்கின்றன.

ஆத்மநாதனில் அடக்க முடியாத கோபமும். வெறுப் பும் ஏற்படுகின்றன. மரத்தின் மேலே நின்றபடி மரத் தைக் குறைப்பவன் போலத் தமது குடும்பத்திலே நிலை யாகக் காலூன்றி நின்றுகொண்டு அந்தக் குடும்பத்தையே அவன் அழிக்க முயல்வது போன்ற பிரமை அவருக்கு ஏற் படுகிறது.

''ஆத்மநாதா! உன் குலம் என்ன? கோத்திரம் என்ன? ஆசாரம் என்ன? உன்னை நம்பி எத்தனை கனவுக் கோட்டைகளைக் கட்டி எழுப்பியிருக்கிறேன்? எல்லாவற் றையும் உடைத்தெறிந்து என் முகத்திலே கரிபூசிவிடுவாய் போலிருக்கிறதே!டேய் நீ பிராமணனடா மறந்துவிடாதே.

னாலுக்கு நாம் இந்த ஊரிலே மனிதராய்த் திரிய வேண்டு மடா! கவுண்டினிய கோத்திரத்திலே தோன்றிய நீ, கேவலம் கீழ்சாதிக்காரி ஒருத்திக்காகச் சகலதையும் துறப்பதா? என்பிள்ளை!... என் தலைமகன்!''

மேலே சிந்திக்க முடியாது நினைவுகள் தடுமாறுகின்றன. கண்கள் கலங்குகின்றன. அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ளப் பார்க்கிறார். முடிந்தால்தானே?

தலையணை ஈரமாய்ப் போனதன் பின்பு மனதிலே இருந்த நம்பிக்கையீனம் சிறிது கழுவப்படுகிறது. புதிய நம்பிக்கை பிறக்கிறது. ஆத்மநாதனை மனம் திருப்பிவிடலாம் என்ற உறுதி ஏற்படுகிறது.

''சுந்தரராச சர்மாவின் மகளை இவன் ஒருமுறை பார்த்தால் மனம் மாறிவிடும். பெண்ணுக்கு வயது பதிணொன்றுதான். என்றாலும் நல்லாய் வளர்ந்து மினுமினுப்பாய் இருக்கிறாள். அழகிதான். ஆசை காட்டுவதற்காக எட்டாம் வகுப்புப் படித்தவளென்று பொய் சொல்லிவிட்டேன். ஐந்தாம் வகுப்புத்தான் படித்திருந்தாலும், புத்தகங்களையும் பத்திரிகைகளையும் விழுந்து விழுந்து படிப்பவளுக்கு அறிவு இல்லாமலா போய்விடும்? ''அல்லாமலும் எட்டாம் வகுப்புப் படித்ததற்கு அத்தாட்சியைக் காட்டு'' என்று ஆத்மநாதன் கேட்கப்போவதில்லையே! அவன் நடத்தப்போவது பாடசாலை அல்ல. குடும்பம்!

''சுந்தரராச சர்மா என்னைப்போலவா? மனிதன் கையிலே பசையுள்ளவர். வீடு, வாசல், தோட்டம் துரவு எல்லாம் உண்டு. போதாததற்குக் கார் சொந்தமாக வைத்து, வாடகைக்கு விடுபவராம். புரோகிதத்தோடும் கோயிலோடும் நிற்காது பல வழிகளிலும் பிழைக்கத் தெரிந்தவர் அவர். வைத்தியம், மாந்திரீகம், சோதிடம் என்று பலப்பல.

''இவரைப் பிடித்தால் சீதனமும் குறைவில்லாமல் கிடைக்கும். ஆத்மநாதன் என்ன உழைக்கத் தெரியாதவனா? அழகுதான் இல்லாதவனா? மன்மதனையிற்றே! அவனுக்கு என்ன குறை? சர்மாவிடம் பெருந்தொகையைக்

கறந்துவிடவேண்டும். இதேசாட்டில் பரமேஸ்வரிக்கும் அவர்களின் மகன் ஜகந்நாதனை முடிச்சுப்போட்டுவிட்டால் பெரும் பாரம் குறைந்தமாதிரித்தான்...

''ஜகந்நாதன் கொஞ்சம் காவாலிப் போக்கு என்று கேள்வி. கோயிற் பூசை செய்யவும் மறுக்கிறானும். பலசாதி பையன்களோடும் சேர்ந்து வீடு வாசல் என்றில்லாமல் அலைந்து திரிகிறானும். அதனால் என்ன? கலியாணத்தோடு எல்லாம் திருந்திவிடும். நானே அந்தவயதில் மாட்டு வண்டிச் சவாரி செய்து திரிந்தவன்தானே? கூத்துக் கொட்டகைகளைத் தேடிக் கண்டபடி அலைந்தவன் தானே? இப்பொழுது நான் ஒழுங்காகக் குடித்தனம் செய்யவில்லையா? எல்லாம் கொஞ்சக் கொஞ்சக் காலத்திற்குத்தான். பிறகு சரியாகிவிடும்; பார்ப்போம்.''

ஐயர் அமைதியடைகிறார். தாம் எழுப்பிக்கொண்ட கனவு மாளிகையிலே குடியேறித் தடல்புடல் படுத்துகிறார்.

அவரின் கண்களும், உதடுகளும் மெதுவாகச் சிரிக்க, சிறிது நேரத்தில் தூக்கம் அவரைத் தழுவுகிறது.

★

ஆத்மநாதனுக்கு லஜ்ஜையாக இருக்கிறது. பெண்களைப்போலத் தலையில் அடித்துக்கொண்டதும், பின் படுக்கையிலே கிடந்து தலையணையைத் தெப்பமாக்கியதும்... நினைக்கவே கூச்சமாக வருகிறது.

''ஏன் எனது உறுதி இப்படி அடிக்கடி தளர்கிறது? அப்பாவினதும், சித்தியினதும் சிறு எதிர்பார்ப்புகளைக் கண்டு இவ்வளவு உணர்ச்சிவசப்படும் நான், எனது இலட்சியத்திற்காக ஊர் உலகையெல்லாம் எதிர்த்துநிற்க நேரும் பொழுது என்ன செய்யப் போகிறேன்? சீச்சீ! இவ்வளவு பலவீனமானவனா நான்?''

ஆத்மநாதன் தன்னையே வெறுத்துக்கொள்கிறான். மேடைகளிலும், கருத்தரங்குகளிலும், எழுத்துலகிலும் புன்மைகளைச் சாடி எரித்த, 'எரிமலை' எழுத்தாளன்தானா

இந்த ஆத்மநாதன்? 'ஊருக்கு உபதேசம், உனக்கல்லடி பெண்ணே.' என்ற கதையாகவல்லவா இருக்கிறது.

'மகத்தான மலைபோன்ற இலட்சியத்தை உன்னுல் சாதிக்க முடியுமென்று திடமாக நம்பு. அந்த நம்பிக்கை உனது சிறிய கைகளுக்கும், மெலிந்த உடலுக்கும் குறைவற்ற உன் சக்திக்கும் எதிராக எழுகின்ற தடைகளையெல்லாம் பொடியாக்கிவிடும்,' இவ்வாறு சீதாவின் ஓட்டோகிருப்பில் எழுதிய வாசகங்கள் மீண்டும் அவனை எள்ளி நகையாடுகின்றன. விசுவரூபித்துப் பயமுறுத்துகின்றன.

ஆத்மநாதன் தலையைச் சிலிர்த்தபடி படுக்கையிலே எழுந்து உட்காருகிறுன். திடீரென்று அசாதாரணமான துணிவு அவனுள் ஊறுகின்றது. ஆத்மநாதனுள்ளே புதியவோர் ஆத்மநாதன் புனர்ஜன்மம் எடுக்கிருன். சோர்ந்து கிடக்கும் ஆத்மாவினுள்ளே புதியதொரு ஆன்மா நுழைந்து இடம்பிடித்துக்கொள்கிறது.

சீதா! இந்த நிமிஷத்திலிருந்து எதையும் செய்யத் தயாராகிவிட்டேன். சாதிப் பேயின் தலையிலடித்து அதை அழிக்கும் சக்தி இந்தச் சிறிய கைகளிலே ஏறிவிட்டது. உலகம் என்னைப் பார்த்துச் சிரித்தால், அதைப் பார்த்துச் சிரிக்கும் வல்லமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

சீதா! உன் சிறிய உடலினுள்ளே உறுதியென்ற மலையே இதயமாக அமைந்திருப்பதை நான் அறிவேன். உன் நாடி நரம்பெல்லாம் தன்னம்பிக்கை பிரவாகித்த வண்ணமிருக்கிறது. நீ மலை; நான் சிறு குன்றுகவேனும் இருந்தால் மட்டுமே உனக்கு ஈடுதரமுடியும்.

''சீதா! நீ இல்லாமல் நானில்லை. சூரியனிலிருந்து ஒளியைப் பெற்று மினுமினுக்கும் சந்திரன்தான் நான். உன் ஒளி இல்லாவிட்டால் என் இருதயம் இருட்டாகிவிடும். இதை நான் உணர்கிறேன்.''

ஆத்மநாதனுக்கு படுக்கை கொள்ளவில்லை. எழுந்து வெளியே வருகிறுன். இறுட்டில் தாழ்வாரத்து வளை தலையில் அடித்து விடுகிறது.

"அம்மா!"

வேதனையில் முனகியபடி அந்த இடத்திலே சிறிது நேரம் இருந்துவிட்டு அவன் வெளியில் வருகிறான்.

"சிறுவயதில் இந்த வாசலால் தலையை நிமிர்த்தியபடி துள்ளித் திரிந்தேன். ஆனால், இப்பொழுது வளர்ந்திருக்கிறேன். அதுதான் தலையை நிமிர்த்தி நடந்தவுடன் மண்டையிலே அடி விழுகிறது! சிறுபிள்ளையாக இருந்தபொழுது நடந்தது போல யோசிக்காமல் தலையை நிமிர்த்தி நடக்கமுடியாது. ஒவ்வொன்றையும் ஆரஅமரச் சிந்தித்தே செயலாற்ற வேண்டும். உணர்ச்சிவசப்பட்டுத் தலையை நிமிர்த்தி வீணாக மண்டையை உடைத்துக் கொள்ளக்கூடாது. உணர்ச்சியை அடக்கி இனிச் செய்யப் போவதைத் திட்டமிடவேண்டும்" என்று அவன் எண்ணிக்கொள்கிறான்.

வானத்தை நிமிர்ந்து பார்க்கிறான். அங்கு நட்சத்திரங்கள் சிதறிக்கிடக்கின்றன. அவற்றின் நடுவே தண்மதி கம்பீரமாக நடை பயில்கிறது. "உருப்படாத எத்தனை எத்தனையோ இலட்சியங்கள் என் நெஞ்சிலே நட்சத்திரங்களாய் சிதறிக் கிடக்கின்றன. ஆனால் அவை என்றும் பெரிய ஒளியைத் தந்ததில்லை. ஆனால், சீதாமீது நான் கொண்ட காதலோ இந்தப் பூரண சந்திரன் போல என் நெஞ்செல்லாம் ஒளியால் நிறைத்துவிட்டது. சீதா சீதா!"

ஆத்மநாதன் சீதாவின் நினைவிலே கனிந்து உருகிப் போகிறான். அவன் முன்பு காலம் தேங்கி நிற்கிறது.

# 13.

அன்று சிவபாக்கியத்தின் அஸ்திகளைக் காடகற்றும் நாள். செல்வரத்தினத்துடன் சரவணையர், சுப்பர், இல்லைநாதன் ஆகியோரும், நாவிதனும் சுடுகாடு சென்று முதல் நாள் சிவபாக்கியத்தின் சடலத்தை எரித்த இடத்தில் இருந்த எலும்புகள், சாம்பர் ஆகியவற்றைத் திரட்டி, ஒரு தகரப்பேணியில் இட்டுக் கொண்டு வீடு திரும்புகிறார்கள்.

நாவிதன் தாம்பாளத்திலிருந்த தோடம் பழம், மாதுளம் பழம், வாழைப்பழம் முதலிய கனிகளைப் பிழிந்து தேன், பால், தயிரோடு செல்வரத்தினத்தின் கையைப் பிடித்து, சிவபாக்கியத்தின் எரிந்த சிதைமீது அபிஷேகம் செய்வித்த போதும், எலும்பு, சாம்பர் முதலியவற்றை எடுப்பித்த போதும், பின்னர் கலப்பை யெனப் பாவனை செய்த சிறுதடிகளால் கட்டிய ஒன்றால் அந்த இடத்தை அவரைக் கொண்டே உழுவித்த போதும், அந்த சாம்பரின் மேல் நவதானியங்களை விதைப்பித்த போதும் செல்வரத்தினத்தின் மனம் பட்டபாடு கொஞ்சமல்ல.

ஒரு காலத்தில் அவருக்கு இன்பத்தையும், அமைதியையும் அளித்த உடலின் எச்ச சொச்சங்களாய்த் தகரப் பேணியிலிருந்த ஒவ்வொன்றும் சிவபாக்கியமாகவே மாறித் தம்மைக் கனிவுடன் நோக்குவது போல அவருக்குத் தோன்ற அவரை அறியாமலே கண்கள் குளங்களாகிவிடுகின்றன; எப்படியோ நடைப்பிணமாக அவர் வீடு திரும்புகிறார்.

முற்றத்திலே சீதாவைச் சூழ்ந்திருந்த சரவணையரின் மனைவியும், சுப்பரின் மனைவியும், செல்வரத்தினம் முதலியோர் கதவைத் திறந்து உள்ளே நுழைய, எழுந்து வீட்டிற்குள் செல்கிறார்கள். சீதாவும் அவர்களைத் தொடர்கிறாள்.

செல்வரத்தினமும், சரவணையரும், சுப்பரும், தில்லை நாதனும் முற்றத்துப் பந்தலின் கீழிருந்த நாற்காலி களிலே அமர்கிறார்கள். நாவிதன் செல்வரத்தினத்தின் அருகில் வந்து பிடரியைச் சொறிந்தபடி நிற்கிறான்.

''அப்ப நான் வரப்போறன் கமக்காரன்'' என்றான். அவனது சொல்லின் குழைவிலும், நின்ற நிலையிலும், அவன் நோக்கத்தை உணர்ந்த செல்வரத்தினம் தமது மடியி லிருந்து இரண்டு ரூபாவை எடுத்து அவனுக்குக் கொடுக் கப் போகிறார். நாவிதன் நன்றிப் பெருக்குடன் அதைப் பெறக் கையை நீட்டுகிறான்.

சுப்பர் அவனைக் கோபத்துடன் முறைக்கிறார். ''என்ன செல்லன்! உனக்கு ஒன்றிலும் அடங்காதா? நேற்று உனக்குத் தந்ததே அதிகம். இன்றைக்கும் வேண்டுமோ? நீயும், மற்றவர்களும் நல்லாய் இடங்கண்டுவிட்டீர்கள். செல்வரத்தினம் காசுகொடுத்து அவனைக் கெடுக்காதே! இனி எங்கள் வீடுகளில் ஒன்று நடந்தாலும் இப்படித் எதிர்பார்ப்பான்'' என்கிறார் அவர்.

சரவணையரும், சுப்பருக்கு ஆமாம் போடுவதற்கறி குறியாகத் தலையாட்டி, ''நீ சொல்வது உண்மை. சாதா ரணமான நாட்களிலே இவர்கள் சமத்துவம் பேசுவார் கள். நல்லது கெட்டது நடக்கும் பொழுதுமட்டும், 'குடி மக்கள்' என்று உரிமைபாராட்டி வந்து ஒன்றுக்குப்பத் தாய்ப்பிடுங்கி விடுவார்கள், கொஞ்சம் இளகினால் தலையில் ஏறிவிடுவது இவர்களின் வழக்கம்'' என்று சொல்கிறார் கள்.

செல்லனின் முகம் சுண்டிவிடுகிறது. ''கமக்காரர்! இது உங்களுக்கு அடாது. நாங்கள் இருக்கிறது உங்கள் தயவில் அடித்தாலும், பிடித்தாலும் உங்களிடந்தானே'' என்று அவன் நயமாகவும், பயமாகவும் சொல்கிறான். அவனது நிலையை பார்க்கச் செல்வரத்தினத்திற்குப் பரி தாபமாக இருக்கிறது. ''போகட்டும், இந்த இரண்டு ரூபாவில் குடிமுழுகிவிடாது'' என்று சொல்லியவண்ணம்

அவர் பணத்தை அவனிடம் கொடுக்கிறார். அவனும் தப்பினோம் பிழைத்தோம் என்று பணத்தை வாங்கியவனாய் கீழே வைத்திருந்த துணிப்பொதியையும் தூக்கிக்கொண்டு நடையைக் கட்டுகிறான்.

''உங்களைப் போல பணக்காரர் அள்ளிஅள்ளிக்கொடுத்துத்தான் இந்த எளிய சாதிகளுக்கு இப்போது கண்கடை தெரியவில்லை. கோயிலுக்குள் விடுங்கள். தேநீர்க் கடையில் சமமாக இருந்து சாப்பிடவிடுங்கள் என்று இப்போது தொடங்குகிறார்கள். நாளைக்கு பெண்தரச் சொல்லிக்கேட்கவும் தயங்கமாட்டார்கள்'' என்றுதில்லைநாதன் பொரிந்து தள்ளுகிறான்.

சரவணையர் ஏளனமாகச் சிரித்து, ''சும்மா இரடா தில்லைநாதன். நீ சொல்வது செல்வரத்தினத்திற்கு விளங்கவா போகிறது. விளங்கியிருந்தால் இவன் இன்றைக்கு இந்த நிலையிலா இருப்பான்?'' என்று குத்தலாகச் சொல்கிறார்.

செல்வரத்தினத்திற்கு இரத்தம் கொதித்தது. ''கள்ளுக்கொட்டிலிலே கதியென்று கிடந்து, கள்ளுவிற்பவனிடம் கடனுக்குக் கையேந்தி மன்றாடும், இந்த அற்பர்கள் சாதித் திமிரைமட்டும் என்றைக்கும்கைவிடுவதில்லை'' என்று நினைத்து அவரின் உள்ளம் குமுறியது. ஆனாலும் அவர் ஒன்றும் பேசாது மௌனம் சாதிக்கிறார்.

செல்வரத்தினத்தின் மௌனம், சுப்பரை ஜாக்கிரதைப் படுத்துகிறது. தடிப் பிரமச்சாரியாய் நிற்கும் தன் மகனின் வாழ்க்கையைச் சீதாவோடு பிணைக்கும் நப்பாசையை இன்னமும் கைவிட விரும்பாத அவர் செல்வரத்தினத்தின் மனத்தை இன்றைய சூழ் நிலையிலே மேலும் புண்படுத்துவது தமது எதிர்காலத் திட்டத்தினைப் பாழ் செய்துவிடும் என்று உணர்ந்தவராய்த் தில்லைநாதனைச் சமாதானப்படுத்தும் முயற்சியிலும் சரவணையரை வாயடைக்கும் விரயத்தனத்திலும் இறங்குகிறார்.

''விசர்க் கதை பேசவேண்டாம். இப்போ விஷயத்துக்கு வருவோம். செல்வரத்தினம்! உன் பெண்சாதியும்

போய்விட்டா, இனியும் பழைய துவேஷங்களை நாங்கள் பாராட்டக் கூடாது. போயும்போயும் நாங்கள் ஒன்றுக் குள் ஒன்று. நீர் அடித்து நீர் விலகுவதில்லை. இனியாவது பிரிந்த எங்கள் குடும்பம் ஒன்று சேரட்டும். நேற்று சர வணையரின் பெண்சாதி சாப்பாடு கொண்டுவர, வேண் டாம் என்று மறுத்துவிட்டாய். உது சரியில்லை. இன்று நானும் பெண்சாதியும் சாப்பாடு கொண்டுவரத்தான் போகிறேம். நீயும், மகளும் சாப்பிடத்தான் வேண்டும்'' என்று அவர் உரிமை உணர்ச்சியோடு பேசுவதுபோலப் பாசாங்கு பண்ணுகிறுர். தில்லைநாதனும், சரவணையரும் செல்வரத்தினத்தின் மூகத்தையே ஆவலோடு பார்க்கி ருர்கள்.

செல்வரத்தினம் பெருமூச்சுவிடுகிறுர்.

''சிவபாக்கியம் செத்ததோடு நான் மீண்டும் உயர் சாதியாகிவிட்டதாகக் கருதவில்லை. முப்பது ஆண்டுகளாக உங்கள் சபை சந்திக்கு நாங்கள் வேண்டியிருக்காத போது, இப்பொழுது மட்டும் எங்கள் உறவைப் புதுப் பிப்பதில் அர்த்தமில்லை. அப்படிப் புதுப்பித்தாலும் எனது லட்சியத்திலிருந்து நான் மாறவும் போவதில்லை'' என்று அவர் உறுதியாகக் கூறுகிறுர்.

சரவணையரால் இதற்கு மேலும் பொறுக்க முடிய வில்லை. ''நாங்கள் பழையதை மறந்து, உன் பெண்சாதி யின் செத்த வீட்டுக்கு வந்து உதவி செய்யாமலிருந்தால், இன்றைக்கு அவளின் பிரேதம் இந்த வீட்டில்கிடந்து நாறி யிருக்கும் தெரியுமா? என்ன செய்தாலும் ஒரே ரத்தம். அந்த துடிப்பாலேதான் எங்கள் பெருமையை எல்லாம் ஒதுக்கிவிட்டு வந்து, இந்தச் செத்தவீட்டை எங்கள் சொந்த செத்தவீடு போல நடத்திேேம். நீ நன்றி கெட்ட வன்'' என்று அவர் பெரிதாகச் சத்தம்போட்டுப் பேசு கிறுர். அவரின் சத்தத்தைக் கேட்டு, சீதாவும் மற்றைய பெண்களும் வீட்டுக்கு வெளியே வருகிறுர்கள்.

செல்வரத்தினம் அமைதியாக, ''மச்சான்! நீங்கள் எல்லாம் செய்த உதவிகளை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். ஆனால், இருதயமற்ற உங்கள் சாதித் திமிருக்கு நான் பணியவும் மாட்டேன். என் உடல், பொருள் ஆவியால் செய்யக்கூடிய உதவிகளை எந்தச் சமயத்திலும் செய்வதற்கு நான் தயார் என்ற அளவில் நீ திருப்தி அடைய வேண்டும்'' என்று சொல்கிறார்.

இந்தவேளையில் சரவணையரின் மனைவி ஏதோசொல்ல வாய்திறப்பதைக் கவனித்த சுப்பர், அவர்களின் வாயையெல்லாம் அடக்கும் வகையில், ''சரி! சரி! இந்தவேளையில் இந்தக் கதை ஒன்றும் வேண்டாம் விடுங்கள். அது அது அந்தந்த வேளையில் நடக்கிற மாதிரி நடந்து முடியட்டும். இப்போ நான் என் வீட்டிலிருந்துசாப்பாடு கொண்டு வரத்தான் போகிறேன். செல்வரத்தினம் உன் பெண் சாதியின் ஆன்மா மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். நீ இதை மறுக்கக்கூடாது'' என்கிறார்.

செல்வரத்தினம் உட்பட எல்லாரது வாய்களும் அடைத்துவிடுகின்றன. ஒருவருக்கும் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ''செல்லம்மா! வா. வீட்டிற்குப் போய்ச் சமையலுக்கு ஆயத்தம் செய்வோம்'' என்றபடி சுப்பர் வாயிலை நோக்கிநடந்தார். அவர் மனைவி அவரைத் தொடர்கிறாள்.

சரவணையரும், தில்லைநாதனும் எழுந்துவிட்டார்கள். தில்லைநாதனின் பார்வை ஒரு கணம் சீதாவிலே சென்று மொய்க்கிறது. சீதா அருவருப்போடு மறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்.

ஆனால் தில்லைநாதனோ மீண்டும் அவளை ஆசையோடு பார்க்கிறான். அவனை அறியாமலே அவனது கைவிரல், நகம் வாயை நாடிச் செல்கிறது. உள்ளத்திலே வேட்கை எல்லைமீறிக் கிளம்பும் வேளைகளில் தன் கை நகங்களைப் பற்களாலே கடிப்பது அவன் வழக்கம்.

''சீதா! சிறுவயதிலே நீ உன் கைநீட்டி எனக்கு அடித்தாய்; பொறுத்தேன். ஐந்து வருடங்களுக்கு முன்பு உன்னை மணம் பேசி என் தந்தை அனுப்பிய ஆட்களை அலட்சியமாக நடத்தி அவமானப்படுத்தி அனுப்பினாய். அதையும் பொறுத்தேன். ஆனால் உன்னையே என் மனைவியாக அடைவதென்று இன்று தீர்மானித்துவிட்டேன். இந்த முடிவை எந்த சக்தியாலும் மாற்ற முடியாது'' என்று அவன் தீர்மானமாகத் தன் மனத்துள் சொல்லிக்கொண்டான்.

சரவணையரின் கழுகுக் கண்கள் தில்லைநாதனின் பார்வையைப் புரிந்துவிடுகின்றன. அவர் லேசாக அவன் முதுகிலே தட்டி அவன் கையைப் பற்றிக்கொண்டு வாயிலை நோக்கி நடக்கிறார்.

## 14.

ஆத்மநாதனுக்குக் கொழும்பு செல்வது எப்போது என்றிருக்கிறது. காலையிலே, ஒன்றும் நடவாதது போன்று தகப்பனுடன் சகஜமாகப் பேசினாலும், அடிக்கடி அவரைக் காண்பதும், உரையாடுவதும் என்னவோ போல் இருக்கிறது.

வேகமாக இரைச்சலோடு ஓடிவந்த காட்டாறுஅணைக்குள்ளே அகப்பட்டதும், கிடந்து குமுறுவது போல இருவருக்குமிடையே வெளியில் புலப்படாத ஒரு குமுறல் இருக்கத்தான் செய்கிறது. அதை எப்படிப் போக்குவது? நிலம் வெடித்தால் மண்போட்டு நிரப்பிவிடலாம். மனம் வெடித்தால் அப்படிச் செய்ய முடியுமா?

சித்தி வழக்கம் போலச் சமையலறை என்ற மூலஸ் தானத்திலிருந்து லட்சார்ச்சனை செய்துகொண்டிருக்கி ருள். அழையா வீட்டிற்குள் நுழைந்துவிட்ட விருந்தினனைப் போல தன்னுடைய குடும்பத்திலேயே தான் அந்நியனுகி விட்டது போன்ற உணர்வினை அவனுல் தவிர்க்க முடிய வில்லை.

காலையிலே கோப்பியும், தோசையும் கிடைத்தன. சாப்பாடா அது? கொடிய விஷம். சாப்பாடொன்றே பிர தானமென்ருல் நாயுங்கூடத்தான் சாப்பிடுகிறது.

இவ்வாறு ஊற்றுக்கண் சுரப்பது போல வேதனை நிறைந்த எண்ணங்கள் மனத்தில் ஊன்றினுலும் வெளியே தன்னைக் கல்லாக்கிக்கொண்டு அவன் வளைய வருகிருன்.

இரவில் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் விடிந்ததுமே கொழும்புக்குப் புறப்படவேண்டுமென்று இருந்த அவன் அவ்வெண்ணத்தை இப்பொழுது கைவிடக் காரணங்கள் இரண்டு.

ஒன்று, சீதாவை இன்னெரு தடவை கண்டு பேச வேண்டும் என்பது. மற்றது, செல்வரத்தினத்தைக் கண்டு ஆறுதல் சொல்லவேண்டும் என்பது.

அவன் நேற்று அவரின் வீட்டுக்குச் சென்ற பொழுது அவர் வீட்டில் இல்லாதது பெருங்குறை.

பாவம்! மனைவியை இழந்தது அவருக்கு பெரும் இழப் புத்தான். அப்படி ஒரு பெண் தெய்வத்தை ஆயிரம் வரு டங்கள் தவமிருந்தாலும் பெறமுடியாது.

ஆரம்பத்தில் அவளை வேலைக்காரி போலக் கேவலமாக நடத்தினுராம். ஆனுல், தவறை உணர்ந்த நாளிலிருந்து அவள்தான் அவரின் உயிர் மூச்சு.

''நான் பொட்டோடும், பூவோடும், மாங்கல்யத் தோடும் உங்கள் கையால் கொள்ளிவாங்குவதுநிச்சயம்'' என்ற அவளின் தீர்க்க தரிசனம் பலித்துவிட்டது. இன்று செல்வரத்தினம் மனம் பொறுத்து உயிர் வாழ்வது ஆச் சரியம்தான்.

''நான் இறந்தால் எனக்காகத் தேவாரம், திருவாசகம் பாடவேண்டாம்! எனது உடல் சுடலையிலே எரியும் பொழுது 'சிவபாக்கியம், சிவபாக்கியம்' என்று ஆயிரம் தடவை சொன்னால் போதும். அந்த புனிதமான நாமம் என் ஆன்மாவினுள் நிறைந்து அது அலைந்து திரிகிற இடமெல்லாம் தொடர்ந்து வரட்டும்'' என்று செல்வரத்தினம் வேடிக்கை போலத் தம் உள்ளத்தைத் திறந்துகாட்டிய பொழுது அவரின் வாயை அவ்வேளையிலே பொத்தச் சிவபாக்கியம் இருந்தாள்.

இன்று.........

ஐயோ! பாவம் செல்வரத்தினம்.

காலை ஒன்பது மணியளவில் ஓடுகின்ற மனத்தைத் துரந்து பிடிக்க முயன்றபடி, ஆத்மநாதன் செல்வரத்தினத்தின் வீட்டிற்குப் போகப்புறப்பட்டு வீட்டு வாயிலுக்கு வந்து கதவையும் திறக்கிறான்.

அங்கே அப்பொழுதுதான் வந்த சுந்தரராச சர்மாவும் அவர் மகன் ஜகந்நாதனும் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்த பொழுது அவன் மனம் கூம்பிவிடுகிறது. ''அடடா அப்பாவின் மூளையே மூளை. என் மனம் எப்படியிருக்குமோ என்று பயந்து விடிந்தது விடியமுன்னமே ஆள்விட்டு இவர்களைக் கூப்பிடுவித்திருக்கிறார். இருக்கட்டும். எனது உறுதி என்னுள்ளே தான் இருக்கிறது. வெளித்தாக்கங்கள் என்னை ஒன்றும் செய்யப்போவதில்லை'' என்று அவன் சிந்தித்த வண்ணம் தன் மனவோட்டங்களை மறைத்தபடி அவர்களை வரவேற்றான்.

ஜகந்நாதன் ஓ என்று சிரித்தபடி ''ஒற்றைப் பிராமணன் முழு விசளமாய் வந்தால் போகிற காரியம் கைகூடாதென்பார்கள். நாங்களோ இரட்டைப் பிராமணர். அதுவுமல்லாமல் பிராமணன் பிராமணனில் விழித்தால் என்ன நிகழும் என்று சாத்திரத்தில்சொல்லவில்லை. ஆனபடியால் நீர்பயப்படவேண்டியதில்லை''என்றுசொல்லி நட்புரிமையோடு ஆத்மநாதனின் தோளிலே கைவைக்கிறான். ஆத்மநாதன் அவர்களை உள்ளே அழைத்துச் செல்

கிறான். இதுவரை அவர்களின் வருகைக்காகவே காத்திருந்து வாயிலுக்கும், உள்ளுக்குமாகக் குட்டி போட்ட பூனைபோல திரிந்துகொண்டிருந்த ஐயர் வாயெல்லாம் பல்லாக ''வாருங்கோ, வாருங்கோ'' என்று அவர்களை வரவேற்று செம்புத் தண்ணீரும் கொடுக்கிறார். வந்தவர்கள் தங்கள் கால்களைக் கழுவியபடி தாழ்வாரத்திற்கு வருகிறார்கள். சித்தி சுற்றிநின்ற பிள்ளைப் பரிவாரங்களை ''ஓடிப் போய் விளையாடுங்கள் என்று துரத்திவிட்டு, பாய் ஒன்றை எடுத்து விரிக்கிறாள். அவள் முகபாவமே அவர்களை வரவேற்கிறது சுந்தரராச சர்மாவும், ஜகந்நாதனும் பாயில் அமர்ந்திருக்கிறார்கள். ஐயரும், அவர்களின் பக்கத்திலே சென்று உட்காருகிறார்.

ஆத்மநாதன் கூச்சத்தோடு ஒரு மூலையில் உட்காரப் போகிறான்.

''அடடே! என்னஐசே! உம்மைத்தானே பார்க்க வந்தோம்? நீர்தானே கதாநாயகன்? ஏன் காணும் போய் ஒளிக்கிறீர்? இப்படி வந்திரும். பெரிய எழுத்தாளன்! பெண்களைப்போல ஒதுங்கியிருந்தால் இது என்ன கருத்து? கையால் இழுத்துப் போகாத குறையாக ஜகந்நாதன், ஆத்மநாதனை எப்படியோ அழைத்துப் பாயில் உட்காரவைக்கிறான்.

'ஆள் பெரிய வாயாடி போல இருக்கிறதே! அத்தோடு பெரிய சோக்காளியாகவும் இருப்பான் போலும்! முன்மண்டையில் மயிர் இறக்கிய சுவடே தெரியாமல் சிறிதாக வழித்து நெளிநெளியான மயிரைப் பெண்களைப் போல அள்ளிச் சொருகியிருக்கிறான். நெற்றியிலே மினுமினுக்கும் ஜவ்வாதுப் பொட்டு. பட்டு வேட்டியும், புரூட்வே சேட்டும் தடபுடல்தான். 'சென்ற்' வேறு கமகமத்து மூளையைக் கிறங்கச் செய்கிறது. தவில், நாதஸ்வரக் காரரோடு திரிபவன் என்பது சொல்லாமலே தெரிகிறது. என்றாலும், மற்றவர்கள் இவனைப் பற்றிச் சொல்லும் அளவுக்கு இவன் மோசமானவனாகத் தெரியவில்லை.

கள்ளமற்ற சிரிப்பு இவன் முகத்தில் கலந்துறவாடு கிறது. உம்! உலகத்தில் யார்தான் முழுக்க முழுக்கக் கெட்டவர்களாய் இருக்கிறார்கள்?''

''சர்மாவும் கொஞ்சம் சோக்குப் பேர்வழிதான். வலது கை விரலிலே வைர மோதிரம். வலது கை மணிக் கட்டிலே தங்கக் காப்பு. சட்டைத் துவாரங்களிலே ரோல்கோல்ட் பொத்தான் மினுமினுக்கிறது. அளந்து வரைந்தது போலத் திருநீற்றுக் குறிகள் நெற்றியை அலங் கரிக்கின்றன. அவற்றின் நடுவே புளியமிலைப் பிரமாணத் திலே சந்தனப் பொட்டு வைத்து அதன் மேல் மை கூர் பருப்பளவிலே குங்குமப் பொட்டு வைத்திருக்கிறார். செழிப்பான வாழ்க்கை காரணமாக வாளிப்பும். இள மைத் தோற்றமும் உடையவராய் இருக்கிறார்.''

இவ்வாறு பாயிலே போய் அமர்வதற்கு இடைப்பட்ட நேரத்தில் ஆத்மநாதன் சர்மாவையும், மகனையும் அளந்து விடுகிறான்.

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவுகிறது. அந்த மௌனத்தை ஜகந்நாதன்தான் கலைக்கிறான்.

''மருமகனை வடிவாகப் பார்த்துக்கொள்ளுங்கள் அப்பா! பிறகு நான்தான் இவரைப் பார்த்தேன் என்று பழியை என்மீது போடக்கூடாது. அம்மாவுக்கு நாட்டு வர்ணனை, தலைவன் வருணனை எல்லாம் செய்யவேண்டி யது நீங்கள் தான். என்ன மாமா! நான் சொல்வது நியா யமா இல்லையா? நீங்களே சொல்லுங்கள்'' என்று பேசிச் சூழலைக் கலகலப்பாக்குகிறான் அவன்.

முதியவர் இருவரும் சிரிக்கிறார்கள். அப்பொழுது தான் வெளியிலிருந்து வந்து தாழ்வாரத்தூணைப் பிடித்து நின்ற இராமநாதனும் சிரிக்கிறான். கோப்பி பலகாரம் கொண்டுவந்த சித்திகூடத் தன் சிடுசிடுப்பை ஒருகணம் மறந்து சிரிக்கிறாள்.

ஆத்மநாதனே சிரித்துவிட்டான். ஜகந்நாதனின் பேச் சிலே புரிபடாத ஏதோ ஒரு மாயக் கவர்ச்சி இருக்கத் தான் செய்கிறது. இருண்ட இரவை ஒரு சிறு கைவிளக்கு

ஒளியுடையதாக மாற்றிவிடுவது போல அவனும் தன் சூழலை எவ்விதமோ மகிழச் செய்துவிடுகிறான்.

சுந்தரராச சர்மா காரியப்பேர்வழி. பேச்சோடுபேச்சாக மாப்பிள்ளையின் தராதரம், சம்பளம், விருப்பு, வெறுப்புக்களைப் பிடுங்கி எடுக்க முயல்கிறார். அவர் துருவித் துருவிக் கேட்கும் கேள்விகளால் ஆத்மநாதன் எரிச்சலடைகிறான். ஆனால், கள்ளங்கபடமில்லாத ஜகந்நாதனின் பேச்சுக்கள் அவனது எரிச்சலைத் தணியச் செய்கின்றன.

'தான் இப்போது விவாகம் செய்யப் போவதில்லை' என்று கூறுவதற்கு உதட்டிலே வருகின்ற வார்த்தைகளை வெளிப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தாமலே அவர்களின் பேச்சுகள் தொடர்வதை நினைத்து அவனுக்கு அச்சம் ஏற்படுகிறது. 'ஆனால் எப்படியோ இதனைச் சொல்லித் தானே ஆகவேண்டும்?'

''இனி என்ன? எங்களுக்குப் பூரண திருப்தி. நாங்கள் துர்வாச கோத்திரம். நீங்கள் கவுண்டினிய கோத்திரம். சககோத்திரம் இல்லாத வரையில் கலியாணம் செய்வதற்குத் தடையில்லை. ஐயா கேட்கிற சீதனத்தைத் தர நான் ஆயத்தம். சாதகப்பொருத்தமும் முன்பு பார்த்ததுதானே! வருகிற தைமாதத்தில் கலியாணத்தை வைத்துக்கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்?'' சர்மாவின் வார்த்தைகள் இவை.

இவற்றைக் கேட்டு, ஐயரதும், மனைவியதும் வாய் எல்லாம் பற்களாயின. மகிழ்ச்சியில் தலை கால் தெரியவில்லை அவர்களுக்கு.

''தம்பி, நீர் ஒன்றும்பேசாமலிருக்கிறீரே! உம்முடைய விருப்பத்தையும் சொல்லிவிடும்'' என்று சர்மா ஆத்மநாதனின் நாடியைப் பிடித்துப் பார்க்கிறார்.

''என்ன அப்பா! நீங்கள் ஒன்று. இது என்ன சந்தையிலேமாடுவாங்குற வியாபாரமா? மாப்பிள்ளை பெண்ணைப்

பார்க்க வேண்டாமா?'' என்று தனது இருபதாம் நூற்ருண்டுப்பிரதாபத்துக்கு வருகிருன் ஜகந்நாதன்.

''ஓ! அதுக்கென்ன? நாளைக்கே அவர்பெண் பார்க்க வரத் தடையில்லை.''

''மாப்பிள்ளை என் தங்கையென்று சொல்லவில்லை. எங்கள் ராஜேஸ்வரி உங்கள் கோயில் அம்மனைப்போலத்தான் போங்கள்! ஒரு முறை அவளைப் பார்த்தால் போதும். தை மாதம் வரையிலும் நீங்கள் பொறுக்கமாட்டீர்கள்'' என்று தன் இயற்கையான விளையாட்டுப் பேச்சில் ஜகந்நாதன் இறங்குகிருன்.

'விஷயம் தலைக்குமேல் போகிறது. இனியும் பொறுத்தல் இயலாது' என்ற நிலையிலே ஆத்மநாதன் சொல்கிருன்.

''என்னை மன்னித்துவிடுங்கள். எனக்கு இப்பொழுது கலியாணம் செய்ய இஷ்டமில்லை. 'ஆனாஸ்' பரீட்சைக்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறேன். அது முடிய வேண்டும். இந்த வீட்டைத் திருத்திக் கட்டவேண்டும்... இன்னும் இரண்டு வருஷங்களுக்குக் கலியாணம் பற்றி நினைக்கவே நேரமில்லை. நீங்கள் வீணுக அலைந்ததற்கு அப்பா சார்பில் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' இதைச் சொல்வதற்கிடையில் அவனுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. பாயைச் சுரண்டியபடி தலையை நிமிர்த்தாது இருக்கிருன்.

சர்மா திடுக்கிட்டு அதிர்ந்து போகிருர். அவரின் பார்வை அவமானங் கலந்த பரிதாபத்தோடு ஐயரைக் குத்துகிறது. ஐயர் தடுமாறுகிருர். ஜகந்நாதனுக்கும் வாய் அடைத்துவிடுகிறது.

சித்திதான் நிலைமையைச் சமாளிக்கிருள்.

''தம்பி சொல்வதைக்கேட்டு ஒன்றும் அதிர்ச்சியடையாதீர்கள். அவன் எங்களுக்கும் இந்த பாடத்தைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிருன். அதற்கென்ன? படிப்பும் படிப்பாய்ப் படிக்கிறது. வீட்டையும், வீடாய்க்கட்டு

கிறது. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். இந்தக் கலியாணம் எப்படியும் தைமாதத்தில் நடக்கத்தான் போகிறது'' என்று அவள் சிரித்தபடி, ஆனால் உறுதியாகச் சொல்கிருள்.

சர்மா இதைக்கேட்டு மகிழ்ந்துபோகிறார். அவர் பழைய பரம்பரையைச் சேர்ந்தவர். பிள்ளையின் சம்மதத்திலும் பெற்றோரின் சம்மதந்தான் அவருக்குப் பிரதானம்.

அவரின் முகத்தில் மகிழ்ச்சி மலர்கிறது.

ஆத்மநாதன் தீ எழத் தன் சித்தியைப் பார்க்கும் பார்வையை அவராவது, ஐயராவது கவனிக்கவில்லை.

அங்கு அதைக் கவனித்த ஜீவன் ஜகந்நாதன் மட்டுமே.

அவன் சிரிக்கவில்லை. எத்தனையோவிதமான ஐயங்கள் அவன் சிந்தையை ஆக்கிரமிக்கின்றன.

# 15.

சீதா தனக்கு தில்லைநாதன் எழுதிய கடிதத்தை செல்வரத்தினத்திடம் கொடுக்கிருள். செல்வரத்தினம் கடிதத்தை வாங்கத் தயங்குகிறார்.

''சீதா! நீ என் மகளென்றாலும் உனக்கென்று சில சுதந்திரங்கள் இருக்கின்றன. உனக்கு ஒருவன் அந்தரங்கமாக எழுதிய கடிதத்தை நான் பார்ப்பது முறை என்று நினைக்கிருயா?'' என்று அவர் மகளைக் கேட்கிருர்.

தகப்பனாரின் உயர்ந்த பண்பினைச் சீதா மானசிகமாகப் போற்றுகிருள்.

''நேற்று சாப்பாட்டின் பின்னர் தில்லைநாதன் தனிமையில் இக்கடிதத்தை எனக்குத் தந்தான். 'சீதா! அவசியம் நீ இதை வாசித்துப் பார்க்க வேண்டும்' என்று கட்டளையிடுவது போலச் சொல்லிவிட்டு அவன் போய்விட்டான். கடிதத்தை வாசித்ததும், உங்களுக்கும் இதைக் காட்ட வேண்டுமென்று எனக்குத் தோன்றியது'' என்று கூறிய வண்ணம் சீதா கடிதத்தைச் செல்வரத்தினத்தின் கையில் வைக்கிருள்.

செல்வரத்தினம் கடிதத்தை விரித்துக்கொண்டே, ''பாரதூரமாக ஒன்றும் எழுதியிருக்கமாட்டானென்று நம்பலாமல்லவா?'' என்று கேட்கிருர்.

சீதா ஏளனமாகச் சிரித்தபடி ''எவரும் எதனையும் பாரதூரமாக எனக்குச் சொல்லவோ, செய்யவோ முடியாது. எதற்கும் கடிதத்தை வாசியுங்கள். பிறகு பேசிக் கொள்வோம்'' என்கிருள்.

செல்வரத்தினமும் சிரித்தபடி ''என் சீதா கோழையல்லஎன்றுஎனக்குத்தெரியும்''என்று சொல்லியவண்ணம் கடிதத்தை வாசிக்கிருர்.

வயற்காடு
1958

என் அன்புச் சீதா,

நீயும், நானும் சிறுவயதில் ஒரே பாடசாலையிலே படித்தவர்கள். நீ எனக்கு மைத்துனி முறையானவள் என்ற உரிமையும் உண்டு. இந்த இரண்டு காரணங்களையும் கொண்டே இக்கடிதத்தைத் துணிந்து எழுதுகிறேன். சாதகமான பதிலைத் தருவாய் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நீ ஒருகாலத்தில் கைநீட்டி எனக்கு அடித்திருக்கிருய். ஐந்து ஆண்டுகளுக்குமுன் எனது தந்தை உன்னை எனக்கு மணம் பேசி ஆட்களை அனுப்பியபோது, நீயும் உன் தந்தையும் அக்கோரிக்கையை உதாசீனம் செய்து எங்களை அவமானப்படுத்தியதையும் நான் மறந்துவிடவில்லை.

உனக்கு அழகு இருக்கலாம். வாழ்க்கையை எவ்விதக் குறையுமின்றி நடத்தப் போதிய செல்வமும் இருக்கலாம் ஆனால், எங்கள் சமூகக் கட்டுக்கோப்பில் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ இவ்விரண்டும் மட்டும் போதியன அல்ல என்பதை நீ அறிந்து கொள்ளாத அப்பாவியாக இருக்கிறாய். உனக்காக அனுதாபப்படுகிறேன்.

உன் தந்தை எவ்வகையிலும் உயர்ந்தவர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், உன் தாயோ சாதியிற் குறைந் தவள். இந்த நிலையில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள எவனும் உன்னை மனைவியாக ஏற்க முன்வரமாட்டான்.

நான் முரடன், குடிகாரன் என்பதெல்லாம் உண் மையே. இருப்பினும் நான் சாதிமான். சமூகத்தில் எனக்கு ஓர் அந்தஸ்து உண்டு. எனது வாழ்க்கையின் மூலதனங் களே இவ்விரண்டுந்தான்.

உனக்காக இவற்றையும் இழக்க முன் வந்தேனென் றால் நான் உன்மீது கொண்டுள்ள காதலின் அளவை நீ நன்கு அறிந்துகொள்ளலாம்.

சீதா,

உனக்கும், ஆத்மநாதனுக்குமிடையே காதல் இருப்ப தாகப் பேசிக்கொள்கிறார்கள். அதை நான் நம்பவில்லை. துணிவே இல்லாதவனும், பெருங் கோழையுமான அவனை உன் போன்ற வீராங்கனை ஒருத்தி விரும்புவான் என்று நினைப்பதே சிரிப்பைத்தரும்.

''காதலுக்குக் கண்ணில்லை'' என்ற மூடப் பழ மொழியை நீயும் ஏற்றுக்கொண்டு ஆத்மநாதன் மீது காதல் கொண்டிருப்பாயானால், சீதா! உன்னைப் போல அபாக்கியவதி யாரும் இருக்கமாட்டார்கள். எங்கள் ஊர் முழுவதுமே உங்கள் இணைவிற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கும் என்பதை இப்பொழுதே சொல்லி வைக் கிறேன்.

உன் தந்தையைப்போல நீயும், ஆத்மநாதனும் ஊர் விட்டு ஓடிப்போய் நிம்மதியாக வாழலாம் என்றும் கனவு

காணுதிர்கள். நீங்கள் எங்கு சென்ருலும் நான் தொடர்ந்து வந்து உங்கள் வாழ்க்கையைச் சர்வநாசம் செய்துவிடுவேன். என்னிடமிருந்து நீங்கள் தப்பமுடியாது.

உனது கால் வழியிலே தோன்றப் போகும் புதுப் பரம்பரையாவது இந்த ஊரில் நிம்மதியாக, கௌரவமாக வாழவேண்டும் என்று நீ விரும்பினுல், என் மனைவியாவதன் மூலமே அது சாத்தியமாகும்.

நீ என் கோரிக்கைக்குச் சம்மதித்தால் மகாராணி போல வாழலாம். நன்ருகச் சிந்தித்து உன் பதிலை எழுது.

இங்ஙனம்
உன்னை உயிராக நேசிக்கும்

சு. தில்லைநாதன்.

செல்வரத்தினம் கடிதத்தைச் சீதாவிடம் கொடுக்கிருர். சீதா அதை சுக்குநூருகக் கிழித்து வெளியில் எறிந்து விட்டுத் திரும்புகிருள்.

"தில்லைநாதன் தனது சாதியையும், அந்தஸ்தையும் காட்டிப் பயமுறுத்தி உன் காதலை விலைபேசுகிருன். அவனுடைய முட்டாள்தனத்திற்கும், முரட்டுப் போக்கிற்கும் பொருத்தமாகத்தான் இக்கடிதம் இருக்கிறது" என்று செல்வரத்தினம் வெறுப்புடனும், வெகுளியுடனும் கூறுகிருர்.

"அம்மாவின் மரண வீட்டிலே உறவு பாராட்டி, இவர்கள் வந்து நுழைந்த போதே இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியும். உங்கள் இரண்ட சொத்தாலும்காணிகளாலும், எனது சாதிக் கறையைக் கழுவிஎன்னை உயர்த்திவிடப் பாடாகப்படுகிருர்ள் இந்தப் பரோபகாரிகள்" என்று மனம் எரிந்து பேசுகிருள் சீதா.

திடீரென்று செல்வரத்தினத்தின் முகம் இருள்கிறது.

''உன் தாய் வழியிலும் உனக்கு ஒருவருமில்லை. தந்தை வழியினர் இப்படி இருக்கிறார்கள். சீதா! நான் இல்லாத காலத்தில் உன் நிலை எவ்வாறாகுமோ என்று எனக்குப் பெரும் கவலையாயிருக்கிறது பிள்ளை'' என்று செல்வரத்தினம் சொன்னபொழுது அவரின் குரல்வேதனையால் தளதளக்கிறது.

''ஐயா! கவலைப்படாதீர்கள் என்னை நீங்கள் ஓர் ஆண்மகன் போலவே வளர்த்திருக்கிறீர்கள். முழுச் சமூகமுமே என்னை எதிர்த்து நின்றாலும் துணிந்து நன்முறையில் வாழ என்னால் முடியும். நீங்கள் இல்லாத காலத்தில் கோழை போலத் தற்கொலை செய்யவோ உங்கள் ஆத்மாவிற்குத் துரோகம் செய்யும் வகையில் நடந்து கொள்ளவோ ஒருக்காலும் முயலமாட்டேன் என்பதை நம்புங்கள்'' என்று சீதா தலை நிமிர்ந்து சொல்கிறாள்.

செல்வரத்தினம் எழுந்து அவள் உச்சியைத் தடவி, ''என் மகள் என்னைப் போல அல்ல என்று எனக்குத் தெரியும். ஆனால்... ஆனால்...'' செல்வரத்தினம் மேலே பேசமுடியாது தடுமாறுகிறார்.

''ஐயா! சொல்ல வேண்டியதைத் தயங்காது சொல்லுங்கள். கேட்க வேண்டியதைத் தயக்கமின்றிக் கேளுங்கள். எதையும் தாங்குகிற இருதயம் எனக்குண்டு''என்று சீதா அவரை ஊக்குகிறாள்.

''ஒரு தந்தை கேட்கக்கூடாத கேள்வியை உன் தாய் இல்லாததால் நான் கேட்கிறேன். சீதா நீ ஆத்மநாதனைக் காதலிப்பது உண்மையா? ஒளிக்காமல் சொல்.''

சீதா சிறிதுநேரம் பேசாதிருக்கிறாள். செல்வரத்தினம் ஆவலோடு அவளின் முகத்தைப் பார்க்கிறார். சிறிது பொறுத்து சீதா, ''ஐயா! இது எனக்கே புதிராகத்தான் இருக்கிறது. சில நேரங்களில் அவருக்காக என் உயிரையே அர்ப்பணிக்கலாமென்று எனக்குத் தோன்றுவதுண்டு. சில வேளைகளில் அவரின் கோழைத்தனத்தைக் காண அள

விட முடியாத வெறுப்பு ஏற்படுகிறது. பாம்பு என்று விலகவும் முடியவில்லை. பழுதை என்று மிதிக்கவும் முடியவில்லை. இதுதான் காதலென்றால் இந்த உணர்ச்சிக்கு ஆட்படுவதை நினைக்க எனக்கு என்னிலேயே அருவருப்பு உண்டாகிறது. வெட்கமாயும் இருக்கிறது'' என்று தயக்கத்துடன் கூறுகிறாள்.

''எப்பொழுதுமே எதிர்ப்பைக் காட்டிக் கொண்டிருக்கும் பகைவனால் ஏற்படும் ஆபத்து அவ்வளவு பெரிதாக இருக்காது. ஆனால், கோழையும், சுயநலமியுமான ஒருவனே மிகப்பெரிய ஆபத்தானவன். சீதா! ஆத்மநாதன் இந்த இரண்டாம் வகையைச் சேர்ந்தவன். அவனை என் பிள்ளையைப் போல நேசிக்கிறேன். ஆனால்...... உம்! உன் சுதந்திரத்தில் நான் தலையிட விரும்பவில்லை. உன் விருப்பம் போல நீ நடந்துகொள்ளலாம்'' என்று செல்வரத்தினம் சிந்தித்துச் சிந்தித்து அமைதியாகப் பேசுகிறார்.

சீதா மீண்டும் மௌனம் சாதிக்கிறாள். சற்றுப் பொறுத்துச் செல்வரத்தினம் மீண்டும் சொல்வார்.

''உடம்பின் ஒரு சிறு உறுப்பு இயங்குவதால் உடம்பு முழுவதும் இயங்குகின்றது என்பது பொருளல்ல. சமூகம் என்பது முழுமையான ஒரு பொருள். தனி மனிதனாகிய அதன் சிறு உறுப்பு நிகழ்த்தும் புரட்சி, சமூகம் நடத்தும் புரட்சியாகிவிடாது. அப்படி நினைப்பது வெறும் மாயம். சாதிவிட்டுச் சாதியிலே விவாகம் செய்தல், சமபந்தி போசனம் என்பவற்றால் சமூகத்தை விழிப்படையச் செய்யலாம் என்ற கருத்தே முட்டாள்தனமானது. சாதிக்கொடுமை போன்ற இழிவுகளைச் சமுதாயம் முழுவதுமே உணர்ந்து திருந்த பொறுமையுடனும் துணிச்சலுடனும் இடைவிடாது கூட்டாகப் போராட வேண்டும்.''

சீதா சிரிக்கிறாள். ''ஆத்மநாதனை விவாகம்செய்வதன் மூலம் சமூகச் சீர்திருத்தம்செய்ய நான்முயல்வதாகநீங்கள் நினைக்கிறீர்களா ஐயா? நீங்களும், அம்மாவும் நடாத்திய நரக வாழ்க்கையை அறிந்த பின்னரும் அப்படி நான்

செய்வேன் என்று எப்படி உங்களால் நினைக்க முடிந்தது?'' என்றும் சீதா கேட்ட கேள்விகளுக்குச் செல்வரத்தினத்தால் பதில் சொல்ல முடியவில்லை. அவர் திகைக்கிறார்.

''ஆத்மநாதன் மீது நான் கொண்ட அன்பு பற்றி இன்னமும் என்னால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அவரை விவாகம் செய்து கொள்வதால் எனது வாழ்க்கை இலட்சியம் பூர்த்தியடைந்து விட்டதுஎன்று நான் நிம்மதி அடைவேன் என்றும் கருதவில்லை. விவாகத்தைப் பற்றியே இன்று வரை நான் நினைத்துப்பார்த்ததில்லை. நீங்கள்தான் புதிய பிரச்சினையை கிளப்புகிறீர்கள் ஐயா'' என்று சீதா எங்கோ பார்த்தபடி, சிந்தனையோடு கூறுகிறாள்.

''சீதா! நீ ஓர் அபூர்வப்பிறவி. உன்னை என்னால்புரிந்து கொள்ளமுடியவில்லை'' என்று செல்வரத்தினம் தமது தோல்வியை ஒப்புக்கொள்கிறார். அவருக்கு அந்தவேளையில் வேறு ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை.

சீதா பெருமூச்சு விடுகிறாள்.

## 16.

''என்ன ஐசே! உமது மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்லும். அப்பாவுக்கோ, சித்திக்கோ பயந்து வாயை மூடி ஊமையாய் இருக்க வேண்டாம். கலியாணம் ஆயிரங்காலத்துப் பயிர். அதை முளையிலேயே கருக்கி விடக்கூடாது.'' ஜகந்நாதன், ஆத்மநாதனைத் தனிமையிலே அழைத்து வந்து இப்படிக்கேட்கிறான். அவனுடைய கைகள் ஆத்மநாதனை ஆதரவோடு அணைத்தபடியிருக்கின்றன.

ஆத்மநாதனுக்கு இந்த ஆதரவுதான் இப்போது தேவைப்படுகிறது. அவன் உணர்ச்சிவசப்பட்டு ஜகந்நாதனை இறுகப் பற்றிக்கொள்கிறான்.

''உம்மை நம்பலாமா?''

ஜகந்நாதன் சிரிக்கிறான். ''ஒரு நாள் பழகினாலும் மேலோரின் நட்பு பெரிய நிலத்திலே ஆழமாக வேர்விடும் என்று படித்திருப்பீரே. நான் மேலோன் என்பதை உம்மால் நம்பமுடியவில்லையா?'' என்று சொல்லிச் சிரிப்பிலே சிலுங்குகிறான். அந்தச் சிரிப்பிலே ஆத்மநாதனின் சிந்தனை தேங்கிய மௌனம் கலைகிறது. ஜகந்நாதனுக்குத் தன் அந்தரங்கங்களையெல்லாம் சொல்லிவிட அவன் துடிக்கிறான். ''ஜகந்நாதன்! உண்மையைச் சொன்னால் என்ன? நான் ஒருத்தியைக் காதலிக்கிறேன். அவளைக் கலியாணம் செய்யக்கூடவேண்டாம். வாழ்நாள் முழுவதும் அவளுக்காகக் காத்திருக்கலாம்போல இருக்கிறது. இந்த எதிர்பார்ப்பிலே உள்ள இன்பம் வேறு எதிலுமே இல்லை. இதை நான் யாருக்குச் சொல்வது? என்னுள்ளே நான் காணும் கனவுகளை யாருடன் பங்கிட்டுக்கொள்வது? இந்த நிலையிலே உமது சகோதரியை மணப்பது சரியா? நீரே சொல்லும்?'' என்று குரல் தளதளக்க அவன் கூறுகிறான்.

ஜகந்நாதனுக்கு வேடிக்கையாக இருக்கிறது. ''சபாஷ்! உம்மை மெச்சுகிறேன் உமக்கு வாழத் தெரிந்திருக்கிறது. விருப்பமில்லாத திருமணத்தால் என்றைக்கும் வேதனைதான். அதிலிருந்து விலகிக்கொள்வதன்மூலம் எனது சகோதரியையும் காப்பாற்றிவிட்டீர். உமக்கு நான் நன்றி சொல்லவேண்டும்.''

ஆத்மநாதனுக்கு ஜகந்நாதனின் பெருந்தன்மை புளகாங்கிதத்தை உண்டாக்குகிறது. அவன் அன்போடு ''நீர் ஆயிரத்தில் ஒருவர்'' என்கிறான்.

ஜகந்நாதன் அவன் வார்த்தைகளைச் செவிசாய்க்காதவன் போலத் தொடர்ந்து பேசுகிறான்: ''உண்மையில்

என் தங்கை இந்தச் சிறு வயதிலே விவாகம் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. அவளுக்கு இந்த மார்கழியில்தான் பதினுன்கு வயது தொடங்குகிறது. அவளைத் தோளிலே தூக்கிவைத்துச் சாமி காட்டியது நேற்றுப்போல இருக்கிறது! இவளுக்கு இப்பொழுது கலியாணம் அவசியந்தானு? என்று அப்பாவுடன் சண்டை பிடித்துத் தோற்றுப் போய் அரை மனத்துடன்தான் உம்மைப் பார்க்க வந்தேன். உமது மன நிலையினை அறிந்ததும் நன்மையாய்ப் போய்விட்டது'' என்று அவன் நிம்மதிப் பெருமூச்சு விடுகிருன்.

ஆத்மநாதனுக்குத் தனது சமூகத்தின் அறியாமையை நினைக்க இரத்தமே கொதிக்கிறது. ''கல்யாணம் ஒரு பொம்மை விளையாட்டு என்பது எங்கள் பிராமணச் சாதியின் எண்ணம். இதனுல் ஏற்படும் அனர்த்தங்களை ஒருவருமே சிந்திப்பதில்லை. பத்துப் பன்னிரண்டு வயதிலே திருமணம் செய்துகொள்ளும் பிராமணப் பெண், இருபத்தைந்து வயதுக்குள்ளேயே கிழவியாகிவிடுகிருள். பன்றி குட்டி போட்டதுபோல டசின் கணக்கிலே பெற்றுத் தள்ளினுல் இளமை விரைவில் மறையாமல் என்ன செய்யும்? பொருளாதாரக் காரணங்களாலும், கோயிலிலே கொடியேற்றித் திருவிழா நடத்தும் குருக்கள் மணமானவராயிருத்தல் வேண்டுமென்ற சமயக் கட்டுப்பாட்டாலும், கட்டையிலே போகும் வயதிலும் பிராமணன் மூன்ரும், நாலாந்தரம் என்று மணம் செய்து தன் வாழ்க்கையையும் பாழாக்கி, இளம் பெண்ணின் வாழ்க்கையையும் நாசம் செய்து விடுகிருன். என் அப்பாவின் வாழ்க்கை இதற்கு உதாரணம்! எங்கள் சாதிக்கு என்றைக்குத்தான் விடிவு ஏற்படப்போகிறதோ?'' என்று ஆத்மநாதன் இரங்குகிருன். ஜகந்நாதன் அவன் சொன்னதை ஆமோதிப்பதுபோலத் தலையாட்டுகிருன். ''எங்கள் சமூகத்தின் ஒழுக்கக் கேடுகளுக்கும், அறியாமைக்கும் இத்தகைய இணைவில்லாத கலியாணங்கள்தாம் காரணம்'' என்று மிகுந்த வேதனையுடன் ஜகந்நாதன் கூறுகிருன்.

திடீரென்று ஆத்மநாதன் ஜகந்நாதனின் தோள்களைக் குலுக்கி, ''உமக்குச் சாதியமைப்பில் நம்பிக்கை இருக்கிறதா?'' என்று கேட்கிறான். அவன் கேள்வி ஜகந்நாதனைச் சிந்திக்கவைக்கிறது. சிறிது பொறுத்து அவன் சொல்கிறான்: ''சாதியாவது வியாதியாவது! அது ஒரு கேலிக்கூத்து. ஒரு காலத்தில் வருணாசிரம தர்மம் சிறப்பாக இருந்திருக்கலாம். சமூகத்தின் அமைதிக்கும், ஒழுங்குக்கும் அது உதவியிருக்கலாம். ஆனால் இன்று அது தேவையில்லை. என்றைக்கு அவ்வச் சாதிக்குரிய அறம் கைந்நெகிழ்க்கப்பட்டதோ அன்றைக்கே அந்தச் சாதி அழிந்துவிட்டது என்பதுதான் அர்த்தம்!

''இன்று பிராமணன் பிராமணனாகவா இருக்கிறான்? நீர் படித்தவராயிற்றே? உமக்குத் தெரியாதா? 'ஸ்வாத்யாய ப்ரவசனாப்யாம் நப்ரமதி தவ்யம்' (நீ கற்பதிலும், கற்றதைப் பிறருக்குப் போதிப்பதிலும் அசட்டையாய் இராதே) என்று பிராமணனைத் தைத்ரீய உபநிஷதம் கட்டாயப்படுத்துகிறதே! இன்று எந்தப் பிராமணன் இவற்றைக் கடைப்பிடிக்கிறான்? ஓதல், ஓதுவித்தல், வேட்டல் (வேள்வி செய்தல்), வேட்பித்தல் (வேள்வி பிறரைக் கொண்டு செய்வித்தல்) ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு வகைக் கடமைகள் அவனுக்கு வகுக்கப்பட்டன அல்லவா? இவற்றில் ஒன்றையே கடைப்பிடிக்காத பிராமணர் எத்தனை பேர்? இந்த நிலையில் சமூகம் எம்மை மதிக்கவில்லை என்று குறைப்படுவதால் பயன் என்ன? இப்படித்தான் ஒவ்வொரு சாதியும்! அதனதன் தர்மம் எப்போதோ அழிந்துவிட்டது. உயிர்போன பிணத்தைத்தான் நாற, நாற வீட்டுக்குள் வைத்துத் தீப தூப நைவேத்தியம் காட்டி வருகிறது'' என்று ஆயத்தம் செய்த பேச்சொன்றை மளமளவென்று சொல்லி முடிப்பதுபோல இடையீடின்றிப் பேசி நிறுத்துகிறான்.

திடீரென்று ஆத்மநாதன் ஜகந்நாதனைத் தழுவிக்கொண்டு, ''நான் என் சாதியல்லாத வேறொரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஒரு நாள் அந்தக் காதல் நிறைவேறி

நாங்கள் தம்பதியானால், எங்களை ஆதரித்து அன்புசெய்ய நீராவது இருப்பீரல்லவா?'' என்று மன்றாடுங் குரலிலே கேட்கிறான்.

''இதோ பாரும். ஊரில் எனக்கு, கொம்யூனிஸ்ட் ஐயர் என்று பட்டப் பெயர். இதிலிருந்து நீர் மீதியை அறிந்துகொள்ளலாம். எனது உயிரைப் பணயம் வைத்தாவது உமது கலியாணத்தை முன்னின்று நடத்திவைப்பேன். திருப்திதானே?''

''ஜகந்நாதா!'' என்று தன் தழுவலை மேலும் இறுக்கிக் கொண்டு ஆத்மநாதன் விம்முகிறான்.

ஜகந்நாதன், ஆத்மநாதனின் கண்ணீரைத் துடைத்து, ''அழுகையைக் காண்பதே எனக்கு வெறுப்பு. அதுவும் ஆண்மகன் அழுவது—அது எந்த உணர்ச்சியாயிருந்தாலும் சரி—என்றால் சகிக்க முடியாதது. நிமிர்ந்து நில்லும். எதிர்ப்புக்களைப் பொடிப்பொடியாக்கும் மனோ வலிமை இல்லாதவன் எதனையும் சாதிக்கமுடியாது'' என்று தனது முன்னைய உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டு கடுமையாகச் சொல்கிறான்.

ஆத்மநாதன் தனது உணர்ச்சிகளைச் சமன்செய்தவனாய், அந்தக் குளிர்தருவின் நிழலிலே தன் காதற் காவியத்தை அரங்கேற்றுகிறான்.

## 17.

சுந்தரராச சர்மாவும், ஜகந்நாதனும் வயற்காட்டுக்கு வந்து திரும்பிய நாளிலிருந்து அடுத்த மூன்று நாட்களும் பெருமழையும், புயற்காற்றும் பரவலாக இலங்கை முழுவதுமே பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. மின்சாரக் கம்பிகள், தொலைபேசிக் கம்பிகள் பல இடங்களில்

அறுந்து தொடர்புகளைத் துண்டிக்கின்றன. பெரு மரங்கள் பாறி விழுந்தும், கிளைகள் முறிந்தும் வீதிகள், பாதைகளைத் தடைசெய்து பெருநட்டத்தை விளைவிக்கின்றன. பள்ளக் காணிகளிலும், சிறு மண் குடிசைகளிலும் வாழும் ஏழைகள் வெள்ளத்தாலும், வீட்டு இடிவுகள், சரிவுகளாலும் அகதிகளாகி நடுத் தெருவில் நிற்கும் நிலை ஏற்படுகிறது.

வயற்காட்டுக் கிராமமும் இதற்கு விதிவிலக்காகவில்லை. விசேடமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். காலாதி காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு, உயர்சாதியாரால் ஒதுக்குண்டு சுகாதார வசதியோ, பொருளாதார வாய்ப்போ இன்றி வாழ்க்கை நரகமாகிவிட நடைப் பிணங்களாய் வாழ்ந்தவர்கள் இவர்கள். இவர்களில் பெரும்பாலானவரின் நிலை, இப் பெருமழை புயலுக்குப் பின்னர் மேலும் கேவலமாகிவிடுகிறது. குந்தியிருக்கக் குடில்கூட இல்லாமல் கண்ணீர் விட்டுக் கதறியழுதபடி பெண்டு பிள்ளைகளுடன் இவர்கள் நின்ற கோலத்தைக் காணும் எவருடைய இதயமும் இரத்தக் கண்ணீர் விட்டிருக்கும்.

ஆனால் வயற்காட்டின் மேல்தட்டு வர்க்கம் இவர்களின் அவலத்தைப் போக்க எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை. தேர்தற் காலத்திலே சமத்துவம் கொண்டாடி, வாக்குப் பிச்சையெடுத்து, கிராமச் சங்கத் தலைவராயும், அங்கத்தவராயும் வந்தவர்களும் தமது இனசனங்கள், உற்றாரின் கவலையைப் போக்குவதில் மும்முரமாய் ஈடுபட்டு உழைத்தார்களேயல்லாமல், பரிதாபத்திற்குரிய இவர்களுக்கு உதவ முன்வரவில்லை.

நாள் தவறினாலும், கள்ளிலே முகங்கழுவுதலில் தவறுத சரவணையர், சுப்பர் போன்றவர்கள் 'இன்னும் ஒரு கிழமைக்குக் கள்ளுக் கிடைக்காதே' என்று வருந்தினார்களேயன்றி, இந்த அகதிகளுக்காகச் சிறிதும் இரங்கவில்லை. ஒருவகையில், இக் 'கீழ்சாதிகளின்' அந்தரிப்பும்,

அவலமும் இவர்களுக்கு மகிழ்ச்சியையே அளித்தது என்று தான் சொல்லவேண்டும். ''மட்டு மரியாதையில்லாமல் சமத்துவ கோஷம் எழுப்பிக்கொண்டு கோயிலுக்குள் பிரவேசிக்கவும், தேநீர்க் கடைகளிலே நுழைந்து சமமாயிருந்து உண்ணவும் முயலும் இதுகளுக்குக் கடவுள்தான் இப்படித் தண்டனை கொடுத்திருக்கிறார்'' என்று இவர்கள் பேசிக்கொள்கிறார்கள்!

தில்லைநாதனுக்கோ உற்சாகம் பிடிபடவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் ஆலயப் பிரவேச இயக்கம் வயற்காட்டில் தலையெடுத்த பொழுது இவனும், இவனைச் சேர்ந்த உயர்சாதி இளைஞர் சிலருமாக, தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு நெருப்பு வைத்து, செல்வமும், செல்வாக்கும் காரணமாக மறியலுக்குச் செல்லாமல் தப்பிக்கொண்டவர்கள்! ''இன்று இயற்கையின் உற்பாதமே இந்த நிலையைத் தாழ்த்தப்பட்டவருக்கு உண்டாக்கிவிட்டது'' என்று இவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

ஆனால் சீதாவிற்கும், செல்வரத்தினத்திற்கும் இவர்களைப் போல இருக்க முடியவில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த பேரிழப்பையும் மறந்து இவ்வேழைகளுக்குப் பல வகைகளிலும் உதவிசெய்கின்றனர். குடிசைகளை இழந்து நின்ற அகதிகளை அழைத்துவந்து தங்கள் வீட்டிலேயே இடம் கொடுக்கின்றனர். சீதா பகலிரவாக இந்த அபாக்கியக் கூட்டத்திற்குச் சமைத்துப் போடுவதிலும், ஆதரவு சொல்லுவதிலும் தனது பெரும் பகுதி நேரத்தைக் கழிக்கிறாள்.

செல்வரத்தினம் இவ்வளவோடு நிற்கவில்லை. மாவட்ட இறைவரி அதிகாரியையும், அரசாங்க அதிபரையும், தமது தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரையும் மழை, புயல் எல்லாம் அடங்கிய பின்னர் சென்று கண்டு நிலையை விளக்குகிறார். அவர்கள் பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தும், நிதியுதவிக் கோரிக்கை விடுத்தும், தங்களால் ஆனதைச் செய்கின்றனர்!

அமைதியும், ஏகாந்தமும் நிறைந்து விளங்கிய அவரின் வீட்டை இந்த அகதிகளின் வருகை கலகலப்பாக்கி விடுகிறது. தமது 'ஆஸ்மா' வியாதியையும் மறந்து இலட்சிய வைராக்கியத்துடன் அவர் செய்யும் சேவையைக் கண்டு சீதாவே வியப்பை அடைகிருள்.

''ஐயா! மழையிலும், குளிரிலும் இப்படி அலைந்து திரிகிறீர்களே? கொஞ்சம் ஆறி அமர்ந்து இவற்றைச் செய்தால் என்ன?'' என்று சீதா இரக்கத்தோடு அவரைக் கேட்கிருள்.

செல்வரத்தினம் சிரிக்கிருர். ''மகளே! இந்த வேலையில் நான் சோர்ந்து மூலையில் இருந்தால், இந்தப் பரிதாபத்திற்குரியவர்கள் கதி என்னுவது? என் 'ஆஸ்மா'தான் எப்பொழுதும் இருக்கிறது! அதைப்பற்றி நினைக்க இது நேரமல்ல'' என்று அவர் கம்பீரமாகக் கூறுகிருர்.

''ஐயாவிற்கு அம்மாவின் மரணத்தோடு வாழ்வே வெறுத்துவிட்டது. இன்று இந்தச் சேவையே அவரை வாழ வைத்து, வாழ்வில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அம்மாவிற்குச் செய்த கொடுமைகளுக்கு இது ஒரு பிராயச்சித்தம் என்றுகூட அவர் கருதலாம். ஆகவே அவரின் வழியில் விட்டுப் பிடிப்பதே சரி. அல்லாமலும் ஏழைகளுக்கும் விடிவு ஏற்படத்தானே வேண்டும்'' என்று சிந்தித்து அவள் அவரை அதன் பிறகு தடுக்கவேயில்லை. 'Cowards die many times before their death, the valient never taste of death but once' (அஞ்சினர்க்குச் சதமரணம்; அஞ்சாத நெஞ்சத் தாடவர்க்கு ஒரு மரணம்) என்று அவர் அடிக்கடி சொல்லும் ஷேக்ஸ்பியரின் வாசகங்கள், அவ்வேளையில் அவள் நினைவில் வருகின்றன. ''இத்தகைய ஒருவர் என் தந்தை'' என்று நினைக்க அளவிட முடியாத பெருமிதம் அவளுக்கு ஏற்படுகிறது.

★

வயற்காடு,
.57

அன்பார்ந்த ஜகந்நாதன்,

கடந்த மூன்று நாட்களாய்ப் பெய்த பெருமழை, வீசிய புயற்காற்று இரண்டுமாக என் கொழும்புப் பயணத்தைத் தடைசெய்துவிட்டன.

நாங்கள் குடியிருக்கும் கோவில் வீட்டுக் கூரை புயற்காற்றிலே அள்ளுப்பட்டுப் போயிற்று. இதனுல் அப்பா, சித்தி, குழந்தைகள் அடைந்த இன்னல்கள் கொஞ்சமல்ல. நாங்கள் எல்லோருமாகப் பெட்டி படுக்கைகளுடன் கோயில் மடப் பள்ளியிலே குடியேறியிருக்கிறோம். கோயில் வசந்த மண்டபத்திலேதான் இரவுப் படுக்கை.

அடுத்த மாதம் 'கிளாஸ் ரூ' பரீட்சை. ஊர் வரும் பொழுது பரீட்சைக்கான குறிப்புகளையும் கொண்டு வந்தது நல்லதாய்ப் போயிற்று. ''வெளியிலே புயற்காற்றும், இடி மின்னலும், பெருமழையும் சன்னதமாடிக்கொண்டிருந்த் மூன்று நாட்களும்'', கோயில் வசந்த மண்டபத்தில் சிறிய சிமினி விளக்கின் உதவியோடு நான் பரீட்சைக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தேன்'' என்று சொன்னுல் உமக்கு ஆச்சரியமாயிருக்கும். என்னைப் போன்ற ஏழைகளுக்கு, இத்தகைய பரீட்சைகளிற் சித்தியெய்தினுல் தானே ஓரளவு வாழ்க்கையைத் தளப்பமில்லாது ஓட்ட முடியும்? பெரும்பாலும் இந்தப் பரீட்சையிலே சித்தி அடைவேன் என்றே நம்புகிறேன். மீதி இறைவன் செயல். நீரும் எனக்காக இறைவனை வேண்டும்படி நட்புரிமையோடு வேண்டிக்கொள்கிறேன்.

நிற்க, எங்கள் ஊரில் இம்மழை புயலாற் பெரும் பாதிப்பு அடைந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சாதி மக்களே. பட்டினப் புறங்களிலே கள்ளிறக்குதல், கார் ஓட்டுதல், உத்தியோகம், சிறு வியாபாரங்கள் முதலியவற்ருல் பொருளாதார வளம்பெற்று வாழும் இவர்களின் இனத்தாரின் வாழ்க்கை போன்றதல்ல இவர்கள் வாழ்க்கை. எப்பொழுதும் உயர்சாதி மக்களின் தயவில், அவர்களின்

காணிகளில் அவர்களுக்கு அடிமை குடிமைகளாய் நரக சீவியம் நடாத்துபவர்கள் இந்த ஏழைகள். பெரும்பாலும் பள்ளக் காணிகளில் சிறு கொட்டில்கள் அமைத்து, 'குஞ்சான் குருமான்களுடன்' நெருக்கியடித்து, பலவித இன்னல்களிடையே வருந்திக்கொண்டிருப்பவர்கள். இன்று அந்தக் குடில்களும் புயலுக்குப் பலியாக அவதிப்படுகிறார்கள்.

இவர்கள் நிலைகண்டு வருந்தி இவர்களைத் தங்கள் வீட்டிற்கே அழைத்து வந்து ஆதரவு தருகிறார்கள் சீதாவும், அவள் தந்தையும். உண்மையிலேயே இது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. சமூக எதிர்ப்புக்களையும், உறவினரின் புறக்கணிப்பையும் தூசென மதித்து துணிகரமாகச் செயற்படும் இவ்விருவரும் உண்மையில் தெய்வத்திற்குச் சமமானவர்களே என்று என் உள்மனம் சொல்கிறது.

ஆனால். இருதயமற்ற இவர்களின் உறவினர் இவர்களை மிகக் கேவலமாக நடத்துகிறார்கள். சரவணையர், சுப்பர், தில்லைநாதன் முதலியோர் இப்பொழுது இவர்களின் வீட்டுக்குச் செல்வதேயில்லை. இரவு வேளைகளிலே வீட்டுக்குக் கல்லெறிதல், ஆபாச வார்த்தைகளைச் சுவரிலே எழுதுதல், சாம வேளைகளில் தெருவால் இவர்கள்பற்றிக் கேவலமாக, வாயாற் சொல்லத்தகாத வார்த்தைகளில் ஏசிச் செல்லுதல் முதலிய ஈனத்தனமான செயல்களும் நடைபெறுவதாய் அறிகிறேன். இத்திருவிளையாடல்களின் மூலகர்த்தா தில்லைநாதன் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் தெரிந்து என்ன பயன்? நேற்றுப் பின்னேரம் நடந்ததைக் கேளும். நான் சீதாவின் வீட்டிற்குச் செல்லத் தெருவால் வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது தில்லைநாதனும், அவன் சகாக்களான காவாலிகள் சிலரும் என்னை வழிமறித்தார்கள். 'டேய் பிராமணி! என்ன? அந்தக் கோவிச்சி வீட்டுக்கா போகிறாய்? அங்கே இருக்கிற

பள் பறை போதாதென்று நீயும் போகிறுய்? எளியவா! நீ இனி அங்கே போனுல் உன் குடும்பமே நடுத் தெருவில் நிற்க வைப்போம்'' என்றும், இன்னும் என்ன என்னவோ கண்டபடி தில்லைநாதன் என்னை ஏசினுன்.

எனக்கு இரத்தம் கொதித்தது. ஆனுல் அவர்களோ பலர். நானே தனி ஒருவன். என்னுல் என்ன செய்ய முடியும்? என் கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு வீடு திரும்பினேன். ''கடவுளே! இந்தக் கண் கெட்ட கொடியவர்களை நீதான் தண்டிக்கவேண்டும்'' என்று என் வயிறு எரிந்தது. உண்மையில் இவர்கள் நல்லாய் இருக்கமாட்டார்கள். சாதித் திமிரின் கொடுமை எவ்வளவென்று பார்த்தீரா?

மழைவிட்டு, புயலால் சிதைந்த புகையிரதப் பாதைகளும் திருத்தப்பட்டு, றெயில் ஓடத் தொடங்கி விட்டதாம். ஆனுல் நான் இந்தக் கிழமையும் கொழும்பு செல்ல முடியாது. கோயில் வீட்டைத் திருத்தி முடிந்த பிறகுதான் கொழும்பு செல்லலாம். எப்படியும் அடுத்த கிழமை கொழும்பு சென்றேயாகவேண்டும். கிளாஸ் ரூ பரீட்சையை இழக்க நான் தயாராயில்லை. இப்பொழுது சுகவீன லீவில் நிற்கிறேன்.

உமது ஊர் நிலை எப்படி? அறிய ஆவல். என் மன நிலை உமக்குத் தெரியுந்தானே? சீதாவைக் காணுமல் ஒரு நாள் ஒரு யுகம்போல இருக்கிறது. எப்படியும் நான் கொழும்பு செல்லுமுன், அவளையும், தந்தையையும், சாம நேரத்திலாவது சென்று கண்டாலே திருப்தியும், அமைதியும் ஏற்படும். காவியங்களிலும், சங்க இலக்கியங் களிலும், தற்கால நவீனங்களிலும், நள்ளிரவில் தடை களைத் தாண்டிச் சென்று காதலியைக் காதலன் காண்பது உமது கற்பனையில் இக்கடிதத்தை வாசிக்கும் பொழுது தோன்றி நீர் சிரிக்கவும் கூடும். சிரியும்! சிரியும்! உமக்கு இப்படியொரு காதல் ஏற்பட்டு ஏங்கும் பொழுதுதான் என் நிலை புரியும்.

இந்த வார 'கேசரி'யில் எனது சிறுகதை 'நெஞ்சில் நிறைந்தவள்' வாசித்தீரா? எனது 'நெஞ்சில் நிறைந்தவள்' வேறு யாருமல்ல; என் சீதாதான்! இச்சிறுகதை எனது உணர்ச்சிகளின் காவியம்! இதுவரை வாசிக்காதிருந்தால் இனியாவது வாசித்து, உமது கருத்தை எழுதவும். உம்போன்ற இரசிகர்களின் விமர்சனங்கள்தாம் என்னைப் போன்ற எழுத்தாளர்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகும்.

அன்பன்,

ஆத்மநாதன்.

கடிதத்தை வாசிக்க வாசிக்க ஜகந்நாதனின் கோபம் எல்லை கடந்து செல்கிறது. ''சீ! ஆத்மநாதன் இவ்வளவுதானு? இவனைப்போய் இலட்சிய புருஷன் என்று மதிப்பளித்தேனே? சுயநலத்திற்கும், கோழைத்தனத்திற்கும் இலக்கணமாக விளங்கும் இவனு பிரபல எழுத்தாளன் 'ஆத்மன்'? வெட்கக் கேடு'' என்று சிந்தித்துக் காறி உமிழ்கிருன், ஜகந்நாதன்.

''இப்பொழுதே சென்று இக்கடிதத்தை ஆத்மநாதனின் முகத்திலே வீசியெறிந்து, ''நீயும் ஒரு மனிதனு?'' என்று நெற்றிக்கு நேராகக் கேட்கவேண்டும்'' என்ற ஆவேசம் அவனுக்கு ஏற்படுகிறது.

அவன் தன் ஆவேசத்தைச் செயலாக்க, சட்டையை அணிந்துகொண்டு புறப்படுகிருன்.

## 18.

வெள்ளம் வற்றிவிடுகிறது. வானம் வெளிக்கிறது. நான்கு நாட்களுக்குப் பிறகு அன்றுதான் சூரியனும் வான அரங்கில் பவனி வரத் தொடங்குகிறான். தாழ்த்தப்பட்ட மக்களின் நெஞ்சுகளிலும் நம்பிக்கை ஒளி சுடர்விடுகிறது. அவர்கள் தத்தம் காணிகளுக்குத் திரும்பி மீண்டும் கொட்டில்கள் போடும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கிடுகு, சலாகைகள், கயிறு முதலிய உபகரணங்கள் செல்வரத்தினத்தின் நிதியுதவியால் எளிதில் கிடைக்கின்றன. அவர்கள் தமது இதயங்கனிந்த நன்றியை வார்த்தைகளாலும், கண்ணீராலும் செல்வரத்தினத்திற்கும், சீதாவிற்கும் செலுத்துகிறார்கள். அன்றும் சீதாதான் அவர்களுக்கு உணவளித்து அவர்களின் கொட்டில்களுக்கு அவர்களை அனுப்பிவைக்கிறாள்.

வீடு வெறிச்சோடிப் போகிறது. சீதா பெருமூச்சு விடுகிறாள். "இந்த நாலு நாட்களாய் மனக் கவலைகளையெல்லாம் மறந்திருந்தேன். சேவை என்ற நெருப்பிலே அவை கருகிச் சாம்பலாகிக்கொண்டிருந்தன. இவ்வெளிய சீவன்களின் கள்ளமற்ற பரிசுத்த அன்பாலும், ஆதரவாலும் என் தனிமையுணர்ச்சி மறைந்து கிடந்தது. அவர்கள் போனதும் கவலை மீண்டும் என்னைச் சூழ்ந்துகொள்கிறது. என்ன செய்வேன்?" என்று கண்ணீர் கலங்கச் சீதா சொன்னபொழுது, செல்வரத்தினமும், "அது உண்மைதான்" என்று ஏற்று அவளின் துக்கத்திலே தானும் பங்கு கொள்கிறார்.

"சீதா! செல்வத்தாலும், ஆடம்பர வாழ்க்கையினாலும் கிடைக்காத நிம்மதியை ஏழை மக்களின் சேவை ஒன்றினாலே நாங்கள் பெற்றுவிட்டோம். இனி என்னும் அவர்களின் நலனுக்கே எம்மை அர்ப்பணிப்போம். கடவுள்

இவர்களின் உருவத்திலேதான் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று உறுதியாக நம்புகிறேன். தனி மனித உணர்ச்சிகளுக்கும், குடும்ப நன்மைகளுக்குமென்று கௌரவமளித்து, வாழ்ந்து நான் சலித்துப்போனேன். 'After all, what is life? It is only an illusion' (பார்க்கப் போனால் இந்த வாழ்க்கை என்பது என்ன? இது வெறும் மாயம்) பாசம், பற்று என்று மனிதன் தன்னைச் சிறப் பித்துக் கடவுளுக்குத் துரோகம் செய்யத் தொடங்கியதிலி ருந்து வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிட்டது'' என்று செல் வரத்தினம் தத்துவ விசாரத்திலே இறங்குகிறார்,

சீதாவிற்கு அவர் பேச்சின் பொருள் சிறிது சிறிதாகப் புலனாகின்றது. ஆத்மநாதன் கடந்த நான்கு நாட்களாய் ஊரில் இருந்தும் எட்டிப் பார்க்காமல் இருந்ததை எண் ணித்தான் ஐயா இவ்வாறு சலிப்படைந்து பேசுகிறார் என் பதை அவள் உணர்ந்துகொள்கிறாள். அவள் உள்ளத்தில் மாத்திரம் இந்த அடி விழவில்லையா? அவளும் ஆத்மநாத னின் தன்னலமும், கோழைத்தனமும் நிறைந்த மனப் பாங்கினை உணர்ந்து, ஏமாற்றத்தினாலே வாடிக் கருகிக் கொண்டுதானேஇருக்கிறாள். ஆனால், செல்வரத்தினத்தைப் போல துறவு மனப்பான்மை அவளுக்கு ஏற்படவில்லையே ஏன்?

இன்னமும் ஆத்மநாதனை அவள் நேசிக்கிறாளா? நேசிக் கலாமா?

சீதாவால் ஒரு முடிவிற்கும் வரக் கூடவில்லை. தன் பல வீனத்தில் அவளுக்கு அடக்க முடியாத வெறுப்பு ஏற்படு கிறது.

அவள் மௌனமாகத் தன்னிடத்திலிருந்து எழுந்து வெளியே வருகிறாள்.

அந்த வேளையில் ஆத்மநாதனும், ஜகந்நாதனும் கேற் றைத் திறந்துகொண்டு உள்ளே வருகிறார்கள்.

★

உட்புற ஹோலிலுள்ள நாற்காலிகளில் நால்வரும் அமர்ந்திருக்கிருர்கள். சில நிமிஷங்கள் ஒருவருக்கும் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. கடைசியில் ஜகந்நாதன் தான் பேச்சைத் தொடங்குகிருன்.

''தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடந்த நாலு தினங்களாக நீங்கள் ஆற்றிவரும் சேவைகளைப் பத்திரிகை வாயிலாய் அறிந்தேன். ஆத்மநாதன் என் நண்பர். அவரும் உங்களைப் பற்றி எழுதியிருந்தார். தீவிர முற்போக்குக் கொள்கைகளை உடைய உங்களைக் கண்டு உங்கள் சேவையில் நானும் பங்குகொள்ள ஆசைப்பட்டே வந்திருக்கிறேன்'' என்று அவன் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிருன்.

செல்வரத்தினம் சிரித்துக்கொண்டே, ''சேவைக்கு ஆசையிருந்தால் மட்டும் போதாது. கொள்கையில் நம்பிக்கையும், அதைச் செயற்படுத்தும் மன உறுதியும் அவசியம். இவை உங்களிடம் இருக்கின்றன என்று வெறும் வார்த்தைகளால் நான் நம்பிவிட முடியாது'' என்கிருர்.

ஆத்மநாதன் அளவு கடந்த கூச்சத்தோடுதன்னுள்ளே ஒடுங்கிப் போகிருன். குனிந்த தலை நிமிரவில்லை.

ஜகந்நாதன் தனது வழக்கத்திற்கு ஏற்ப செல்வரத்தினத்திலும், அதிகமாகச் சிரித்து, ''வார்த்தைகளில் எனக்கும் நம்பிக்கையில்லை. கட்டளையிடுங்கள். செயலிலே செய்கிறேன்'' என்று உறுதியாகக் கூறுகிருன்.

செல்வரத்தினம் ஜகந்நாதனை நோக்கி, ''இன்றிரவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நானும், சீதாவும் அவர்களின் இடத்திற்குச் சென்று உணவளிக்கப் போகிறோம். நீங்களும் எங்களுடன் வந்து உதவுங்கள். கடந்த நான்கு மாதங்களாய் நானும், சீதாவும், அவர்களுடன் ஒரே பந்தியில் இருந்து சாப்பிட்டு வருகிறோம். நீங்களும் எங்களுடன் இருந்து சாப்பிட வேண்டும்! சமபந்தி போசனத்தினல் சாதிபேதம் ஒழியாது என்று சில நிமிஷங்களுக்கு முன்னர் தான் சீதாவுக்குச் சொன்னேன். ஆனல் உங்களைப்

போன்றவர்கள் இந்தச் சிறிய சீர்திருத்தத்தினை ஏற்கு மளவாவது மனப்பண்பை அடைந்திருப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். 'I dont belive in words, but in deeds' (நான் சொற்களை நம்புவதில்லை. செயல்களையே நம்பு கிறேன்.) என்ன சொல்கிறீர்கள்?

''ஐயா! சமூகச்சீர்திருத்தப் போராட்டத்தில் எதனை யும் ஆகுதி வழங்க நான் தயாராய் இருக்கிறேன் என்பதைக் காட்ட எனக்கு அரிய சந்தர்ப்பம் ஒன்றை நீங்கள் அளிக்கிறீர்கள். இதற்கு நான் எப்பொழுதும் நன்றியாய் இருப்பேன்'' என்று ஜகந்நாதன் மனப்பூர்வ மாகச் சொல்கிறான். ஆத்மநாதனின் முகத்தில் அசடுவழி கிறது. தவிர்க்கவியலாத மரணப்பூட்டொன்றினுள்ளே அகப்பட்டுவிட்ட நிலையில் அவன் மனம் உளைகிறது.

செல்வரத்தினமும், சீதாவும் ஆத்மநாதனின் மாறு கின்ற முகபாவத்தையும், சலனங்களையும் கூர்ந்து கவனிக் கிறார்கள்.

சீதா பேசுகிறாள். ''நீங்கள் பிராமணர். சமபந்தி போசனத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்பு மிகப் பெரி தாய் இருக்கும். நாங்களோ சாதிகெட்டவர்கள். சாதியி லிருந்து தள்ளப்பட்டவர்கள். திடீரென்று ஏற்படும் உணர்ச்சிக்கு உங்களைப் பலியிட்டுவிடாதீர்கள். சிந்தித் துச் செயலாற்றுங்கள்.'' அவளின் பேச்சு ஜகந்நாதனை முன்னிட்டதாயிருந்தாலும், அதன் உள்ளீடு ஆத்மநாதனை நோக்கியே செல்கிறது என்பதை அவன் உட்பட யாவ ரும் உணர்ந்துகொள்கிறார்கள். ஆத்மநாதனோ கலக்கத்தி னற் கல்லாகி வாய் பேசா ஊமையாய் அமர்ந்துவிடுகி றான்.

ஜகந்நாதனோ தனது கம்பீரம் சற்றும் குறையாதவ னய், ''அழிந்துகொண்டிருப்பதும். மறக்கப்படவேண்டி யதுமான ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முட்டாள் நானல்ல. இதோ பாருங்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் சிறுவனாய் இருக்கையில் சாதித்திமிர் எனக்கு வழங்

கிய தழும்பு இது'' என்று கூறி தனது சட்டையைத் தூக்கி முதுகைக் காட்டுகிறான். முதுகில் நீண்ட ஒரு பழந் தழும்பு காணப்படுகிறது. ஆத்மநாதன் உட்பட அங் கிருந்த மூவரும் ஜகந்நாதனின் முதுகை வியப்போடு நோக்குகிறார்கள்.

''ஒரு நாள் சைக்கிளிலே தாழ்ந்த சாதிப் பையன் ஒரு வனை ஏற்றிச் சென்றேன் என்பதற்காக என் அப்பா எனக் குத் தந்த தண்டனையின் நினைவுச் சின்னம் இது. அவர் அடித்து முதுகால் ரத்தம் வழிய வழிய அவரின் முன்னா லேயே மீண்டும் அப்பையனைச் சைக்கிளில் ஏற்றிச் சென் றேன். ஆலயப் பிரவேசம், சம பந்திப் போசனங்களில் முன்னின்று உழைத்து, எதிர்ப்புகளைத் தீவிரமாக மேற் கொண்டு அனுபவம் பெற்றவன் நான். இதனால் உங்க ளைப் போலவே என்னையும் ஊரார் தள்ளிவைத்திருக்கி றார்கள். ஆனால், இதற்காக நான் அஞ்சியதுமில்லை, அஞ்சப் போவதுமில்லை'' என்று அவன் திடங்கொண்டு கூறிய பொழுது, ஆத்மநாதன் தன் ஆற்றாமை காரணமாக மனம் நொந்துபோகிறான். அவன் கண்கள் கலங்குகின்றன. அந்த வேளையிலும் அவன் மௌனமாகவே இருக்கிறான்.

''உங்களை நினைக்க எனக்குப் பெருமையாக இருக் கிறது. உள்ளும் புறமும் ஒன்றுபோலவே இருக்கும். நீங் கள் எந்த எதிர்ப்பையும் சமாளிப்பீர்களென்று ஏனோ எனக்கு நம்பத் தோன்றுகிறது. ஏனென்றால் சில நாட்க ளாக நான் என் நம்பிக்கைகளை இழந்து வருகின்றேன். சொல் ஒன்றாகவும், செயல் ஒன்றாகவும் இருப்பவர்களே உலகிற் பலர் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து விட்டேன்'' என்று சீதா வேதனையோடு பெருமூச்சுவிட்ட படி கூறுகிறாள்.

''சீதா!'' ஆத்மநாதன் அலறிவிடுகிறான். மேலும் அவனுக்குப் பொறுக்கவில்லை. ''ஐயா! சீதாவைப் பார்த் தீர்களா? என்னைக் குத்திக்காட்டிக் கிண்டலாகப் பேசுகிறா. நான் அவ்வளவு மோசமானவன் தானா?'' என்று அவன்

விம்மல் பொருமலுடன் செல்வரத்தினத்தை நோக்கிக் கேட்கிருன்.

செல்வரத்தினம் வெறுப்புடன் முகத்தைச் சுழித்தபடி மறுபக்கம் திரும்பிக் கொள்கிருர். சீதாவும் பேசாது தன் வெகுளியையெல்லாம் நெஞ்சுள் அடக்கிக்கொண்டு ஆத்மநாதனை நோக்குகிருள்.

ஜகந்நாதன்தான் இப்பொழுது பேசுகிருன். ''ஆத்மநாதன்! கடந்த நான்கு நாட்களாய் உமது வீடே கதி என்று கிடந்துவிட்டு இன்று எனது வற்புறுத்தலைத் தாளாது நீர் இங்கு வந்திருக்கிறீர். தில்லைநாதன் கூட்டத்திற்கு நீர் பயந்து இங்கு வராமலே இருந்துவிட்டீர்! இலட்சியங்களை அழகாக எழுத்தில் வடித்துவிட்டால் போதுமா? அவற்றைச் செயற்படுத்தத் துணிச்சலில்லாத உம்மை இவர்கள் எப்படி மதிப்பார்கள்?''

ஆத்மநாதன் ஆற்ருமையோடு, ''நான் என்ன செய்வது? உங்களைப்போலச் செயலாற்ற எனக்கும் ஆசைதான். ஆனல் என்னையே நம்பியிருக்கும் என் பெற்ருேர்கள், சகோதர சகோதரிகளை என்னல் உதறியெறிய முடியவில்லையே! உங்கள் சீர்திருத்த முயற்சியில் நானும் கலந்துகொண்டால், என் தந்தையின் கோயிற் பூசைக்கும் குந்தகம் உண்டாகும். அவரும், சித்தியும், குஞ்சு குருமான்களான என் சகோதர சகோதரிகளும் வீடுவாசலற்று, நாதியின்றி நடுத் தெருவில் நிற்கும் நிலையை நான் ஏற்படுத்துவதா?'' என்று அவன் வேதனையின் ஆவேசத்தில் சப்தம் போட்டுப் பேசுகிருன்.

''நொண்டிச் சமாதானங்கள் வேண்டியதில்லை. உமது கோழைத்தனத்திற்கு, குடும்ப பாசம் என்ற திரையை இட்டு மூடிமறைக்கப் பார்க்கிறீர்'' என்று ஜகந்நாதன் கோபத்துடன் கூறுகிருன்.

செல்வரத்தினம் மிகுந்த எரிச்சலுடன், ''ஆத்மநாதன்! எதை உன்னல் செய்யமுடியாதோ அதை எழுத்திலே எழுதிக் காட்ட உனக்கு உரிமையில்லை. இந்த வீட்

டின் ஒவ்வொரு சுவரும், ஏன் ஒவ்வொரு பிடி மண்ணுங் கூட நீ வீராவேசமாகப் பேசிய இலட்சிய வசனங்களை அறியும். அவையெல்லாம் சேர்ந்து உன்னைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பது உனக்குக் கேட்கிறதா?'' என்கிறார்.

சீதாவுக்கு ஆத்மநாதனின் பரிதாபத்தைப் பார்க்க அனுதாபமாக இருக்கிறது. ஆனால் அவள் உள்ளத்தில் அவனுடைய சிம்மாசனம் இன்று சரிந்து மண்ணிலே கிடப்பதை அவளால் உணராமல் இருக்கமுடியவில்லை. அந்த உணர்ச்சி அவளுக்கு வேதனையைத் தரவில்லையென்று கூறமுடியாது. ஆனாலும் அவள் தன் கலக்கத்தை வெளிப்படுத்தாமல், ஆத்மநாதனை விழித்த கண் விழித்து நேர் நின்று நோக்குகிறாள். அந்தப் பார்வையை ஆத்மநாதனால் தாளமுடியவில்லை. சொற்களிலே சிலம்பம் வீசவும், வசன கோபுரங்களை எழுப்பவும் வல்லவனான அந்த 'மாபெரும் எழுத்தாளன்' பேசுவதற்கு வார்த்தை ஒன்றுகூட வராத நிலையில் வீரத்தைக் களத்திலே போட்டு வெறுங் கையனாய் நிற்கிறான்.

''ஆத்மநாதன்! இளமையின் உந்தல்களாலும், உணர்ச்சிக் கிளர்வுகளாலும் வெற்றி லட்சியங்களை அலங்காரமாக எழுதிவிடுவதிலும், பேசிவிடுவதிலும் எவ்வித பயனும் இல்லை. உன்னைப் போன்றவர்கள் எழுத்தாளர் என்றும். பேச்சாளர் என்றும் சொல்வதே அவமானம். உன்னை என் மகன்போல நினைத்து, பாசம்வைத்து என் வழியிலே வளர்த்திட நான் எவ்வளவோ முயன்றேன்; தோற்றுவிட்டேன்'' என்று செல்வரத்தினம் வேதனையோடு சொல்கிறார்.

ஆத்மநாதன் அழுகையை அடக்க முயன்றுகொண்டே ''ஐயா! அப்படிச் சொல்லாதீர்கள். உங்களதும், சீதாவினதும் அன்பை இழந்து என்னால் வாழவே முடியாது. நான் எவரையும் எதையும் துறக்கத் தயார். ஆனால் உங்களை இழந்தால் நான் ஒன்றுமற்றவனாகிவிடுவேன். சீதா! ஐயாவுக்கு எடுத்துச் சொல். இந்த வீட்டின் வாயில்களை

எனக்கு நிரந்தரமாய் முடிவிடாதீர்கள்'' என்று சொல்லும்பொழுது கதறி விடுகிறான்.

அவனின் நிலையைக் காணச் சீதாவிற்கும் கலக்கம் ஏற்படுகிறது. அவனின் பெண்மை, அவளுள்ளே இடக்கும் இலட்சியப் பாறையையும் கரைத்துவிடுமோ என்று அவளுக்கு அச்சம் உண்டாகிறது. அதே வேளையில் தன் பலவீனத்தைக் கண்டு அவள் வெறுப்பும் அடைகிறாள். அவளால் பேசக்கூட முடியவில்லை.

செல்வரத்தினமும் பாசத்தால் இளகிவிடுவார்போல இருக்கிறது. ஆனால் தமது இளமைக்கால வெற்றுணர்ச்சியால், சிவபாக்கியத்தின் வாழ்வை நரகமாக்கிவிட்டதை அவர் நினைத்துக்கொள்கிறார். 'இன்று ஆத்மநாதன் மேற்கொண்ட பற்றுதலால் நான் சற்றே இரங்கிவிட்டால் சிவபாக்கியத்தின் கதையே சீதாவின் கதையும் ஆகிவிடுமோ?' என்று அவர் சந்தேகம் கொள்கிறார். ''இல்லை. அப்படி நடவாது. சீதா, சிவபாக்கியம்போல அல்ல. அவள் எதனையும் உறுதியோடு எதிர்த்து நிற்கப் பயிற்சி பெற்றவள். அன்பு என்ற பெயரால் வெற்றுணர்ச்சிகளை வளர்த்துக்கொண்டு குடும்பம் என்ற வட்டத்துள் வளையவர அவளால் முடியாது. அவள்பற்றி நான் அஞ்சவேண்டியதில்லை; ஆத்மநாதனுக்குக் கடைசியாக ஒரு சந்தர்ப்பம் அளித்துப் பார்ப்போம். சீதாவும் அவனுமாகத் தனிமையிலே பேசி ஒருமுடிவுக்குவரட்டும்' என்று அவர் தீர்மானித்தவராய், ஆத்மநாதன் அருகிலே செல்கிறார். அவனை ஆதரவுடன் கையிலேபற்றி ஆசனத்தில் உட்காரச் செய்கிறார்.

அங்கு சில நிமிடங்கள் மௌனம் ஆட்சி செய்கிறது. செல்வரத்தினம் தொண்டையைச் செருமிக்கொண்டு பேசத் தொடங்குகிறார். எல்லாரும் அவரையே ஆவலோடு பார்க்கிறார்கள். ''ஆத்மநாதா! இன்று நான் உனக்கு ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அது மிகவும் அந்தரங்கமானது. இன்றுவரை சீதாவே அறியாதது. சில நிமிஷங்களே சந்தித்துக் கலந்துரையாடினாலும் ஜகந்நாத

னும் எங்கள் குடும்பத்தில் ஒருவர்போல ஆகிவிட்டார். எனவே அவருக்கும் இது தெரிவதால் நஷ்டமில்லை.''

சற்று நேரம் தமது பேச்சை நிறுத்தி மூவரையும் ஒரு முறை பார்த்துவிட்டு, எங்கோ பார்வையை மேய விட்ட செல்வரத்தினம், தமது ஆசனத்திலிருந்து எழுகிறார். திடீரென்று ஆவேசம் வந்தவர்போல, சுவரில் தொங்கிய சிவபாக்கியத்தின் படத்தருகே சென்று, அதை ஆர்வக் கனிவோடு பார்க்கிறார். அவர் கண்களில் கண்ணீர்த் துளி உருண்டு கீழே விழுவதா, இல்லையா என்று தயங்குகிறது!

''இந்தச் சிவபாக்கியம் எத்தனையோ தியாகத்தை எனக்காகச் செய்திருக்கிறாள். அவள் செய்த தியாகங்களுக்கெல்லாம் சிகரமானது எது தெரியுமா?'' என்று சொல்லிய வண்ணம் சீதாவின் அருகே சென்று அவள் தலை மயிரைக் கோதிய வண்ணம் வார்த்தைகள் தொண்டைக்குள் அடைபட்டுக் குமுற அவளையே நோக்கி நிற்கிறார்.

## 19.

''சீதா! என் அன்புச் செல்வமே! நீ சிவபாக்கியத்தின் வயிற்றிலே பிறந்தவளல்ல'' என்ற வாக்கியத்தைச் செல்வரத்தினம் மிகவும் சிரமத்தோடு சொல்லிமுடித்த பொழுது, சீதாவும், ஆத்மநாதனும் 'ஆ!' வென்று வாயைப் பிளந்து ஆச்சரியத்தோடும், திகைப்போடும், பயங்கர எதிர்பார்ப்போடும் செல்வரத்தினத்தையே பார்க்கின்றனர். ஆத்மநாதன் சீதாவின் கதையைச் சுருக்கமாகச் சொல்லியிருந்தபடியால் ஜகந்நாதனும் வியப்படைந்து, வாயடைத்திருக்கிறான்.

''சீதா, நான் அழைத்துவந்து வீட்டில் வைத்திருந்த மலாய்ப் பெண்ணின் வயிற்றிலே பிறந்தவள். ஆனால் எனக்காக, என் நிம்மதிக்காக, என் அன்பிற்காக ஏங்கிய என் சிவபாக்கியம், சீதா தன் சக்களத்தியின் மகளாக இருந்த போதிலும் தன் மகளாய், தன் உயிராய், தன் எல்லாமுமாய் வளர்த்தாள். தன் குழந்தைக்கெனச் சுரந்த பாலை அளித்து, தன் உதிரத்தால் சீதாவை வளர்த்தாள்.''

''உங்களால் இதை நம்புவது முடியாமலிருக்கலாம். எவளால் தன் வாழ்க்கையின் நிம்மதியெல்லாம் குலைந்ததோ, அவளின் அந்தப் பகையாளியின் குழந்தையே தன் உலகம் என்று வாழ்ந்த ஒருத்தியை இந்த உலகம் மிக அபூர்வமாகவே கண்டிருக்கும். இல்லையா?''- மேலே பேசமுடியாமல் செல்வரத்தினம் சோர்ந்து தளர்ந்து போய்த் தனது ஆசனத்தில் வந்து அமர்கிறார். 'அம்மா!' என்று இதயத்தையே பிளக்கும் குரலில் அலறிய வண்ணம் சீதா சென்று தாயாயிருந்து தெய்வமாகிவிட்ட சிவபாக்கியத்தின் படத்தினைப் பற்றி நின்று கண்ணீர்விட்டுக் கதறுகிறாள்.

அவளின் புலம்பல் அடங்கும்வரை பயங்கர மௌனம் அந்த இடத்தில் ஆட்சி செலுத்துகிறது. செல்வரத்தினம் தொடர்கிறார்: ''இந்த உண்மையை நான் என் வாழ்வு முடியும்வரை மறைத்தே வைத்திருக்கலாம். ஆனால் இதை நான் வெளியிட்டதற்கு நியாயமான ஒரு காரணம் உண்டு. ஆத்மநாதன்! தணிப்பண்ட என் ஒருவன் மீது சிவபாக்கியம் கொண்டிருந்த அளவிட முடியாத அன்பினாலும், நன்றியுணர்வாலும் இத்தகைய மாபெரும் தியாகத்தினை அவள் செய்தாள். இதனால் அவள் அடைந்த பயன் என்ன? ஏறக்குறைய என் வாழ்நாளில் முக்காற்பங்கு மிருக நிலையிலேயே கழிந்தது. அவளின் விட்டுக்கொடுத்தற் குணத்தினால் நான் மேலும் மேலும் துணிவைப் பெற்று அவளைக் கொடுமைப்படுத்தினேன். உற்றார் உறவினரைத் துறந்து, இன்ப வாழ்வையும் இழந்து, ஏளனக் கண்கள் சூழவர

நோக்க அவள் அடைந்த மகிழ்ச்சிதான் என்ன? எனக்கு இன்றுவரை இது புதிராகவே இருக்கிறது. இந்த நிலையில் எனது மகளின் வாழ்க்கையும் எனது கதையைத் திருப்பிப் படிப்பதாய் அமையக்கூடாது பார். நிலையில்லாத உன் மனச் சலனங்களுக்குச் சீதா இரையாவதை நான் விரும்பவில்லை. உன் ஒருவனின் நலன்களுக்கு என் மகள் பணயமாகக் கூடாது. சமூக சேவையில் அவளை ஈடுபடுத்துவதே என் எண்ணம். அந்தப் புனிதப் பணியில் அவள் உயிரை விடுவதையும் நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன். ஆனால் சுயநலம் நிறைந்த உனக்கு அவள் பலியாவதை என்னால் சகிக்க முடியாது. உம்...சீதாவின் எண்ணமும் அதுவாகவே இருக்கும்.... என்றாலும் அவளின் வாழ்க்கை அவள் கையிலேதான். அவளின் தீர்மானத்திற்கு எதிராக நான் நடந்துகொள்ளமாட்டேன்! எதற்கும் நீங்கள் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். நானும் ஜகந்நாதனும் அதுவரை வெளியே போய் வருகிறோம். ஜகந்நாதன்! வாருங்கள் போவோம்.''

செல்வரத்தினம் எழுந்து வெளியில் நடக்கிறார். ஜகந்நாதனும் சிந்தனையோடு அவரைத் தொடர்கிறான்.

★

சீதா, சிவபாக்கியத்தின் படத்தருகே இருந்து கால்களைக் கைகளால் கட்டியவண்ணம் தலை கவிழ்ந்து இருக்கிறாள். கண்ணீர் வற்றி வரண்டுவிட, நெஞ்சின் பாரம் நிலையாக நின்று நோவை அளிக்க அவள் ஒன்றும்பேசாது சித்திரப் பாவை போல அமர்ந்திருப்பதைக் காண ஆத்மநாதனால் சகிக்கக்கூடவில்லை.

அவன் எழுந்துசென்று சீதாவின் முகத்தை நிமிர்த்திக் கனிவோடு அவளைப் பார்க்கிறான். அந்த வேளையில் அவளுக்கு, அவனது அன்போ ஆதரவோ வேண்டியிருக்கவில்லை. அவள் வெறுப்போடு அவன் கையைத் தட்டிவிட்டு எழுந்திருக்கிறாள்.

ஆத்மநாதன் அவளின் தோள்களிலே கையைவைத்து "சீதா! உன் தாய் தெய்வம்தான். அவளின் கால் தூசிக் குக்கூட நாங்கள் ஈடாக மாட்டோம்" என்கிறான்.

சீதா ஏளனமாகச் சிரித்தபடி, "கதைக்கு நல்ல கரு கிடைத்துவிட்டதாக்கும். நெஞ்சில் நிறைந்தவள் போல நெஞ்சில் தெய்வமானவள் என்று கதை கட்டப் போகி றீர்கள். அவ்வளவுதானே! விடுங்கள்" என்று அவனின் உள்ளத்தைக் குத்துகிறாள்.

ஆத்மநாதனுக்குச் சூழ்நிலை மறந்துவிடுகிறது. "சீதா நெஞ்சில் நிறைந்தவள்கதை வாசித்தாயா? அதை வாசித்த பின்புமா உன் மனம் இரங்கவில்லை. சீதா என்னை உனக்கு நன்கு தெரியும். நான் ஒரு தொட்டாற் சுருங்கி. எனது வாழ்க்கையை அரண்செய்து பாதுகாக்க உன்னால் மட் டுமே முடியும். சீதா! என்னைக் கைவிட்டு விடாதே" என்று அவன் மன்றாடுகிறான்.

சீதாவுக்குக் கோபம் கோபமாக வருகிறது.

"இப்படிப்பேச உங்களுக்கு வெட்கமாயில்லை. எப் பொழுதுமே நான் எனது என்று உங்களைப் பற்றியே சிந் திக்கிறீர்களேயல்லாமல், நாம், உலகம் என்று சிந்திக்கி றீர்களில்லையே."

ஆத்மநாதன் கூசி நின்று, "சீதா! எனது நானில் நீயும் கலந்துவிட்டாய் என்பது உனக்குத் தெரியாதா? இன்று எனது உலகம் என்னோடும், உன்னோடும் மட்டுமே யுள்ள ஒன்றாய்க் குறுகிப்போய்விட்டது சீதா. இதற்கு அப் பால் என்னால் சிந்திக்கவே முடிவதில்லை."

சீதாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "சற்றுமுன் உங்கள் அப்பாவிற்காகவும், சித்திக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் வாழப் போகிறேன் என்றீர்கள். அவர்கள் உங்களையே நம்பியிருந்தால் அவர்களுக்காக உங்கள் இலட்சியங்களையே தியாகம் செய்வதாய்ப் பறை அடித்தீர்கள். இப்பொழுது சீதா உனக்காகவே உயிர் வாழ்வேன் என்கிறீர்கள். இதெல்லாம் என்ன?" சிரிப்பில்

தொடங்கிய சீதாவின் பேச்சு சீற்றத்தில் முடிவடை கிறது.

ஆத்மநாதன் இதை எதிர்பார்க்கவில்லை. கணத்துக்குக் கணம் மாற்றமடையும் தன்னிலே முதல் தடவையாக வெறுப்பு ஏற்படுகிறது அவனுக்கு.

''மன்னித்துக்கொள் சீதா! நான் இப்பொழுது சொன்னதுதான் உண்மை. நீ இல்லாமல் இந்த உலக வாழ்க்கையையே என்னுல் சிந்திக்க முடியவில்லை'' என்கிருன் அவன்.

சீதா தீர்மானமாக, ''உங்களுக்கு நான் மட்டுமே உலகமாக இருக்கலாம். ஆனுல், எனக்கோ உங்களுக்கு அப்பாலும் ஓர் உலகம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள், பாட்டாளிகள், அநாதைகள், அபலைகள் என்னைப் போன்ற சாதிகெட்ட சண்டாளர்கள் என்று எத்தனையோ ஜீவன்களோடு எனக்கு அன்புப் பிணைப்பு ஏற்பட்டுள்ளது. உங்கள் ஒருவருக்காக அத்தனை பேரையும், நான் இழக்கத் தயாராயில்லை'' என்று சொல்கிருள்.

ஆத்மநாதனின் தலையிலே பேரிடி வீழ்ந்தது போல இருக்கிறது. ''சீதா! நீ ஓர் அபூர்வ பிராணி. புனிதமான காதலுக்காக உலகையே துறந்தவர்களின் கதைதான் எனக்குத் தெரியும். இன்று அந்தக் கதையை நீ தலைகீழாகப் புரட்டுகிருய். ஆனுல்... உன்னை மறக்க, வெறுக்க என்னுல் முடியவில்லையே. என்ன செய்வேன்?'' என்று அவன் தன் ஆற்ருமையால் புலம்பிக்கொண்டே போகிருன்.

சீதா சடுதியில் அவன் கைகளை இறுகப் பற்றியவண்ணம், ''நிறுத்துங்கள் உங்கள் புலம்பலை. நீங்கள் கேட்பது போல நான் உங்களை என் காதலனுக கணவனுகவே ஏற்றுக்கொள்கிறேன். ஆனுல், ஒரு நிபந்தனை. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறுகிருள்.

ஆத்மநாதன் முகமெல்லாம் மலர்ச்சியாக, ''நீ என் அன்பை ஏற்று என்னுடையவளாவது உண்மையானுல்

ஒரு நிபந்தனை என்ன? ஓராயிரம் நிபந்தனைகளைப்போடு. அவற்றை ஏற்றுச் செயற்படுத்துகிறேன்'' என்றான்.

''நான் செல்வரத்தினத்தின் வைப்பாட்டியான மலாய்ப் பெண்ணுக்குப் பிறந்தவள். இது மறைக்கப்பட்டிருந்தாலும், இன்று வெளிப்பட்டுவிட்டது. இந்த உண்மை உங்களையும், என்னையும் அறிந்த அனைவருக்கும் பகிரங்கமாக்கப்பட வேண்டும். சிவபாக்கியம் எனது வளர்ப்புத் தாய் மட்டுமே என்பதை இந்த ஊரார் அறியவேண்டும். அதன்பின்னர்தான் நீங்கள் என்னவர் ஆகலாம். இந்த நிபந்தனைக்கு உங்களால் இணங்க முடியுமா?'' என்று சீதா உறுதியாகக் கேட்கிறாள்.

ஆத்மநாதன் திடுக்கிடுகிறான். ''இது என்ன நிபந்தனை சீதா? உன் பிறப்பு இரகசியத்தை வெளிப்படுத்துவதால் இன்னும் நீ கேவலப்படுத்தப்படுவாயல்லாமல் இதனால் என்ன லாபம்? யாராவது தன்னைத்தானே அவமானப்படுத்திக்கொள்ள முன்வருவார்களா? மூட்டாள்தனமாகப் பேசுகிறாயே!''

சீதா விழிகளில் நெருப்புக்கனல, ஆத்மநாதனை நோக்கி, ''புனிதமானதொரு உண்மையை, என் தாய்பற்றிய உண்மையை நான் மறைத்துக்கொண்டு உலகத்தின் முன் உயர்ந்தவளாய் நடிக்கவேண்டும். நீங்களும் ஏதோ தியாகம் செய்வது போல் என்னை மணக்க வேண்டும். என்னிலுள்ள ஆசையெல்லாம் தீர்ந்த பின்பு ஒரு நாள் என்னைப் பார்த்து, ''சீதா! நீ கேவலம் வைப்பாட்டிக்குப் பிறந்த அநாதைச் சிறுக்கி. அப்படியிருக்கவும் நான் உன்னை மணம் செய்துகொண்டேன். குலத்தளவே யாகும் குணம்" என்பதைக் காட்டிவிட்டாயே!'' என்று நீங்கள் சீறவேண்டும். நான் அதையும் பொறுத்துக்கொண்டு உங்கள் காலடியே தஞ்சமென்று கிடக்க வேண்டும். அப்படித்தானே!'' என்று கேட்கிறாள்.

ஆத்மநாதன் மலைத்து மரமாய் நிற்கிறான். சீதா தன் சீற்றம் குறையாதவளாய், ''மிஸ்டர் ஆத்மநாதன்,

உண்மைகளை மறைத்து, பொய்யின்மீது எனது எதிர் காலத்தைக் கட்டியமைத்து இன்பபுரியில் உலாவுவதிலும், வாழ்நாள் முழுவதும் பிரமசாரிணியாக இருந்து உலகத்திற்குத் தொண்டு செய்வதே மேல். இதுதான் என் முடிவு. நீங்கள் காதலைப்பற்றிக் காவியங்கள் எழுதிக் கொண்டிருக்கத்தான் லாயக்கு. உண்மையான வாழ்விற்கும், உங்களுக்கும் வெகுதூரம். சென்றுவாருங்கள். சீதா என்ற ஒருத்தி உங்கள் வாழ்க்கையிலே குறுக்கிட்டாள் என்பதையே மறந்துவிடுங்கள்'' என்று உறுதியின் உச்ச நிலையிலே கூறிவிட்டுத் திரும்பியும் பாராமல் உள்ளே செல்கிருள்.

''சீதா! சீதா! நான் சொல்வதைக் கேள். இந்தப் பயங்கர சோதனை வேண்டாம். என்னுடன் வா! வந்து விடு. நாங்கள் கொழும்பிலே சென்று வாழ்க்கை நடத்துவோம். இந்த ஊராரின் நச்சுக் கண்களிலிருந்து தப்பி, இலட்சியக் காதலுலகில் சிட்டுக் குருவிகள் போலப் பறப்போம். சீதா! சீதா!'' என்று கதறிக்கொண்டு ஆத்மநாதன் கதவிலே சென்று படபடவென்று தட்டுகிருன்.

''உங்களையே நம்பியிருக்கும் உங்கள் குடும்பத்தினரை நீங்கள் துறக்கலாம். என் தாய் கண்ணே போல் காப்பாற்றிவந்த என் தந்தையை என்னல்துறக்க முடியாது. அவர்காட்டும் பாதையில்தான் நான் செல்வேன். அதுதான் என் லட்சியம். நீங்கள் போகலாம்.'' சீதாவின் வார்த்தைகள் நான்கு சுவர்களையும் தாண்டி வந்து ஆத்மநாதனின் செவிப்பறைகளைத் தாக்குகின்றன.

சீதாவின் பிடிவாதம் ஆத்மநாதனுக்குத் தெரியும்.

அவன் வேதனையோடு தலை குனிந்து வெளியே வந்து வீட்டை நோக்கி நடக்கிருன்.

ஜகந்நாதன் அவனைக் கூப்பிட்ட குரல் அவனுக்குக் கேட்கவேயில்லை.

ஈழத்தில் இலக்கியப் புரட்சியை ஏற்படுத்திய வீரகேசரி பிரசுரங்களைப் படிக்கிறீர்களா?

# நெஞ்சைவிட்டகலா எழுத்தோவியங்கள்!

* **தூரத்துப் பச்சை**
  எழுதியவர்:
  கோகிலம் சுப்பையா
  விலை ரூ. 3-40

* **காலங்கள்சாவதில்லை**
  எழுதியவர்:
  தெளிவத்தை ஜோசப்
  விலை ரூ. 3-90

* **காகித ஓடம்**
  எழுதியவர்:
  கே.எஸ்.ஆனந்தன்
  விலை ரூ. 3-40

* **தாரிணி**
  எழுதியவர்:
  ரஜனி
  விலை ரூ. 4-90

* **ஆஷா**
  எழுதியவர்:
  ரஜனி
  விலை ரூ. 3-90

* **உலகங்கள் வெல்லப்படுகின்றன**
  (சிறுகதைத் தொகுதி)
  எழுதியவர்: கே. டானியல்
  விலை ரூ. 3-60

வீரகேசரி பிரசுரங்களைப் படிப்பதுடன் இலக்கியப் போட்டிகளிலும் பங்குபற்றி ரொக்கப் பரிசுகளை நீங்கள் வெல்லலாம்!

117002

...HY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

பு. வை!

9/4/86 புதன் A044

12/07/80 திரவி A047

25/6/86 சிதன் A067

17/12/86 புதன் ~~E002~~ A035 19/12

1/11/ சதி ஜெயசி M01a

வெள்ளி விழா
எழுத்தாளர்

## சொக்கன்



"பெண் குலத்தில் உதித்த தியாகத்தின் திருவுருவம்--அந்த அன்னை. கணவனின் அன்புக்காக ஏங்கிய அந்த அபலை. தன் மகவுக்கென சுரந்த பாலை தன் சக்களத்தியின் குழந்தைக்கு அளித்து, தன் உதிரத்தால் சீதாவை வளர்த்தாள்-"

வீரகேசரி பிரசுரம்: குடும்ப நாவல்